# கொடை மன்னர்

(உரை நடை)

ஆசிரியர் :
வித்துவான், பெ. கோவிந்தமுப்பனார்,
தலைமைத் தமிழாசிரியர்
சேவகப் பாண்டியன் போர்டு உயர்நிலைப் பள்ளி,
இராஜபாளையம்

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ் :: திருநெல்வேலி
&
9, பிலிப்ஸ் தெரு, சென்னை-1.

காபிரைட்]

[விலை 1—14—0

முதற் பதிப்பு: 1947

Printed at the Rajan Electric Press, Madras
For S. R. S. Tny. Q. H. No. 1 C. 500-12-'47.

# முகவுரை

கொடைமன்னர் எழுவரும் பண்டைய தமிழ்நாட்டிற் பிறந்து புகழிற் சிறப்புற்று விளங்கிய வள்ளல்களாவார்கள். இவர்கள் வரலாறுகள் தமிழ்நாட்டரசியலோடும் தமிழர்களோடும், தமிழ் மொழியினோடும் மிகுந்த தொடர்புடையனவாம். இவ்வள்ளல்கள் எழுவருடைய வரலாறுகளும் காப்பியச் சுவைகள் சிறந்து விளங்கும்படி என்னால் செய்யுளில் பாடப்பட்டிருக்கின்றன. அவை கொடைமன்னர் என்ற பெயர் பூண்டு அண்மையில் வெளிவரும். அந்நூலின் சுருக்கமாக இந்நூல் உரை நடையில் இப்பொழுது வெளியிடப்படுகிறது. வள்ளல்களுடைய வரலாறுகளுக் கிடையில், செய்யுள் நூலிற் சேர்க்கப்பட்டிருக்கும் இயற்கை வருணனைகளும், இல்லறவியல், அரசியல், அவற்றின் பிரிவுகளாகிய போர், கொடை, புலமை, இசை, தெய்வ வழிபாடு, தொழில் முதலிய தமிழர் சிறப்பியல்புகளும் இவ்வுரை நடை நூலிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வரலாறுகளைக் கூறிச் செல்லுமிடங்களில் அவ் வரலாறுகளோடு தொடர்புடைய புறநானூற்றுச் செய்யுள்களும், அவற்றின் கருத்து விளக்கங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பண்டைப் புலவர்களுடைய புலமைகளையும், எண்ணங்களையும், அரசர்களுடைய தமிழ் மொழி ஆதரவுகளையும் விளக்குதலோடு காப்பியங்களிலும் புறநானூறு முதலிய சங்க நூல்களிலும் மாணவர்களுக்குப்பற்றை உண்டாக்கி அவற்றைக் கற்கும் அவாவையும் ஏற்படுத்துமென்று எண்ணுகிறேன்.

பெ. கோவிந்தமுப்பனர்.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | கொடை மன்னர் மாண்பு (நான்முகம்) | 7 - 16 |
| 1. | வள்ளல் பாரி | 17 - 43 |
| 2. | வள்ளல் பேகன் | 44 - 67 |
| 3. | வள்ளல் ஆய் | 68 - 86 |
| 4. | வள்ளல் நள்ளி | 87 - 95 |
| 5. | வள்ளல் ஓரி | 96 - 109 |
| 6. | வள்ளல் காரி | 110 - 117 |
| 7. | வள்ளல் அதியமான் | 118 - 162 |

# கொடை மன்னர் மாண்பு

## தமிழ்த் தெய்வ வணக்கம்

*தேனினு மினிய தீஞ்சொல்*
*செய்யவாய் திறந்து பேசி*
*நானிலம் புகழும் பாடல்*
*யாமொடும் நன்கு பாடிக்*
*கானிலந் தொடநின் றுடும்*
*செந்தமிழ்க் கன்னி தன்னை*
*ஊனிறை உறுப்பால் நெஞ்சால்*
*உயிரினல் வணங்கு வேமால்*

வானினிடத்தே உலாவும் முகில் துளிகளையுடைய மழையைப் பொழிவதால், கார்காலத்திலும் வறண்ட வேனிற்காலத்திலும் பல் வகைப் பயிர்களையும் வெற்றிடம் சிறிதுமின்றிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானில மெங்கும் வளர்ப்பது தமிழ் நாடாகும். அந்நாடு, சேய்கள் இருக்கும் இடத்தை நாடிச் சென்று பாலூட்டி வளர்க்கும் செவிலித் தாயாரைப் போன்று பயிர்கள் நிற்கும் இடந் தேடிச் சென்று அவற்றை வளர்க்கும் காவிரி முதலிய ஆறுகளையுடையது. உண்டு உண்டு அழித்தாலும் ஒழிவுறாத உணவுகளையும், கண்டு கண்டு நீங்கினலும் கண்டு முடிவுறாத காட்சிகளையும், தமக்கு வேண்டுவனவற்றைக் கொண்டு கொண்டு, மேலும் மனம் நிறைவுறாமல், இன்னும் கொடு என்று அடையும் மக்களுக்கு இன்னும் இருக்கின்றன என்று தருகின்ற பல வகை இயற்கை வளங்களையும் உடையது. உலகத்திலே தோன்றிய மொழிகள்

அனைத்திற்கும் முன்னால் தோன்றியும், வடமொழிக்கு அறிவுநூல்களைப் புகட்டியும், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளைப் பெற்றெடுத்தும், புகழ் பெற்று விளங்கும் தமிழ் மொழியைத் தன்னகத்தேயுடையது. வடக்கில் வேங்கட மலையையும் ஏனைத் திசைகளில் கடத்தற் கரிய கடல்களையும் அரணாக உடையது. தன்னை நோக்கி வரும் பகைவர்களை வென்றடக்கும் பல அரசர்களையுடையது. குன்றனைய கொடி மாடங்களையுடைய தெருக்களைக்கொண்ட அரசர்கள் வீற்றிருக்கும் தலைநகரங்களையும், வேறு பல ஊர்களையும், நல்லறங்களைச் செய்யும் குடிகளையும் உடையது. பிறப்பினால் உயர்வில்லை; அறிவினாலே உயர்வு உண்டு என்னும் அறிஞரை உடையது.

அத்தகைய தமிழ் நாட்டில் பெருஞ்சித்திரனார் முதலிய பல புலவர்கள் வாழ்ந்து வந்தார்கள். பெருஞ்சித்திரனார் சோழ நாட்டிலுள்ள ஆவூரிற் பிறந்தவர். மூலங்கிழாருடைய புதல்வர். தம் மனதிற்கினிய மங்கையை மணந்து பல புதல்வர்களைப்பெற்றெடுத்து மகிழ்ந்தார். தாம் ஈட்டும் பொருள் தம் வாழ்க்கைக்குப் போதுமானதாயில்லை. தம் தந்தையார் ஈட்டி வைத்திருந்த பொருள்களையும் செலவு செய்து காலங் கழித்தார். பக்கத்திலுள்ள பலரிடத்தும் பல பொருள்களைக் கடன் வாங்கிச் செலவு செய்தார். நாளுக்கு நாள் புலவர் நல்குரவினால் நலிவு எய்தலானார்.

பெருஞ்சித்திரனாருடைய தாயார் மூப்பினால் தளர்ச்சி யடைந்தவள். முதுகு கூனியவள். கோலூன்றி நடந்து செல்பவள். மூப்பின் தளர்ச்சி

யாலும் வறுமையின் வருத்தத்தினலும் தன் உயிரைக் கொண்டு செல்லாத காலனை ஒருபக்கம் வைது கொண்டிருப்பாள். அவருடைய மனைவி அழுக்கேறிய உடையை உடையாள். தானியம் இல்லாமையினல் நிலத்தில் முளைத்திருக்கும் கீரைகளைக் கொய்து சமைத்துப் பிள்ளைகளுக்கும் கணவருக்கும் ஊட்டிப் பசியினல் ஒருபக்கம் வருந்திக் கொண்டிருப்பாள். கைக்குழந்தை உண்ணுவதற்குப் பாலில்லாமலும் வேறு குழந்தைகள் கஞ்சி யில்லாமலும் தாயின்மேல் விழுந்து அழுது கொண்டிருப்பார்கள். புலவரும் உடலின் தளர்ச்சியாலும் உள்ளக் கவலையாலும் துன் புற்று வாழ்ந்தார்.

பெருஞ்சித்திரனர் வேறு புலவர்களைப் போலத் தம் வறுமைப் பிணியை நீக்க எண்ணினர். எண்ணி வள்ளல், அதியமான் நெடுமான் அஞ்சியை அடைந்தார். அவன் கொடுத்த பொன்னைக்கொண்டு வந்து தம் தாயார் முதலியோர்களை ஊட்டி வளர்த் தார். வெளிமான் என்னும் சிற்றரசனிடம் சென்ருர். புலவர் சென்றகாலத்தில் அவன் உயிர் நீங்கும் நிலையி லிருந்தான். அவன் தன் தம்பி இளவெளிமானை அழைத் துப் புலவருக்குப் பொருள்கொடு என்றுகூறி இறந்து போனன். இளவெளிமான் புலவருக்குச் சிறிது வழங்கி யதனல், அதனைப் பெற்றுக்கொள்ளாமல், அவ் விடத்தை விட்டகன்று முதிரமலைக்குத் தலைவனகிய குமணன் என்னும் வள்ளலை அடைந்தார். அடைந்து, "முதிரமலைத் தலைவ! குமண! பறம்பு மலைக்கு வேந் தனகிய பாரியும், உயர்ந்த உச்சியையுடைய கொல்லி

மலையை யாண்ட வலிய வில்லையுடைய ஓரியும், காரி யென்னும் பெயரையுடைய குதிரையைச் செலுத்திய பெரிய பூசலை வென்ற மாரிபோலும் வண்மையையும் மிக்க போரினையுமுடைய மலையனும், செலுத்தப்படாத உயர்ந்த குதிரை யென்னும் மலையையும் கூரிய வேலையும் கூவிளங்கண்ணியையும் வளைந்த ஆரத்தையு முடைய எழினி அதியமானும், மிகக் குளிர்ந்த மலையின் கண் இருள் செறிந்த பெரியமுழையினையும் மலைத்தற்கரிய வலியினையுமுடைய தெய்வங்காக்கும் உயர்ந்த சிகரங்களையுடைய பெரியமலை நாடனாகிய பேகனும் திருந்திய சொல்லையுடைய மோசியென்னும் புலவனாற் பாடப்பட்ட ஆயும், ஆசைப்பட்டுத் தன்னை நினைந்து வருவாருடைய வறுமையை மிகவும் நீங்கத் தவிராது கொடுக்கும் கூறுபாடமைந்த வண்மையினையுடைய பகைவரைத் துரத்திய நள்ளியும் என்று சொல்லப்பட்ட எழுவரும் இறந்தபின்பு கண்டார்க்கு இரக்கம் வரும் படி பாடி வருவாரும் பிறருங்கூடி இரந்தோரது துன்பத்தைத் தீர்க்கக் கடவேன் யான் என்று நீ இருத்தலால் விரைந்து இவ்விடத்தே பரிசில் பெற நினைந்து வந்தேன் யான்'' என்னும் பொருள்பட,

"முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வண்ண நெடுவரைக்
கறங்கு வெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வி லோரியும்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனும்

ஊரா தேந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்
ஈர்ந்தண் சிலம்பின் இருள் தூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும் திருந்துமொழி
மோசி பாடிய ஆயும் ஆர்வ முற்று
உள்ளி வருநர் உலைவுநனி திரத்
தள்ளா தீயும் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியும் எனவாங்கு
எழுவர் மாய்ந்த பின்றை அழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே" புறம் - 158

என்ற பாடலைப் பாடினர்.

மேலும், புலவர் தம் வறுமையின் நிலையைத் தெரிவிக்க எண்ணி "எனது வீடு உண்ணப்படும் உணவுகளை இழந்திருந்தலின் அவ்வீட்டை யிகழ்ந்து, உறைகின்ற புல்லிய உளை மயிர் போலும் குடுமியையுடைய புதல்வன் பலபடியும் கூழையுஞ் சோற்றையும் வேண்டிமுடுகி முறை முறையே உள்ளொன்றில்லாத வறிய அடுகலத்தைத் திறந்து அங்கு ஒன்றுங்காணாது அழ, அதனைப் பார்த்து மறத்தையுடைய புலியின் வரவு சொல்லி அச்சமுறுத்தியும், அம்புலியைக்காட்டியும் அவற்றால் அவன் அழுகையைத் தணிக்க முடியாமையின், வருந்தினவளாய் நின் பிதாவை நினைந்து வெறுத்த நின் செவ்வியைக் காட்டெனச் சொல்லிக் கேட்டால் அமையாளாய் மிகுதிப் பட நனவின்

கண்ணும் துயர முறும் என் மனைவி செல்வத்தில் சிறந்து விளங்கும்படி தொலையாத செல்வத்தை மிகுதியாய் விரையப் பரிசில் தந்து விடுத்தலை விரும்புவேன் யான். ஒலிக்கும் திரையை யுடைய நீரால் சூழப்பட்ட நில வெல்லையிலே ஓங்க நினது சீர்மை பொருந்திய சிறந்த புகழைப் பலவாக வாழ்த்துவேம்'' என்னும் பொருள்பட,

இல்லுணாத் துறத்தலின் இல்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லானா ளாகி நனவின்
அல்ல லுழப் போள் மல்லல் திறப்பச்
செல்லாச் செல்வம் மிகுத்தனை வல்லே
விடுதல் வேண்டுவல த்தை படுதிரை
நீர்சூழ் நிலவரை யுயர நின்
சீர் கெழு விழுப்புகழ் ஏத்துகம் பலவே புறம் - 160

என்று பாடித் தெரிவித்தார்.

குமணன் சொல்நயமிகுந்த அவருடைய பாடலைக் கேட்டு மகிழ்ந்து, அவரைத் தன் அருகிருத்தி உண வருத்தி உபசரித்தான். பின்பு புலவருக்குப் பொன்னும் பூணும் உடையும் அவருள்ளம் உவக்கக் கொடுத்து, அவர் செம்மாந்து செல்லுமாறு பெரிய யானையும் கொடுத்தான்.

பெருஞ்சித்திரனர் குமணன் கொடுத்த பரிசில் களைப் பேருவகையோடு பெற்று அவனிடம் விடை கொண்டு அவன் கொடுத்த யானைமீதிவர்ந்து செம் மாந்து தம்மூருக்கு மீண்டார். மீளும் வழியில், தமக் குச் சிறிது பொருள் கொடுத்துத் தக்கவாறு தம்மை உபசரியாத இளையவெளிமானாரை அடைந்து யானை யினின்றும் இறங்கி, அவ்யானையை அவனுடைய காவல்மரத்தில் கட்டி, அவனுறையும் அரண்மனையுட் சென்று, அவனைக்கண்டு,"இரப்போர்க்கு ஈந்து பாது காப்பாய் நீயும் அல்லை; புரப்போர் இரப்போர்க்கு இல்லையும் அல்லர்; இனி இரப்போர் உண்டாதலை யும் காண்பாயாக; இனி இரப்போர்க்கு இடுவோர் உண்டாதலையும் காண்பாயாக; நின்னுடைய ஊரின் கண் காவலையுடைய மரம் வருந்தக் கொண்டு வந்து யாம் கட்டிய உயர்ந்த நல்ல இலக்கணமுடைய யானை எமது பரிசில்; விரைந்த செலவினையுடைய குதிரை யையுடைய தலைவ! இனியான் போவல் என்னும் பொருள்பட,

இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க் கில்லையும் அல்லர்
இரவலர் உண்மையுங் காண் இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங் காண் இனிநின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே. புறம் - 162

என்னும் பாடலைப்பாடி யானையை அவ்விடத்தில் விட்டு விட்டுக் குமணன் கொடுத்தபொருள்களோடு தம்மூரை அடைந்தார்.

தம் தந்தையார் பரிசில் பெற்று மீண்டதை அறிந்த அவருடைய மக்களும் அவருடைய மனைவி யாரும் அவரை வரவேற்றுச்சூழ்ந்திருந்தார்கள். தாம் கொண்டுவந்த பொருள்களை அவர்களுக்குக் காட்டி வள்ளல் குமணனுடைய கொடையையும் குணங்களை யும் அவர்களுக்குப் புகழ்ந்து கூறினர். பின்பு "நின் னைக் காதலித் துறையும் நின் சார்வாய மகளிர்க்கும், நீ அன்பு செய்து ஒழுகப்பட்ட மகளிர்க்கும், பல குணங்களும் மாட்சிமைப் பட்ட கற்பினையுடைய நினது சுற்றத்து மூத்த மகளிர்க்கும், நமது சுற்றத்தி னது மிக்க பசி நீங்க நினக்கு நெடுநாட்படக் குறித்த எதிர்ப்பை தந்தோர்க்கும், மற்றும் இன்ன தன்மை யார் என்று கருதாது, என்னேடு கூடி உசாவுவதுஞ் செய்யாது, சதுரப்படக் குடிவாழ்க்கை வாழக்கடவே மென்று கருதாது, பாலாப்பழம் முதலாயின தூங் கும் முதிரமென்னும் மலைக்குத் தலைவனாகிய திருந்திய வேலையுடைய குமணன் நல்கிய செல்வத்தை நீயும் யாவர்க்கும் வழங்குவாயாக" என்னும் பொருள்பட,

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னது என்னெடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கியவளனே. புறம் - 163

என்னும் பாடலைப்பாடித் தாம்கொண்டு வந்த பல பொருள்களையும் பலருக்கும் கொடுக்கும்படி தம் மனைவிக்குக் கட்டளையிட்டார். புலவர் தம் வறுமை நீங்கப் பெற்றுத் தாமும் தம் இனத்தாரும் உண்டு, பிறர்க்கும் கொடுத்து, நல்லறம் செய்து வாழ்ந்தார். அப்புலவர் பெருமான் வள்ளல் குமணனிடம் புகழ்ந்து கூறிய முறையில் வள்ளல்கள் எழுவருடைய வாழ்க்கைகளும் இந்நூலில் விரித்துக் கூறப்படுகின்றன.

# 1. வள்ளல் பாரி

மலர் புனைந்த கூந்தலையுடைய மங்கையர்களும், ஆண்மையிற் சிறந்த ஆடவர்களும், அரசனும், அற நூல் கூறும் அறநெறிகளில் ஒழுகுதலால் உலகத்தில் பெய்யினும், பெய்யாவிடினும் மழைபெய்து வளம் பெறுவது பறம்பு நாடாகும். அந்நாட்டில் கனிகளையும் காய்களையும் தாங்கி மரங்கள் சோலைகளில் நிற்கும். செடிகளும், கொடிகளும் மலர்களைச் சுமந்து மணம் விரித்து நிற்கும். தினையும் வரகும் இறுங்கும் விளைந்து இடங்கள் தோறும் காணப்படும். பறவைகளும் விலங்குகளும் அவற்றை உண்டு திரியும். பறம்புமலை அந்நாட்டினுக்கு அரணாக விளங்கி அருவி நீரால் வெதிர் நெல்லையும், வள்ளிக் கிழங்குகளையும், பலாமரங்களையும் உண்டாக்கும்.

பறம்பு நாட்டில் பழங்குடியினர் வாழும் முந்நூறு ஊர்கள் உண்டு. அப்பழங்குடியினர்பல நூல்களையும் கற்றறிந்தவர்கள். செல்வம் மிகவுடையவர்கள். இல்லார்க்குக் கொடுத்து இன்புறும் இயல்பினர். மன்னனுக்குரிய வரியை முன்னர் மகிழ்ந்து கொடுப்பவர்கள். பலர் உழுதொழில் செய்பவர். சிலர் வாணிகம் செய்பவர். சிலர் கணக்காயர். வேறு பலர் மக்கள்

வாழ்க்கைக்கு உதவும் வேறு பல தொழில்களையும் செய்பவர்.

நாட்டினுக் காக்கந் தேடும்
    நல்லவ ரல்லா லில்லை.
பாட்டுடைத் தமிழுக் கேற்றம்
    பகர்பவ ரல்லா லில்லை.
வாட்டொழில் மன்னன் கூறும்
    வழிநடப் பவரே யல்லால்
வீட்டினில் மறைந்து தூற்றும்
    வீணரில் எவரு மில்லை.

இத்தகைய பறம்பு நாட்டு அரசன் பாரி என்பவன். இரக்கமுடையவன். அறச்செயல்கள் செய்பவன். இவன் காட்சிக் கெளியவன். தராசுக் கோல் போல் நடு நின்று வழக்குகளை நன்காராய்ந்து முடிவு செய்பவன். நல்லறிவுடையவன். நல்லாள் என்னும் பெண்மணியை மணந்து இல்லறத்திலிருந்து நல்லறங்கள் செய்தவன். இவனுக்கு இரு பெண் மகளிர் இருந்தனர். அவர்கள் பெயர் அங்கவை சங்கவை என்பன. இருபெண்களும் கல்வியிற் சிறந்தவராயும் நல்ல குணமுடையவராயும் விளங்கினர்.

## முல்லைக்குத் தேரீதல்

பாரிமன்னன் காரினால் வளம்பெற்று விளங்கும் தன்னுடைய கானத்தைக் காண்பதற்கு எண்ணிக் குதிரை பூட்டிய தேரேறிச் சென்றான். தேரிலேறிச் செல்லும் வழியில், செருக்குடைய செல்வர்களைப் போன்று நெற்பயிர்கள் நிமிர்ந்து நின்று

கொண்டிருந்தன. ஓரிடையன் இனிய குழலிசையை எழுப்பி, அக்குழலிசையினால் ஆக்களை முன்னால் நடத்தித் தான் பின்னே சென்றுகொண்டிருந்தான். அரசன் தன் தேரை ஆக்கள் வெருளாதபடி மெல்ல விலக்கி நடத்திச் சென்றான். தேர் கானத்தை அடைந்தது. முல்லைக்கொடிகள் மன்னன் ஏறி வரும் தேரைக் கண்டன. கண்டு மகிழ்ந்து தங்கள் முகையினால் புன்முறுவல் பூத்தன. வண்டுகள் வரவேற்றன. மரங்கள் மன்னனுக்கு மலர்மாரி பொழிந்தன. பொருளின் மிகுதியால் பொலிவுறும் குடிகளைப் போல மரங்கள் பூவினாலும் காய்களினாலும் பொலிவுற்றுத் தங்கள் கிளைகளோடு விளங்கின. மரங்களிலிருந்து விழுந்து மழை நீரினால் முளைத்தெழுந்த செடிகளும் கொடிகளும் செல்வச் சிறுவர்களைப் போல் திகழ்ந்தன. செடிகளிலும் கொடிகளிலும் ஒரு பக்கம் வெண்ணிற மலர்கள் விளங்கிக் காணப்பட்டன. பொன்னிற மலர்கள் ஒருபக்கம் பூத்துப் பொலிந்தன. செந்நிற மலர்கள் ஒரு பக்கம் மலர்ந்து திகழ்ந்தன. வண்டுகள் தேனை யுண்டு களித்துத் திரிந்தன. பறவைகள் பறந்துலாவின. மானும் ஆவும் புற்களை யுண்டு வாழ்ந்தன. முதியவர்களை அவர்களுடைய மக்கள் அவர்களுடைய தளர்ச்சிக் காலத்தில் தாங்குவது போல முதிர்ந்த ஆல மரங்களை அவற்றின் விழுதுகள் தாங்கி நின்றன. விளாமரங்கள் தங்களிடத்திலுள்ள காய்களைச் சிலர் பறிக்கத் தொடங்குவராயின், தங்கள் முள்ளினால் குத்தி இரப்பார்க்குக் கொடுக்காத உலோபிகளைப்

போல நின்றன. வாழைகள் பழக் குலைகளைத் தலை களில் தாங்கிக்கொண்டு, கொடுக்கும் கொடையாளி களைப்போல நின்றன. கருங் கற்கள் கரிகளைப் போல் ஒருபுறம் கிடக்கும். யானையால் வளைக்கப் பட்டு நிமிர்ந்த மூங்கில்கள் குதிரை குதித்தசைவது போல அசைந்தாடின. மயில்கள் மாதரைப்போல் நடித்தன. இவை போன்ற பல காட்சிகளையும் கண்டு களித்துக் காட்டின் ஒரு கோடியை யடைந்தான் வள்ளல் பாரி.

வள்ளல் பாரி சென்ற நெறியில், ஒரு முல்லைக் கொடி இருந்தது. அது துயருற்றும் சோர்வுற்றும் நிலத்தில் விழுந்து கிடந்தது. அதன் துயரத்தைக் கண்டு அதன் அருகிலிருந்த கருவிளை தன் மலர்களா கிய கண்களிலிருந்து கண்ணீரை வடித்து இரங்கி அழுதது. காந்தள் தன்மலர்களாகியபூக்களால்அழாதே என்று தடுத்துக்கொண்டிருந்தது.மன்னன், துயருறும் அம் முல்லையைக் கண்டான். கண்ட மன்னன் சென்றுகொண்டிருந்த தன் தேரிற் பூட்டிய குதி ரையை நிறுத்தினன். சிறிது உற்றுப் பார்த்தான். முல்லை தன் அல்லலை மன்னனுக்குப் பல்லைத் திறந்து பகர்ந்து அடிவணங்குதல் போல அரும்புகளைக் காட்டி அசைந்து நின்றது. அரசன் அதன் குறையை அதன் குறிப்பினால் அறிந்தான். பிறர்க் குத் துன்பஞ் செய்வதும், அத்துன்பத்தைக் கண்டு மகிழ்வதும் அவனுடைய வழக்கமன்று. துன்பங் கண்டவழி, மனமிரங்கி அதனை நீக்குவது அவ

னுடைய செயலாகும். முல்லைக்கொடி சோர்வுற்று வருந்துவது ஒரு மனிதன் சோர்வுற்று வருந்துவது போலவே அவனுடைய கண்களுக்குக் காணப்பட்டது. தேரைவிட்டு இறங்கினான். நடந்து அதனருகே சென்று பார்த்தான். மழையினால் வளர்ந்து விளங்கவேண்டும் இது ஏன் வாடுகிறது? என்று எண்ணினான். விலங்குகள் வந்து மிதித்து ஊறு செய்திருக்குமோ என்று சுற்றிப் பார்த்தான். சுற்றுப் புறங்களில் விலங்குகளின் அடிச்சுவடுகளு மில்லை கொடியினிடத்து முறிவுமில்லை. வேறு காரணம் யாதாக இருக்கலாம் என்று ஆராய்ந்தான். கொடி படர்ந்தேறுவதற்குப் பற்றுக்கோடில்லாம லிருப்பதைக் காவலன் கண்டான். மன்னவன் இவன் என்று என்னிடம் தன் அல்லலைத் தெரிவித்த இதனுக்குக் காட்டிலுள்ள பொருளைக்கொண்டுவந்து சேர்ப்பது எனக்குத் தகுதியாகாது. என்னுடைய பொருளையே இதனுக்குக் கொடுக்கவேண்டு மென்று எண்ணி, மன்னன் தன் தேரையே முல்லைக்கொடியின் அருகே கொண்டுவந்து நிறுத்தி, அதன் கொடிகளை அதன்மேல் படரவிட்டான். முல்லை அதன்மேல் படர்ந்தது.

உறுபொருள் கைவர உவகைத் தேனுணும்
வறிஞனை நிகர்த்தது மண்ணெ லாம்புகழ்
அறிவுடை அண்ணல்பால் ஆடித் தேர்பெறு
விறலியும் நிகர்த்தது அவ் வீகொள் முல்லையே.

வள்ளல்பாரி தேரிற் பூட்டிய குதிரையை அவிழ்த்து, அதன்மீது இவர்ந்து, முன் சென்ற

நெறியே மீண்டு, தன் அரண்மனையை அடைந்தான். அரசன் தேரி லேறிச் சென்றதையும், தேரின்றிக் குதிரையில் மீண்டதையும் அறிந்த வாயிற் காவலாளரும் பிறரும் தேரிலேறிச் சென்ற மன்னன் ஏன் அத்தேரில் வரவில்லை; தேரினுடைய அச்சுமுரிந்து விட்டதோ என்று ஐயுற்றுச் சென்று அவனிடம் வினவினர். தேருக்குப் பழுதொன்றும் ஏற்படவில்லை. அதுகாட்டில் நிற்கிறது. துயருற்றுச்சோர்வுற்று வாடி நின்ற முல்லைக்கொடியை அது தாங்கி அதன் வாட்டத்தை நீக்கிக் கொண்டிருக்கிறது என்று அரசன் கூறினன். அவன் உரையைக் கேட்ட அனைவரும் அவன் கொடைமடம் பட்டான் என்றும், முல்லைக் கொடிக்குத் தான் ஏறிச் சென்ற தேரைக் கொடுத்து விட்டுக் குதிரையில் மீண்டிருக்கிறுன் என்றும் அறிந்து காட்டுக்குச் சென்று அவன் கொடுத்த தேரினையும் அதனைப் பெற்ற முல்லைக் கொடியையும் பார்த்துப் புகழ்ந்து மீண்டார்கள். மன்னனுடைய கொடையினுல் ஏற்பட்ட புகழ் வேந்தர்களும் வியக்க எங்கும் பரவியது.

## கபிலர் வருகை

பாண்டிய நாட்டுத் திருவாதவூர் என்ற ஊரிற் பிறந்தவரும் பெரும் புலவருமாகிய கபிலர் வள்ளல் பாரியைக் காணவேண்டும் என்ற அவாவினுல் பறம்பு நாட்டிற்குப் புறப்பட்டார். மணமிகுந்த மலர்களைச் சுமந்தும், அழகிய தழைகளைச் சுமந்தும் மரங்கள் வழியெங்கும் தலைவணங்கி நின்றன. காக்கைகள் குயிற்

குஞ்சுகளைத் தங் குஞ்சுகள் என்று எண்ணிப் பறப்பதற்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தன. பெண்கள் பந்தெறிந் தாடிக்கொண்டிருந்ததைக் கண்ட மந்தி விளங்கனிகளை எடுத்து மேலே எறிந்து விளையாடிக் கொண்டிருந்தது. கபிலர் இக்காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து நடந்து சென்றார். இடையில் ஒரு பாலை நிலம் இருந்தது. அந்நிலத்திலுள்ள மூங்கில்கள் வெடித்து முத்துக்களைச் சொரிந்தன. ஞாயிறு, அனல்போலும் வெயிலைக் கான்றது. புற்களும் மரங்களும் எரிந்து கிடந்தன. கபிலர் அவ் வழியே நடந்து சென்றார். முகில் இரங்கி அவருக்கு நிழலைக் கொடுத்துதவியது. கபிலர்அப்பாலை நிலத்தை விட்டகன்று குறிஞ்சி நிலத்தைச் சென்றடைந்தார்.

கபிலர் பாரிக்கு உரிமையுடையதாகிய பறம்பு மலையைக் கண்டு மகிழ்ந்தார். மலை யருகில் குறவர்கள் முருகக் கடவுளுக்கு விழவெடுத்து மகிழ்ந்தார்கள். ஏணி வைத்தேறி மலை யுச்சியிலிருந்து சிலர் தேன் எடுத்துக்கொண்டிருந்தனர். பெண்கள்வேங்கை மரத்தின்நிழலிலிருந்து புலி புலி என்றுகூறிப் பூப் பறித்துக் கொண்டிருந்தனர். குறவர்கள் சந்தன மரங்களை வெட்டி வீழ்த்தி நெருப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அம்மரங்களிலிருந்து எழுந்த புகை முகிலோ என்று ஐயுறுமாறு வேங்கை மரத்தின்மீது தவழ்ந்து சென்று கொண்டிருந்தது. மண மலர்களையுடைய செடிகள் ஒரு புறமும் வானைத் தடவும் மரங்கள் ஒரு புறமும் காணப்பட்டன. பல காட்சிகளையும் கண்டு கபிலர் பாரிவேள் அரண்மனையை அடைந்தார்.

புலவர் அகழையும் மதிலையும் கடந்து வாயில் வழியாக நடந்து மன்னன் வீற்றிருக்கும் மண்டபத்தை அடைந்தார். மண்டபம் அகலமுடையதாகவும் அகலத்திற்குத் தக்க உயரமுடையதாகவும் பல வரிசை கொண்ட தூண்களையுடையதாகவும் இருந்தது. நடுப்பத்தியில் பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட பூ, இலை முதலியன கொண்ட செடிகள் ஒவ்வொரு தூண் ஓரத்திலும் வைக்கப்பட்டிருந்தன. விளக்குகள் முகட்டிலிருந்து தொங்க விடப்பட்டிருந்தன. அரசன் அரியணையில் வீற்றிருந்தான். கபிலர் நடந்து சென்று மன்னனைக் கண்டு வணங்கினார்.

பாரி மன்னன் புலவருக்கு இருக்கை கொடுத்து இருக்கச் செய்தான். கபிலரைக் கண்டு களிப்படைந்தான். கபிலரும் காவலன் உடம்பையும் முகத்தையும் பார்த்து அருளுடையவன் என்று அறிந்து மகிழ்ந்தார். இருவர் நலன்களையும் ஒருவர்க்கொருவர் உசாவித் தெரிந்து கொண்டனர். அரசன் புலவரை அழைத்துச் சென்று அறுசுவைஉணவருத்தி அகம்மகிழ்வித்தான்.

கபிலர் அங்கிருந்த பல புலவர்களோடும் பழகினார். அங்கிருந்த புலவர்கள் அனைவரும் பாரி பெருங்கொடையாளி; மிகுந்த அருளுடையவன்; அனைவரையும் காப்பாற்றுபவன் என்று அரசனைப் புகழ்ந்து பேசினார்கள். புலவர் அரசன் அரும்புகழைக் கேட்டு மகிழ்ந்தார். அவன் புகழை மேலும் புகழ்வதற்கு எண்ணி, "பாரி பாரி என்று சொல்லி அவனுடைய பல புகழையும் வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்வர்,

செவ்விய நாவையுடைய அறிவுடையோர். பாரியாகிய ஒருவனுமே யல்லன்; மாரியும் உண்டு இவ்விடத்து உலகத்தைப் பாது காத்தற்கு" என்னும் பொருள்பட,

பாரி பாரி என்று பல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு உலகு புரப்பதுவே

புறம்-107

என்று பாடினர்.

பாரி மன்னனுடைய செங்கோன்மையும் அவன் கொடையும், அவன் அருங்குணங்களும் கபிலரை மகிழ்வித்தன. பாரியும் புலவரைத் தன்னோடு இருக்குமாறு வேண்டிக்கொண்டார். இருவரும் நுனியிற் கரும்பருந்தினர் போல அன்புற்று இன்புற்று வாழ்ந்தனர்.

## தேர்காணச் செல்லல்

அரசனும் புலவரும் அளவளாவி வாழுங்காலத்தில், அரசன் முல்லைக்குத் தேர் கொடுத்த பெருங் கொடையைப் பற்றிச் சிலர் கபிலரிடம் கூறினர். கபிலர் கேள்வியுற்று வியப்புற்று அக்காட்டிலுள்ள முல்லைக் கொடியையும் தேரையும் காண விழைந்து நடந்து சென்றார். வழியில், பாரியிடம் பரிசில் பெறக் கருதி வந்து கொண்டிருந்த விறலி யொருத்தி புலவரைக் கண்டு, பாரியிடம் செல்லின் அவன் எமக்குப் பரிசில் அளிப்பானோ என்று வினவினள். அங்ஙனம் வினவிய விறலிக்கு, "நல்லன வென்றும் தீயன வென்றும் சொல்லப்படுவன சூடும் பூவாதலால், அவை

இரண்டினும்வைத்து எண்ணப் படாத குவிந்த பூங் கொத்தினையும் புல்லிய இலையையுமுடைய எருக்கம் பூவாயினும் ஒருவனுடையனவற்றைத் தெய்வங்கள் விரும்பேமென்னா; அது போலயாதும் அறிவில்லாதாரும் புல்லிய குணங்களையுடையாரும் செல்லினும் பாரி கைவண்மை செய்தலைக் கடப்பாடாக வுடையன்." என்னும் பொருள்பட,

நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்க மாயினும் உடையவை
கடவுள் பேணே மென்னா ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே புறம்-106

என்னும் பாட்டினைக் கூறி விறலியை ஆற்றுப்படுத்தினர்.

கபிலர் காட்டை அடைந்தார். அறிவுடையவர் தங்களுக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொள்ளும்படி அருளுடையவர் மனையகத்தே கிடைக்கும் பொருள்களைப்போலப்பறவைகளும் வண்டுகளும்உண்ணும்படி நறுமணமுடைய கனிகளும் மலர்களும் காடெங்கும் நிறைந்து கிடந்தன. அவற்றைப் புலவர் தம் இரு விழியாலும்கண்டு கண்டு மகிழ்ந்துசென்றார். சென்று கொண்டிருந்த அக்காட்டின் ஓரிடத்தில் தேர் நிற்பதைக் கண்டார். அருகே சென்று பார்த்தார். அத் தேரில்முல்லைக்கொடி படர்ந்து அரும்புகளோடு விளங்கியது. அம்முல்லைக்கொடி கபிலரைக்கண்டு புலவா! வள்ளல் பாரி என்னுடைய இடரைக் கண்டுஎனக்கு

உதவியாகக் கொடுத்த பரிசில் இதுவாகும் எனக் கூறுவது போலப் பற்களைக் காட்டித் தலையசைத்து நின்றது.

ஆங்கொருசார் உருண்டுசெலா
அணிநெடுந் தேரினைக் கண்டான்
பாங்கரனு கினன் அதனிற்
படர்ந்த பசுங் கொடிமுல்லை
ஈங்கிறைவன் என்னிடர்கண்
டீந்ததிது என்றுவந்து
மூங்கையெனத் தலையசைத்து
முகையெயிறு காட்டியதே.

புலவர் அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். பரிசில் அளித்தபாரி வள்ளலையும் பரிசில் பெற்ற முல்லைக் கொடியையும் புகழ்ந்தார். புகழ்ந்தவர் சென்றவழியே நடந்து திரும்பி அரண்மனையை அடைந்தார்.

பாரிவள்ளல் பாவலர்களுக்கும் காவலர்களுக்கும் பாணர்களுக்கும் பாடியவர்களுக்கும் வரையாது கொடுத்துதவினன். அவனுடைய புகழ் நாடெங்கும் பரவியது.

## போர்

பாரியிடம் பரிசில் பெற்றுச் சென்ற பாவலர்களும் பாணர்களும் மதுரையை அடைந்து பாண்டியனிடம் அவன் புகழை உரைத்தனர். அவனுடைய மக்களாகிய அங்கவை சங்கவை என்பவர்களுடைய கல்வி, அறிவு, கேள்விகளையும் அவர்களுடைய ஒழுக்கங்களையும், அவர்களுடைய அழகுகளையும் எடுத்துரைத்தனர். பாண்டியன் பாரியினுடைய வள்ளன்

மையைக் கேட்டு ஒரு புறம் உவகையும் ஒரு புறம் நாணமும் எய்துவான். எனினும் அவனுடைய மக்கள் கல்வி முதலியவற்றை எடுத்துரைக்கும்போது விருப்புற்றுக் கேட்டு மகிழ்வான். தன் மனைவி இளமையிழந்து முதுமை எய்தினளாதலின், அங்கவை சங்கவை இருவரையும் மணம் செய்து கொண்டால், தனக்கு மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் உண்டாகுமென்று நினைந்தான்.

பாண்டியன் சொற்றிறமையுடைய இரண்டு அமைச்சர்களை அழைத்து, அவர்களிடம் தன் கருத்தினைத் தெரிவித்துப் பாரியிடம் மகட் பேசி வரும்படி அனுப்பினன். அமைச்சர்கள் பாண்டிய நாட்டை அகன்று பறம்பு நாட்டை அடைந்து பாரியைக் கண்டனர். கண்டு வணங்கி, மன்ன, நின் மக்கள் இருவரையும் எம் மன்னன் மணஞ் செய்வதற் கெண்ணியுள்ளான் என்றுதெரிவித்தனர். அமைச்சர்கள் கூறிய சொற்கள் அரசனுக்கு வெறுப்பை உண்டாக்கின. பாண்டியன் முன்னமே மணஞ் செய்யப் பெற்றவனல்லவா ? அவன் சோழ மன்னன் மகளை மனைவியாகக் கொண்டுள்ளானே. முன்னம் மணஞ் செய்த முதிர்ந்த மன்னனுக்கு எம்மக்களை இரண்டாம் முறையாக மணஞ் செய்து கொடுப்பது கன்னற்சாற்றைக் கமரில் கவிழ்ப்பது போலாகுமே என்று எண்ணி, அமைச்சர்களே! "முதல் முறை மணஞ் செய்த நும் மன்னன் மறுமுறையும் மணஞ்செய்வது தகுதியன்று. அம்மன்னனுக்கு மறுமுறையும் எம்மக்களை மனைவிய

ராகக் கொடுப்பதும் நன்றன்று. எம் மக்கள் நும் அரசனினும் ஆண்டில் மிகவும் இளைஞர்கள். ஆண்டில் மிகவும் முதிர்ந்த அரசனுக்கு ஆண்டில் மிகவும் இளைய மக்களைக் கொடுப்பது முறையாகாது. உங்கள் மன்னனை இகழ்ந்துரைத்ததாக நீங்கள் எண்ணலாகாது'' என்று கூறி அனுப்பினான். அமைச்சர்கள் பாரி வேள் உரையைக் கேட்டுச் சென்று தங்கள் அரசனிடம் தெரிவித்தனர்.

பாண்டியன் பாரியினுடைய கருத்தைக் கேட்டுச் சினங் கொண்டான். "ஆண்டில் வேற்றுமை கூறிப் பாரி மகட் கொடை மறுத்தானல்லன். வேண்டுமென்றே மறுத்திருக்கிறான்'' என்று கருதினான். பாரி தன்னிடம் வரும் புலவர்க்கும் பாணர்களுக்கும் வாரி வாரிப் பொன்னையும் பொருள்களையும் கொடுத்துப் பலரும் தன்னையே புகழும்படி செய்துகொள்கிறான். புகழிற் சிறந்த பாண்டியர் மரபைத் தன் புகழினால் மங்கும்படி செய்கிறான். முள் மரத்தை அது முதிருமுன் அழிக்கவேண்டும். முதிரின் அதனை அழிப்பது எளிதன்று என்று எண்ணித் தனக்குத் துணைவர்களாகிய இரு மன்னர்களைச் சேர்த்துக் கொண்டு பாரி வேளோடு போர் புரிவதற்குப் படைகளோடு புறப்பட்டான்.

புலியி னம்போல் வயவர்கள் போயினர்
மலையி னம்போல் மதகரி சென்றன
அலையி னம்போ லகன்றன வாம்பரி
தொலைவில் தேரினம் பின்னர்த் தொடர்ந்தவே.

நாற் பெரும் படைகளோடு மூவேந்தர்களும் நடந்து சென்று பறம்பு நாட்டை அடைந்தனர். பாரி வேந்தன் படைகள் வருகையை அறிந்தான். அவர்களோடு எதிர்த்துப் போரிடாமல் மலைமீதிருந்த தன்னுடைய கோட்டை வாயில்களை அடைத்துத் தன்னுடைய படைகளோடும் கிளைகளோடும் கோட்டைக்குள்ளிருந்தான். மதில்களில் பொறிகளை வைத்து, அவற்றைப் பகைவர்கள் அணுகாதபடி அவன் வீரர்கள் காவல் செய்து வந்தார்கள்.

பாரியும் அவனுடைய படைகளும் எதிர் வந்து போர் புரியாமையினால், மூவேந்தரும் அவர்கள் படையும் பறம்பு மலையையும் அவன் கோட்டையையும் முற்றுகை போட்டார்கள். கோட்டையைக் கைப் பற்றலாமென்று பக்கத்தே சென்றனர். வீரர்கள் மதிலின் மேலே இருந்த பலவகைப்பட்ட பொறிகளையும் ஏவிப் பக்கத்தில் வரும் பகைவர்களை மாய்த்தனர் பகைவர்கள் மதிலைப் பிடிக்கும் முயற்சியை விட்டு வெளியிலிருந்து உணவுப் பொருள்களும் வேறு பொருள்களும் கோட்டைக்குள் செல்லாதபடி தடுத்து நின்றார்கள். கோட்டைக்குள் இருந்தவர்கள் உள்ளே முன் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருள்களை உண்டுகொண்டிருந்தமையினால் நாளடைவில் அவைகள் குறையலாயின. பறம்பு மலையில் இயற்கையாக விளையும் வள்ளிக் கிழங்கு, வெதிர் நெல், பலாப் பழம், தேன் முதலிய உணவுப் பொருள்களை உண்டுவாழ்ந்தார்கள். கபிலர் கிளிகளை வளர்த்து மலைக்கு வெளியே விளைந்து கிடக்கும் நெற் கதிர்களைக்

கொண்டுவரும்படி பழக்கிவைத்திருந்தார். அங்ஙனமே கிளிகள் கொண்டு வந்த நெல்லையும் அங்குள்ளவர்கள் உண்டு வந்தார்கள். பகைவர்கள் முற்றுகை பல நாள் நடந்தும் பாரியும் அவன் படைகளும் தளர்ந்தார்களில்லை.

கபிலர் பாரியின் வலிமையை வேந்தர்க்கெடுத்துரைக்கவும் பறம்பு மலை கொள்ளுவதற் கரிதென்று அறிவுறுத்தவும் எண்ணினார். "வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் படையினையுடைய மூன்று திறத்தீரும்கூடிப் பொருதீராயினும் பறம்பு கொள்ளுதற்கு அரிது. முந்நூறு ஊரையுடைத்து குளிர்ந்த நல்ல பறம்பு நாடு. அம்முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர். நீயிர் பாடினராய் வரின், நுமக்குப் பாரியும் யாமும் உள்ளோம். அதுவேயன்றி மலையும் உண்டு" என்னும் பொருளுடைய,

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே.
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு.
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்.
யாமும் பாரியும் உளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

என்ற பாட்டைப் பாடி, ஓரேட்டில் எழுதி ஒரு கிளியினிடம் கொடுத்து அப் பாட்டைப் பாண்டியன் பக்கலில் வைக்குமாறு பணித்தனுப்பினார். கிளியும் அவ்வோலையைக் கொண்டு சென்று பாண்டியன் பக்கலில் வைத்தகன்றது.

பாண்டியன் ஓலையை எடுத்தான். விரித்துப் பார்த்தான். பாட்டின் கருத்தைப் பார்த்துச் சினங் கொண்

டான். ஓலையைக் கிழித் தெறிந்தான். தனக்குத் துணைக்கு வந்த வேந்தர் இருவரையும் அழைத்துப் பல நாள் பறம்பு மலையை முற்றுகை யிட்டும் பாரி பணிந்தானில்லை. இறுதியாக, மீண்டும் ஒருமுறை மதிலைக் கைப்பற்ற முயலுவோம் என்று அவர்களிடம் கூறினன். அவ்விருவரும் உடன்பட்டனர். மூவர் தானைகளும் முற்றுகை விடுத்து மதிலைப் பற்றுவதற்குப் புறப்பட்டன.

வில்லும் வாளுமெ டுத்தனர்
செல்க செல்கெனச் சென்றனர்
மல்லி னுலுயர் மள்ளர்கள்
கல்லெ லாம்பொடி காணவே

எடுத்து வாள்களை ஏந்தினர்
நடக்க என்றுந டந்தனர்
கடக்க ரும்பெருங் கல்லிடைத்
துடிக்கு லத்தொலி தூண்டவே

காக்கு மாமதில் கைக்கொள
ஊக்கங் கொண்டுமுன் னோடினர்
தாக்கு வான்முனஞ் சார்ந்தனர்
பூக்கள் வேய்புலி போன்றவர்.

மூவேந்தர் தானைகளும் மதிலைக் கைப்பற்றுவதற்கு வருவதைப் பாரியினுடைய வீரர்கள் அறிந்தார்கள். மதிலில் வைக்கப்பட்டிருந்த பொறிகளிருக்கும் இடத்தை அடைந்தார்கள். வீரர்களே! வாருங்கள். எம்மை நும்மால் வெல்ல முடியாது. நும்மை எம்மால் வெல்ல முடியும் என்று கூறி, நெருப்புமிழும்

பொறிகளையும், உருக்கி உலோகங்களை வீசியெறியும் பொறிகளையும், கணைகளை உமிழும் பொறிகளையும், பிற பொறிகளையும் ஏவினார்கள். கல்லினாலும் கணைகளினாலும் தாக்கினார்கள். மதிலினுள்ளிருந்த மறவர்களால் தாக்கப்பட்ட மூவேந்தர் படை வீரர்களில் பலர் கண்களை யிழந்தார்கள். பலர் கைகளை இழந்தார்கள். பலர் புண்பட்டார்கள். பலர் மண்ணில் வீழ்ந்து மாய்ந்தார்கள். குன்று முட்டிய குருவி போல வீரர்கள் தாங்கள் கொண்ட முயற்சியை விட்டுப் புறங்கொடுத்துத் திரும்பினார்கள்.

## கொடை மடம்

புறங்கொடுத்துத் திரும்பிய மூவேந்தரும் அவர்களுடைய வீரர்களும் ஒரு மரஞ்செறிந்த சோலையை அடைந்தார்கள். பாரியினுடைய பறம்பு நாட்டை அடைந்ததனால் நமக்குப் பழியே வந்து சேர்ந்தது. என்று புலம்பினார்கள். போருக்கு நம்மோடு வந்து பகைவரோடு போர் புரிந்து இறந்த வீரர்களுக்கு இழிவு ஒன்றுமில்லை. இறவாது உயிர் தாங்கி இருக்கும் நமக்கே மிகவும் இழிவாக இருக்கிறது; தோல்வியோடு ஊருக்கு மீண்டால் பின்பு வீரர்களிடம் நம் வீரத்தைப் பற்றி வாயெடுத்துப்பேச முடியுமா என்று பாண்டியன் தன் துணைவர்களிடம் கூறி வருந்தினான். மேலும், பாரியினால் நமக்குத் துன்பமே வந்து சேரும். அவனை எங்ஙனமாவது கொன்றுவிடுவது நல்லது. அவனைக் கொல்வதினால் பழி ஏற்படினும் குற்றமில்லை என்று நினைந்தான்; கன்மனத்து வஞ்சகன் ஒருவனை அழைத்து, நீ உன் மனைவியோடு பாரியிடம்

செல். சென்று நான் பாணன்; பரிசில் பெற வந்தேன் என்று சொல்லிப் பாரி மன்னனையே உனக்குப் பரிசில் கேள். வேறொன்றினையும் நீ கேட்க வேண்டாம். பாரி தன்னையே கொடுப்பானாயின் அவனை அழைத்துக் கொண்டு இங்கு வந்து சேர் என்று கூறி, அவனைப் பாண்டியன் அனுப்பினான். பாரி மன்னன் உயிரைப் பற்றுவது அரிதென்று எண்ணிக் கூற்றம் இரண்டுருக் கொண்டு நடந்தாற் போல அக்கொடியவனும் அவன் மனைவியும் பாரியிடம் சென்றார்கள். அம் மன்னனைக் கண்டு, அரசே! வணங்குகின்றோம். நாங்கள் பரிசில் பெற வந்தவர்கள். தங்களிடம் வந்த எங்களுக்குத் தங்களையே பரிசாகத் தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். பாரி தன்னையே பரிசிற் பொருளாகக் கேட்டதற்கு மகிழ்ச்சியடைந்தான். தன்னை அக்கயவர்களுக்குக் கொடுத்து விட்டு நரிக்கடங்கி அதன்பின் சென்ற வரிப்புலி போல அவர்களுக்குப் பின்னே நடந்து சென்றான்.

முன்னாகி இரந்தவர்க்கு முகமலர்ந்து
மனமகிழ்ந்து முகமன் கூறிப்
பொன்னுதவி னொருண்டு ; களிறுதவி
னொருண்டு ; புரவி பூண்ட
நன்னெடுமான் தேருதவி னொருண்டு
நாடுதவி னொரு முண்டு
இன்னுயிரோ டுடலுதவி னொரெவர்வேள்
பாரியலால் இருநி லத்தே.

வஞ்சகன் பாரிமன்னனை அழைத்துக்கொண்டு சென்று பாண்டியன் இருக்கும் இடத்தை அடைந்து

அவனிடம் அவ்வள்ளலை ஒப்படைத்தான். பாண்டியனும் அவன் துணைவர்களும் வள்ளல் பாரியை வஞ்சகத்தால் கொன்று மாய்த்தார்கள். வள்ளல் மண்மேகள் மடியில் வீழ்ந்தான். செந்தமிழ்த் தெய்வம் அம்மன்னனை அழைத்துச் சென்று, அவன் தன் மனமொழி மெய்களினால் வணங்கி வாழ்த்திய சிவபெருமானிடம் சேர்த்தாள். சிவபெருமான் அவ்வள்ளலைத் தன் திருவடி நிழலில் இருத்தினார்.

பாரி வஞ்சகர்களால் கொல்லப்பட்டவுடன் அவன் பிரிவினுக் காற்றாமல் அவன் மனைவியும் விண்ணுலகடைந்தாள். அங்கவையும், சங்கவையும் பெற்றோர்களுடைய பெரும்பிரிவினால் இறகுகளை இழந்த கிளிபோல் வருந்தினார்கள். கபிலர் தம் இருகண்களையும் இழந்தாற் போன்று வருந்தினார். பறம்பு நாட்டினர் துயர்க் கடலுள் அழுந்தினர். பாரிவள்ளல் இறந்தொழிந்தான், அவன் பறம்பு நாட்டைக் கைப்பற்றுதல் இனி எளிது என்று எண்ணிப் பகையரசர் மூவரும் சென்று அந்நாட்டினைக் கைப்பற்றினர்.

## பிரிவு வருத்தம்

பாரி வள்ளலைக் கொன்ற பகையரசர் வஞ்சகக் கொலைச் செயலே இருள்வடிவங் கொண்டு புகுந்தாற் போல உலகமெங்கும் ஞாயிறு மறைந்தவுடன் இருள் பரந்தது. பகைவர்கள் தங்களுக்கு என்ன என்ன கொடுஞ் செயல் செய்வாரோ என்று அங்கவையும் சங்கவையும் புலம்பிக் கொண்டிருந்தார்கள். அவ்

விருவரையும் கபிலர் அழைத்துக்கொண்டு அரண் மனையை விட்டகன்றார்.

அரண்மனையையும் ஊரையும் கடந்து மரங்கள் செறிந்த வழியே மூவரும் நடந்து சென்றார்கள். காரிருளில் மின்மினிகள் மின்னி வெளிச்சங் காட்டி அவர்களுக்குச் செல்லும் நெறியைத் தெரிவித்தன. பிற உயிர்களுக்குத் தினைத்துணையும் தீங்குசெய்யாத அவர்களுக்கு இருளினால் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் பொருட்டுத் திங்களஞ் செல்வன் திரைக் கடலில் முளைத்தெழுந்தான். நிலவின் ஒளியில் மெல்ல மெல்ல நடந்து சென்றார்கள். அப்பொழுது அங்கவையும் சங்கவையும் தங்கள் பெற்றோர்களை இழந்த துன்பத்தையும், தங்கள் நாட்டை இழந்த துன்பத்தையும் நினைந்து, "மூவேந்தரும் முற்றியிருந்த அற்றைத் திங்களின் அவ்வெள்ளிய நிலாவின்கண் எம்முடையதந்தையையும் உடையேம். எம்முடைய மலையையும் பிறர்கொள்ளார். இற்றைத் திங்களது இவ் வெள்ளிய நிலவின்கண் வென்றறைந்த முரசினை யுடைய அரசர் எம்முடைய மலையையுங் கொண் டார். யாம் எம்முடைய தந்தையையும் இழந்தேம். என்னும் பொருள்பட,

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையு மிலமே.

புறம்-112

என்னும் பாடலைப் பாடி வருந்தி நடந்து சென்றார் கள்.

ஞாயிறு கிழக்கில் தன் செங்கதிர்களை விரித்துத் தோன்றிற்று. கபிலர் தாம் பன்னாள் கண்டு களித்து உண்டு உறங்கி வாழ்ந்த பறம்பு மலையைப் பார்த்து, அதன் பிரிவுக்கு வருந்தி, "மது இருந்த சாடியை வாய்திறப்பவும், ஆட்டுக்கிடாயை வீழ்ப்பவும், அடப் பட்டு அமைந்தொழியாத கொழுவிய துவையையும் ஊனையுமுடைய சோற்றையும் விரும்பியபரிசே தரும் மிக்க செல்வ முதிர்ந்து எம்மோடு நட்புச் செய்தாய் முன்பு. இப்பொழுது பாரி இறந்தானாகக் கலங்கிச் செயலற்று நீர்வார் கண்ணையுடையேமாய்த்தொழுது நின்னை வாழ்த்திச் செல்லுதும், பெரிய புகழுடைய பறம்பே, கோற்றொழிலாகச் செய்யப்பட்ட திரண்ட குறிய வளையை யணிந்த முன்கையினை யுடைய மகளிரது மணங்கமழும் கரிய கூந்தலைத் தீண்டுதற்கு உரியவரை நினைந்து" என்னும் பொருள்பட,

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே. இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே. புறம்-113

என்று வருந்திப் பாடிப் பறம்பு மலையையும் பறம்பு

நாட்டையும் கடந்து பாரி மகளிர் இருவரையும் அழைத்துக் கொண்டு நடந்து சென்றார்.

பொன்னுதிர்க்கும் கொன்றையிவை இவைகாயா
மணியலர்த்தும் இவையே பூகம்:
நன்முத்தம் நன்கரும்பும் நங்கைமீர்
காண்மினென நவில்வான் செல்வான்
முன்னிருக்கும் பழங்காண்மின்; முழவெனத்தோன்
றுதல்காண்மின்; மொய்த்து வண்டர்
இன்னறவ முணல்காண்மின் எனப்பலவின்
சுளைகளெடுத் தீவான்; போவான்.

முல்லைமுகை யிவைகாண்மின் பல்நிகர்க்கும்
இவைகாண்மின் முருக்கம் போது
மெல்லிதழை நிகர்க்கும்இனி யிவைகாண்மின்
கருவிளம்பூ விழிக ளொக்கும்
செல்லுநெறி யினில்தெரியுஞ் செழுமலரே
காந்தளம்பூ செங்கை யொக்கும்
பல்லிதழ்த்தா மரைகளிவை முகமொக்கும்
நடமினெனப் பகர்வான் செல்வான்

இவ்வாறு வழிகளில் காணப்படும் மரங்களையும் செடிகளையும் கொடிகளையும் பிறவற்றையும் காட்டிக் கொண்டும் கண்ணகி மணிமேகலை முதலிய பெண்ணருங் கலங்களின் வரலாறுகளைக் கூறிக் கொண்டும் நடந்து சென்று இருங்கோவேள் என்ற சிற்றரசனிடம் போய்ச் சேர்ந்தார்.

## மணம்

இருங்கோவேள் கபிலரை வரவேற்று இருக்கை கொடுத்தான். அவருடன் வந்திருந்த பாரி மகளி

ரைப் பார்த்து இவர் யாவர் என்று வினவினன். இவர் பறம்பிற் கோமானகிய பாரி வேள் மகளிர். பாரி பகைவரால் கொல்லப்பட்டான். இவர்களை நீ மனைவியராகக் கொள்ளவேண்டும் என்று கபிலர் வேண்டிக் கொண்டார். இருங்கோவேள் ஏற்றுக் கொண்டானில்லை. அவனை விட்டகன்று வழி நடந்து சென்று, விச்சிக்கோ என்ற அரசனை அடைந்து, "இவர்கள்தாம் பூவைத் தனது தலையின்கண் நீங்கப் பெருத அலங்கரித்தாற்போலும் கொடிமுல்லை நாத் தழும்பேறப் பாடாதாயினும் ஒலிக்கும் மணியை யுடைய நெடிய தேரைக் கொள்க என்று சொல்லிக் கொடுத்த பரந்து மேம்பட்ட தலைமையினையுடைய பாரிக்குமகளிர். யான் பரிசிலன். அதுவன்றியும் நிலை பெற்ற அந்தணன். நீ பகைவரைப் போர்செய்யு முறைமையால் பொருது தாழ்விக்கும் வாளால் மேம்படுபவன். ஆதலால் நினக்கு யான்தரக் கொள் வாயாக" என்னும் பொருள்பட,

"இவரே பூத்தலை அறுஅப் புனைகொடிமுல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரிமகளிர்
யானே, பரிசில் மன்னும் அந்தணன் நீயே
வரிசையில் வணங்கும் வாள்மேம் படுநன்
நினக்குயான் கொடுப்பக் கொள்மதி" புறம்-200

என்று பாடி வேண்டிக் கொண்டார். இவர்ரை மணஞ் செய்து கொள்ளின் பாண்டியன் முதலிய பகையரசர்கள் என்னேடு பகை கொள்வார்

கள் என்று கூறி அவன் மறுத்து விட்டான். கபிலர் மனம் வருந்தி மகளிருவரையும் அழைத்துக் கொண்டு நடந்தார்.

சேரமான் கடுங்கோ வாழியாதன் வள்ளல் பாரியைப் போலப் பாவலர்களுக்கு வரையாது கொடுக்கும் வண்மையன் என்றும் நல்லகுண முடையன் என்றும் கபிலர் கேள்விப் பட்டார். பாரி இறந்தபின் அவனைப்போன்ற ஒரு வள்ளல் இருப்பானாயின் அவனைக் காணவேண்டுமென்ற அவா அவருக்குண்டாகியது. பாரி மகளிரை ஒரு பார்ப்பனரிடம் ஒப்படைத்துவிட்டுப் புலவர் சேர நாட்டை நோக்கி நடந்து சென்றார். மன்னனைக் கண்டார். அவனுடைய புகழையும் குணங்களையும்,செங்கோன்முறைமையையும் பத்துப் பாடல்களில் வைத்துப் பாடினார். காவலன் கடுங்கோவாழியாதன் அவற்றைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். கபிலருக்குச் சிறுபுறமென நூறாயிரங் காணம் கொடுத்து நன்று வென்னுங் குன்றேறி நின்று தான்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ. கபிலர் அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு மன்னனிடம் விடை பெற்று மீண்டார்.

பாரிமகளிர் தங்கள் இடக்கண் துடிக்கின்றமையினால் கபிலர் இன்று வருவார் என்று எண்ணிக் கொண்டிருந்த பொழுது அவரும் வந்து சேர்ந்தார். பாதுகாத்த பார்ப்பனனுக்குப் பல பொன் கொடுத்து, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு அங்கவை சங்கவை இருவரையும் அழைத்துக்கொண்டு, உழ

வொலி செவிப் படவும், முழவொலி செவிப்படவும், விழாவொலி செவிப்படவும் நடந்து, புலவர், திருமுடிக்காரி செங்கோல் செலுத்தும் திருக்கோவலூரைச் சேர்ந்து அரண்மனை வாயிலை அடைந்தார்.

ஓவியத் தெழுத வொண்ணு
 ஒள்ளிழை மகளிர் தம்மைக்
காவலன் மைந்தர் நோக்கி
 யாரெனக் கலங்கி நின்றூர்
பாவலன் பின்னே சென்ற
 இருவரும் பார்த்து மாட்த்து
ஏவல ரின்றி நின்ற
 அவரையுங் கண்டின் புற்றூர்.

கபிலர் பாரிமகளிருவரோடும் காரிமன்னன் வீற்றிருக்கும் கொலுமண்டபத்தை அடைந்தார். மன்னன் புலவரை வரவேற்று இருக்கை கொடுத்து இருத்தி நீண்ட நாளாக ஏன் வரவில்லை என்று கூறி உடன் வந்திருக்கும் இருவர் யாவர் என்று வினவினுன்; இவர் பறம்பு நாட்டரசன் பாரிவேள் மகளிர். என்னிடம் கல்வி கற்றவர்கள். நல்ல ஒழுக்க மூடையவர்கள். பாரிவேளைப் பாண்டியன் முதலியோர் வஞ்சகத்தால் கொன்றூர்கள். இவரை நின் மக்களிருவருக்கும் மனைவியராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று புலவர் வேண்டிக் கொண்டார். காரி மன்னன் தன் மனைவி மக்களிடம் உடன்பாடு பெற்றுத் தன் மக்களுக்கு மணஞ்செய்துகொள்ள உடன்பட்டான். காரி மக்களிருவருக்கும் பாரிமக்களிருவருக்கும் மணம் நடைபெற்றது. கபிலர் கடுங்கோ வாழியாதனிடம்

பெற்ற பரிசில்களைப் பாரி மகளிர்களிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களைப் பற்றிய தம் நீண்டநாள் கவலையை நீக்கிக் கொண்டார்.

## வடக் கிருப்பு

கபிலர் தம் ஆருயிர்த் துணைவனாகிய பாரியோடு வாழாத நாட்களை வீழ் நாட்களாகவே கருதிவந்தார். தாமும் அவன் சென்ற நாட்டுக்குச் செல்லவேண்டுமென்று எண்ணினார். எண்ணிப் பலரிடமும் தம் கருத்தைக் கூறிவிட்டு " முசுக்கலை கிழித்துண்டலால் பீறிய முழவுபோலும் பெரிய பலாப்பழம் வில்லையுடைய குறவர்க்கு அதன் பெருமையால் சில நாளைக்கு இட்டு வைத்துண்ணும் உணவாம் மலையையுடைய நாட்டையுடையோய்! பெரிய வண்மையையுடைய பாரி! நீயும் நானும் கலந்த நட்பிற்குப் பொருந்த ஒழுகாயாய் நீ என்னை வெறுத்தாயாகக் கடவை, நீ எனக்கு உதவிசெய்த யாண்டுகளும்; பெருமை தக்க தலைமையினையுடைய நட்பிற்குப் பொருந்தாமல் யானும் நின்னோடு கூடப்போதுதற்கு இயையாது நீ ஈண்டுத்தவிர்க எனச்சொல்லி இப்படி வேறுபட்ட தன்மையையுடையை யாதலின், நினக்கு யான் பொருந்தினே னல்லாமையான்; இங்ஙனம் பொருந்திற்றிலேனாயினும் இப்பிறப்பின்கண் நீயும் யானும் கூடி இன்புற்றிருந்தவாறு போலக் காட்டி மறுபிறப்பினும் இடைவிடாத காட்சியினையுடைய நின்னோடு கூடி வாழ்தலை உயர்ந்த விதி கூட்டுவதாக" என்னும் கருத்துப்படக்,

கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பின் நட்பிற் கொல்லாது
ஒருங்குவரல் விடாது ஒழிகெனக் கூறி
இனையை யாதலின் நினக்கு மற்றியான்
மேயினே னன்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி உம்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக வுயர்ந்த பாலே

புறம்-236

என்ற பாட்டைப்பாடி வடக்கிருந்து உயிர் நீத்தார். செந்தமிழ் அன்னை கபிலரைப் பாரி மன்னரிடமும் சிவ பெருமானிடமும் சேர்த்து இன்புறுவித்தாள்.

# 2 வள்ளல் பேகன்

## ஆட்சி

வள்ளல் பேகன் ஆவியர் குடியைச் சேர்ந்தவன். இவன் நாடு மலை நாடு என்பது. இம்மலை நாட்டில் கோடைகாலத்தில் கதிரவனுடைய வெயில் மிகுந்த வெப்பமுடையதாயிருக்கும். அவ்வெம்மைக் காற்று கோடைகாலங் கழிந்தவுடன் அந்நாட்டு மக்கள் விழவெடுத்து மழையை அழைப்பார்கள். முகில் வானிவர்ந்து உருமி மின்னி மழை பெய்யவரும். அம்முகிலை அங்குள்ள மயில்கள் கண்டு, அது அம் மலைக்குத் தெய்வமாகிய முருகக் கடவுள் விண்ணி லிருந்து மண்ணுக்கு இவர்ந்து வரும் யானை என்று மயங்கி எண்ணி மகிழ்ந்தாடும். உரிய காலத்தில் நன்கு மலையிலிருந்து அருவிவிழும் மழை பெய்யும் அவ் வருவி நீரை எயினர்கள் தாங்கள் உழுது விதைத்துப் பயிராக்கும் ஐவன நெற்பயிர்களுக்குப் பாய்ச்சு வர். அப்பயிர்கள் தங்களுக்கு நீருதவிய அவ்வெயினர் களுக்குத் தலைவணங்கித் தானிய மணிகளைக் கொடுக் கும்.

மலைநாட்டுக்குத் தலைநகரம் நல்லூரென்பது. நல்லூரைத் தனக்கு இடமாகக் கொண்டு பேகன் அந்நாட்டைக் காவல் செய்து வந்தான். அவன் தன் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் பற்றுவைத்து அம்மொழியிலுள்ள அகப்பொருள் நூல்களையும் புறப்பொருள் நூல்களையும் ஐயந்திரி

பறக் கற்றான். தன்னாட்டு மக்கள் அனைவரையும் கற்கும்படி செய்தான். தமிழ்ப் புலவர்களுக்கு வரையாது பரிசில் கொடுத்தான். காடழித்து நாடாக்கினான். குளங்கள் வெட்டினான். நல்ல வழிகளை உண்டாக்கினான். பூம்பொழில் அமைத்தான். உடலாராய்ச்சிக் கழகம், உயிராராய்ச்சிக் கழகம், உணவளிப்பு மன்றம், மருந்தளிப்பு மன்றம், வள்ளுவனார் மறை பயிற்று மன்றம் முதலியவைகளை ஏற்படுத்தினான். அவன் ஆட்சியில் அவன் நாட்டுக் குடிகள் அறிவு வளர்ச்சியுற்று வாழ்ந்தார்கள்.

முருகனிடம் வேண்டுவது
முகில்பொழியும் பருவமழை
அரசனிடம் வேண்டுவதங்கு
அரசிறைமுன் அளப்பதுவே
இரவலரை வேண்டுவது
பலபொருள்கொண் டேகுவது
வரவுமிகை செலவுகுறை
என்பதுவே மன வருத்தம்.

பேகனுடைய மனைவி பெயர் கண்ணகி. அவள் கற்பிலும் பொற்பிலும் சிறந்தவள். பொறுமையும் பணிவு முடையவள். பேகனும் கண்ணகியும் ஈருடல் சேர் ஓருயிர் போன்று மனமியைந்து இல்லறம் புரிந்தார்கள்.

## மயிலுக்குத் துயிலளித்தல்

ஒருநாள் மன்னன் மலைவளனும் பொழில் வளனும் காண எண்ணினான். தன்னை ஆடையாலும் அணிகளாலும் அழகு செய்து கொண்டான். பரிமீ

திவர்ந்து வழியே படர்ந்தான். குதிரை விரைந்து சென்றது. செல்லும் நெறியில் பல மரங்கள் காவலன் முன் கனிகளை உதிர்த்து நின்றன. குதிரையின் விரைவினால், அம்மன்னனுக்கு அம்மரங்கள் காலால் நடந்து வந்து கனிகளை உதிர்த்து வணங்கிவிட்டுப் பின்னால் கடுகிச் செல்வனபோல் காட்சியளித்தன. அக் காட்சியைக் கண்டு வியந்துகொண்டே பூம் பொழிலொன்றினை அடைந்தான்.

பூம்பொழில் மன்னன் வருகையை அறிந்து குயில் மொழியால் வாழ்த்துரைத்துக் குளிர்மலர் தூவி வரவேற்றது. மாமரங்கள் வன்கனிகள் பல வற்றைச்சுமந்து நாலுதிசையிலும் நிலம்படக்கவிழ்ந்த கிளைகளோடு செய்குன்றம் போன்று ஒருபால் நின்று கொண்டிருந்தன. முழவம் போன்ற சுளை நிரம்பிய கனிகளைப் பலாமரங்கள் ஒருபால் சுமந்து நின்றன கரிகளால் பிடித்திழுத்து விடப்பட்ட கழைகள் குதிரைபோல் ஒரு பால் அசைந்தாடிக் கொண்டிருந் தன. அடர்ந்த அக்காட்டின் வழியாக மன்னன் சென்றான். அங்கே சில காட்சிகள் காணப்பட்டன.

மடுவில் நெடுங் கயலலையும்
வழிதொறும் பன் முயல் கலையும்
கடுவனறுங் கனிஉதிர்க்கும்
கனன்று தகர் நனி எதிர்க்கும்
பிடியொடுநால் வாய் நடக்கும்
பிணையொடு புல்வாய் கிடக்கும்
கொடியை நெடுங் கழைதாங்கும்
கோடு தொறும் மழைதூங்கும்

மரநிழலில் மானுறங்கும்
வண்கனியின் தேனிறங்கும்
அரவுமிழும் மணிமின்னும்
அலர்சொரியுங் கணி மன்னும்
முரணிவய மாமுழங்கும்
முனிந்துமத மாவழங்கும்
குரல்கவர்ந்துண் ணுங்கிளிகள்
குடைந்தளியுண் ணுங்களிகள்

இக்காட்சிகளைக் கண்டுகொண்டு பேகன் தான் ஏறிச்சென்ற குதிரையினின்றும் இறங்கி அதனை ஓரிடத்தே கட்டிவிட்டு நடந்து சென்றான்

மன்னன் நடந்து சென்ற வழியில், ஒரு நொச்சிச் செடி நின்றது. அதன் மலர் கருமணி போன்றும் அதன் இலைகள் மயிலடிபோன்றும் காட்சி யளித்தன. அந்நொச்சியி னருகே ஒரு காயா நின்றுகொண் டிருந்தது. அதன் மலர்கள் மயிலினுடைய கழுத்தின் நிறம் போன்று காட்சியளித்தன. அவைகளைப் பார்த்துக்கொண்டு அப்பால் சென்றான். விழுந்து, ஒரு பக்கமாகச் சாய்ந்து, தழைத்து மலர்ந்திருந்த வேங்கை மரத்தின் மீது பெண் ஒருத்தி ஏறி மயில் போல் காட்சியளித்து மலர்கள் பறித்துக்கொண்டிருந் தாள். மன்னன் மயிலின் இயல்புகளையும் அதனோடு ஒத்திருக்கும் பொருள்களின் இயல்புகளையும் அதனை ஊர்தியாகக் கொண்டிருக்கும் முருகன் இயல்புகளை யும் எண்ணி எண்ணி மெல்ல நடந்து சென்றான். ஒரு மலையை அணுகினான். அம்மலை பசிய தளிர்களாகிய உடையைப் போர்த்துக் கொண்டிருந்தது. வெண்

முகிலாகிய பாகையை முடிக்கு அணிந்துகொண்டி ருந்தது. அருவியாகிய மாலையை மார்பினில் அணிந்து கொண்டிருந்தது. அதனால் அம்மலை அவனுக்கு முருகனைப்போல் காட்சியளித்தது. காவலன் அதனைக் கை கூப்பித்தொழுது நின்றான். அம்மலையிலிருந்து ஓரருவி விழுந்துகொண்டிருந்தது. அதனை அரசன் காண்பான் கருதி அதன் அருகு அடைந்தான். அவ்வருவி பொன், மணி, முத்து, அகில்கட்டை, சந்தனக் கட்டை முதலியவற்றை வாரிக் கொண்டுவந்து அலைகளாகிய கைகளால் அம்மலையுறை கடவுளாகிய முருகப் பெருமானுக்குக் காணிக்கை செலுத்துவது போலச் சொரிந்து விழுந்து கொண்டிருந்தது. அதனைக் கண்டு உவப்பெய்திய அரசன் வேறொரு சிறந்த காட்சியையுங் கண்டான்.

மலை கண்கவர் வனப்போடு மலர்கள் ஏந்திய கொடிகளையும் செடிகளையும் மரங்களையுங் கொண்டு ஒருபால் நாடகத்திரைபோல் காட்சியளித்தது. அம்மலையிலிருந்து மணிமுதலியவற்றை வரன்றி அருவி சலசல தடதட என்று முழவோசை எழுப்பி விழுந்து கொண்டிருந்தது. மலர்களிலுள்ள தேனையுண்டு மகிழ்ந்த வண்டு இசைபாடி யாழோசையெழுப்பி நின்றது. மரங்களிலுள்ள பழங்களைத் தின்று மகிழ்வெய்திய கிளி பண்ணோடு பாடிக் கொண்டிருந்தது. இரைதேர்ந்து அவ்விடத்திற்கு வந்த மயில் ஒன்றினுக்குத் தன்னை அறியாமல் அகத்தில் உவகை உண்டாகியது. தன் அழகிய தோகையை விரித்தது. அகவி ஆடிற்று. காவலன் அக்காட்சிகளை யெல்லாம் கண்டு மகிழ்ந்

தான். கண்ட கண்களை எடுத்தானில்லை. காட்சி நல்ல காட்சி. அரங்கும் நல்ல அரங்கு. ஆட்டமும் நல்ல ஆட்டம். நங்கையர் நடிக்கும் நாடகக் காட்சிக்கும் இக்காட்சிக்கும் வேற்றுமை என்ன இருக்கிறது? என்று பலவாறு, அவன் நாவு புகழ்ந்தது. அவன் கைகளிரண்டும் அவன் தோளில் அணிந்திருந்த அழகிய மேலாடையை எடுத்தன. கால்கள் மெல்ல மயிலருகே நடந்தன. மயிலே நின் நடிப்பு மனத்திற்கு மகிழ்ச்சியை அளித்தது. இப்பரிசிலைப் பெற்றுக் கொள். குளிர் காலத்தில் இது உன் குளிரை அகற்றும் என்று கூறி அதற்கணிந்தான். மயிலும் நடந்தது. மன்னனும் நடந்தான்.

வரியிசைத்து நடமாடும்
மாதர்களுக் குவந்தரசர்
பரிசிலளித் தனரென்று
பகர்வர்சிலர் புள்ளினங்காள்
விரிசிறைமஞ் ஞைக்களித்த
வேந்தருள ரோசொன்மின்
வருகஇவன் கொடைகாண
வருகஎனக் குயில்கூவும்.

மன்னன் பேகன் மலை வளங்களைக்கண்டு கண்டு வழி நடந்தான். ஓரிடத்தில் இரண்டு யானைகள் இருந்தன. அவற்றில் ஒன்று களிறு; ஒன்று பிடி. களிறு காட்டில் அலைந்து வந்தது போலும். களைப்பினால் நிலத்தில் படுத்துக்கிடந்தது. அது கண்வளர்ந்து களைப்பு நீங்குவதற்குப் பிடி தன் இரு செவிகளாலும் விசிறியது. தன் நெடுங்கையினால் அதன் முதுகையும் உடம்பை

யும் வருடியது. பிடி அன்பினால் களிறுக்குச் செய்யும் தொண்டினைக் காவலன் கண்டான். களித்தான். மேலும் நடந்தான். மரமடர்ந்த பொதும்பரொன்றில் ஒரு மந்தி மனம் வருந்திக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. அதனருகு ஒரு குரங்கு நிலத்தில் கிடந்தது. அது அதன் காதற்கலை. கலையின் உயிரைக் கண்ணிலியாகிய காலன் கவர்ந்து சென்றான். அதன் இறப்பினுக்கு மந்தி மனம் வருந்தி மாழ்கியது. மண்ணில் இனி வாழ்வதில் பயனில்லை என்று எண்ணிற்று. மெல்ல நடந்து சென்றது. மலைமேலேறியது. உச்சியை அடைந்தது. உச்சியிலிருந்து பாறையில் விழுந்து உயிர் விட்டது. மன்னன் மந்தியின் மறக்கற்பைக் கண்டான். மனம் உடைந்தான். அப்பால் நடப்பதற்குக் கால்கள் எழவில்லை. சென்றவழியே திரும்பினான். பரிமீது இவர்ந்து அரண்மனையை அடைந்தான்.

அரண்மனையை அரசன் அடையும் பொழுது, முன்பு குதிரைமீது அனுப்பிய ஏவலாளரும் வேறு சிலரும் அவனைப் பார்த்தனர், அவன் தோளில் அன்று அணிந்த மேலாடை இல்லாமலிருப்பதைக் கவனித்தனர். காரணம் யாது என்று சிலர் கருதினர். சிலர் கலக்கங் கொண்டனர். ஏவலாளரும் பாவலரும் ஏகி வரும்போது மேலாடை இன்றி வந்தமைக்குக் காரணம் யாது என்று காவலனிடம் வினவினர். ஆடிய மஞ்ஞை யொன்றினுக்கு மேலாடையைப் பரிசிலளித்தேன் என்று அவன் அவர்களுக்கு அறிவித்தான். அனைவரும் அரசனையும் புகழ்ந்தார்கள். ஆடிய மயிலையும் புகழ்ந்தார்கள்.

## பிரிவு

மலைக்குச் சென்று மீண்டதிலிருந்து வள்ளல் பேகன் மனம் அமைதியடையவில்லை. காட்டில் கண்ட களிற்றின் செயலையும் காதற் பிடியின் செயலையும் கருதிக் கருதிக் களிப்பான். மலையிவர்ந் திறந்த மந்தியை நினைந்து நினைந்து வருந்துவான். ஆறறிவுடைய மங்கையர் கற்பினும் ஐயறிவுடைய விலங்குகளின் கற்பு எவ்வளவு மேலானது என்று வியப்பான். மந்தியின் சாவு கற்பினால் ஏற்பட்டதல்லவா? என்று கருதுவான். மேலும்,

பெண்ணருங் கலமென்றென்று
பெரும் புகழ் கொள்ளும் இந்தக்
கண்ணகி தனையும் வென்ற
தென்றுதான் கருதல் வேண்டும்
எண்ண மொத் தொழுகல் போல்முன்
னிறந்திடின் தொடர்வள் கொல்லோ
மண்ணிடைக் கைம்மை நோற்கும்
மங்கையர் பல்லாரன்றோ.
கோவலன் குறைகண் டொன்றும்
கூறிலள் அவனைக் கொன்ற
காவலன் குறைகேட் டோடிக்
கள்வன்அல் லன்காண் என்றாள்
யாவரும் புகழக் கேள்வன்
தன்னொடு படர்ந்தாள் யாண்டும்
தேவியென் றேத்த நின்றாள்
கண்ணகி யென்னுஞ் செல்வி

என்று தன் காதலி கண்ணகியை மனத்தில் வைத்து அவள் கற்பின் நிலையை ஐயுற்று அளந்தறிந்

தான். தன் காதலி கண்ணகி கற்பும் எப்படி இருக்கிறது என்று சோதிக்க எண்ணினான். அமைச்சரிடமோ பாவலரிடமோ தன் எண்ணத்தைப் பகர்ந்தானில்லை.

கதிரவன் காவலன் எண்ணத்தை அறிந்தான். அவன் செயலைக் கண்டு தானும் வருந்தினான். மன்னவன் இல்லையாயின் நானிருப்பினும் அவன் நாட்டு மக்களுக்கு என்னால் என்னபயன்? ஒன்றுமில்லையன்றே. அரசன் அகலுமுன் நான் அகன்று விடுகிறேன் என்று எண்ணி மலையில் மறைந்தான் பகலவன். மன்னவன் இல்லையேல் மண்ணில் மக்களுக்கு வாழ்க்கையில்லை. மகிழ்ச்சியில்லை. அரசே! நாட்டை விட்டகலாதே என்று தாமரை மலர்கள் இதழ்க் கைகளைக் குவித்தன. எங்கும் காரிருள் சூழ்ந்தது. வள்ளல் பேகன் துயில்வதற்குத் தன் மனைவியோடு பள்ளிக்குச் சென்றான். கண்ணகி கண்வளர்ந்தாள். காவலன் துயின்றானில்லை. தன் காதலி கண்ணகி கற்பினைச் சோதிக்க எண்ணி நள்ளிரவில் நடந்து தன் அரண்மனையையும் தன் நகரையும் கடந்து சென்றான்.

கண்ணகி எழுந்தாள். கணவனைக் கண்டாளில்லை. விரைவில் வருவான் என்று எதிர்பார்த்தாள். வரவில்லை. மனம் அமைதி யடையவில்லை. நடந்து பல இடத்திலும் தேடினாள். ஓரிடத்தும் காணப்பட்டிலன். தோழிகளை எழுப்பினாள். நகர்க்காவலுக்கு நள்ளிரவில் சென்றிருப்பின், முன்னமே மீண்டிருப்பார். என்னிடம் அவர் செல்வதாகக் கூறினருமல்லர். எங்குச் சென்றாரோ அறியேன். தேடிச் சென்று

என் இன்னுயிரனைய காதலரை இன்னே கொண்டு வாருங்கள் என்று கூறிச் சிலரை அனுப்பினாள்.

கற்பிற்சிறந்த கண்ணகி தன் கணவனைக்காணாமல் அழுகின்றாள். ஐய! விரைந்து வருக என்று கோழிகள் கதிரவனைக் கூவின. கதிரவனும்தோன்றினான். தேடச் சென்ற தோழியர்கள் மீண்டார்கள். வள்ளலைக் கண்டிலேம் என்று கண்ணகியிடம் கூறினார்கள். கண்ணகியின் கண்கள் அருவிபோல் நீரை வடித்தன. ஐயகோ! என்று வாய் அலறியது. கைகள் தலையைத் தாக்கின. உடம்பு வாடியது. உள்ளம் ஊசலாடியது. மலர்க்குழல் அவிழ்ந்து நிலத்தில் புரண்டது. மங்கை மண்ணில் விழுந்து அழுதாள். கருத்திற்கினிய காதல! நான் நின்று கொண்டிருந்தால் நின் கால்கள் நோவும் என்று தடை செய்வாய். மென்மலரைக் கூந்தலுக்கணியின், அப்பாரத்தினால் நின் இடை நோவும் என்று மறுப்பாய். காட்டுக்குப்போய் மீண்டபின் அங்கே கண்ட காட்சிகளையெல்லாம் கூறினாய். மயிலின் நடிப்பையும் அதற்குப் பரிசில் வழங்கியதையும் என்னிடம் கூறினாயல்லவா? மனத்திலுள்ள அத்தனையும் கூறுகின்ற நீ இன்று பிரிவதாக ஏன் கூறவில்லை. காரிகை உறங்கும்போது சங்குலில் நீங்குவது காவலர்க்கு அழகாகுமா? என்னைப் பேதையென்றிகழ்ந்தாயில்லையே. நான் பிழை செய்ததாகவும் கூறவில்லையே. என்னைக் காதலித்து மணந்த அக்காலத்தில் என்னைக் கைவிடமாட்டேன் என்று கூறினையே என்று கண்ணினை இழந்த மக்களைப் போன்று கதறினாள். வெண்ணெயம் பாவை தீயால் மெலிவது போன்று, மெலிவெய்தினாள்.

பூவியல் பொய்கை போகிப்
புனலிடை மூழ்கல் விட்டாள்
காவியங் கருங்கண் ணுக்குக்
கருமைமற் றெழுதல் விட்டாள்
ஆவிசேர் உணவை விட்டாள்
அருந்து தண்ணீரை விட்டாள்
ஓவியம் புனைகயுண்டாற் போன்
ஞெளி யிழந் துருகி நைவாள்.

கணவனைப் பிரிந்த கண்ணகி மனம் அமைதியுற வில்லை. இருந்த இடத்திலிருக்க உள்ளம் இசைய வில்லை. அரண்மனை எங்கும் தானே நடந்து அலைந்து தன் காதலனைத் தேடினாள். வாயிலை அடைந்து மன்னன் சுவடுகள் உள்ளனவோ என்று பார்த்தாள். நடந்து சென்ற மன்னன் அடிச்சுவடுகள் காணப் பட்டன. வாயிலின் வழியாக மன்னன் வெளியே சென்றதை அறிந்தாள். மனம் வருந்தினாள். வெளியே சென்று பார்ப்பதற்கு எண்ணினாள். நடக் கத் தொடங்கினாள். தோழியர்கள் தடுத்து நங்கை யை மீட்டிச் சென்றார்கள். அமைச்சர்கள் அரசியின் வருத்தத்திற்கும் அரசன் இல்லாமைக்கும் கவன்றார் கள். அரசனைத் தேடிக்கொண்டு வருவதற்கு ஆட் களைப் பல விடத்திற்கும் அனுப்பினார்கள்.

காதலனைப் பிரிந்த கண்ணகிக்கு மாலைப்பொழுது வந்து மிகுந்த வருத்தத்தைச் செய்தது. திங்கள் வானத்தில் தோன்றித் தீயனைய கதிர்களைச் சொரிந் தது. மதென்றல் காற்று உடம்பிற் பாய்ந்து அவளுக்கு ஊறு செய்தது. நாவிற்கினிய பாலும் அவளுக்கு

நஞ்சாகியது. அவளுடைய கண்கள் காவலனைக் காட்டு காட்டு என்று கலுழ்ந்தன. அவளுடைய செவிகள் மன்னன் இன்னுரைகளைக் கேட்பதற்கு விழைந்தன. அவளுடைய உள்ளம் ஒரு நொடிப் பொழுதும் ஓரிடத்தில் நில்லாது அரசனை அடைவதற்கு ஓடிக்கொண்டிருந்தது. கண்ணகிக்கு உறவாக ஒரு பொருளும் இல்லை. முன் உறவாக இருந்த அத்தனை பொருளும் காதலன் பிரிந்தபின் அவளுக்குக் கடும் பகைகளாயின. ஆகையால், அவள் இரவும் துயின்றாளில்லை. பகலும் துயின்றாளில்லை. சில நாட்கள் கழிந்தன.

மன்னவ னில்லா நாடு
மதியிலா வானு மென்பார்
அன்னையில் சேயா மென்பார்
அன்பில்இல் லறமா மென்பார்
நன்மண மில்லாப் பூவாம்
ஞாயிறில் பகலா மென்பார்
இன்னணம் மக்க ளெல்லாம்
இயம்புவார் மயங்கு வாரால்

நாட்கள் கழிந்தனவே யன்றி நங்கைக்கு நன்மை யொன்றும் பிறக்கவில்லை. மன்னன் எங்கே சென்றான் என்று விளங்கவில்லை. தேடிச் சென்றவர்கள் திரும்பினார்களுமில்லை. எத்தனை நாளைக்கு இருந்த இடத்தில் இருப்பாள்? வாயிலுக்குச் சென்று கணவன் வருகிறானா என்று பார்ப்பதும், இல்லை என்று மீள்வதுமாக இருந்த கண்ணகி வரம்பிகந்து வாயிலையும் மதிலையுங் கடந்து ஆதிமந்தியாரைப்போலவும், வெள்ளி வீதியாரைப் போலவும், ஆறும், குளமும்,

காவும், மலையும் தேடத் தொடங்கினாள். காணவில்லை. காட்டின் வழியாகச் சென்றாள். உள்ளக்கவலையாலும் கண்களில் நீர் நிரம்புவதாலும் நெறிவழியே கால்கள் செல்லவில்லை. நெறியைவிட்டு விலகி நடப்பதனால் செடிகள் அங்கும் இங்கும் அவள் சேலையைப் பற்றிப் பற்றி இழுத்துக் கிழித்தன. அவள் உடம்பையும் வடுப்படுத்தின.

மலர் சொரி மரங்காள் நல்லூர்
 மன்னனைக் கண்டீர் கொல்லோ ?
அலர்வுறு நறவுண்டாடும்
 வண்டுகாள் அறிவீர் கொல்லோ ?
புலவர்கள் புகழுங் கோனை
 அறிவிரோ புள்ளி மான்காள் ?
கலவமென் மயில்காள் சொன்மின்
 கண்டிரோ காட்டு வீரோ ?

ஆடலுக் கிரங்கி மஞ்ஞைக்
 காடையை அளித்தான் பாணர்
பாடலுக் கிரங்கிப் பொன்னும்
 பணிகளும் அளித்தான் என்றன்
வாடலுக் கிரங்கா தெங்கோ
 மறைந்தனன் கிளிகாள் என்றன்
தேடலுக் கிரங்கி மெள்ளச்
 செப்புமின் தப்பன் மின்னே.

என்று குழலும் நாணப் புலம்பிக் காடெங்குந் தேடினாள். காட்டினருகே குன்றமொன்றிருந்தது. அதன் அருகே சென்றாள் "மன்ன! இரவில் என்னைவிட்டுப் பிரிந்தாய் எனினும் என் நெஞ்சம் உன்னை எண்ணு

வதினின்றும் மறந்திலது. கண்கள் உன்னைக் காணு வதினின்றும் மறந்தில. செவிகள் உன் செயல்களையும் புகழையும் இன்சொற்களையும் கேட்பதினின்றும் வெறுத்தில. நான் இறப்பினும் உன்னை மறுமையில் கணவனாகப் பெறவேண்டும் என்னும் எண்ணத் துடனே இறப்பேன். ஓருயிர் இறக்கும் பொழுது எதனை எண்ணி இறக்கிறதோ அதனை மறுமையில் அடைகிறது என்று பெரியோர்கள் கூறுவர். அதனால் உன்னை இம்மையிற் பெறாவிடினும் மறுமையில் உன் னைக் கணவனாகவே பெறுவேன்.'' என்று புலம்பிக் கண்ணீர் விட்டழுது கொண்டிருந்தாள்.

## புலவர்கள் வருகை

பரணர் என்னும் பெரும்புலவர் வள்ளல் பேகன் செங்கோல் திறமையையும், கொடைத் திறமையை யும், புலமைத் திறமையையும், புலவர் தம்மிடம் கூறக் கேட்டு அவனைக் கண்டு பரிசில் பெறக் கருதி நடந்து வந்தார். மாலை நேரம் அப்புலவர் அக்காட்டின் வழியாக நடந்து வந்தநேரம். தான் கொண்டுவந்த யாழை எடுத்து மாலை நேரத்திற்குரிய செவ்வழிப் பண்ணை அமைத்து அக்கானத்தைப் பாடிக்கொண்டி ருந்தார். முல்லைக்கொடிகள் முகைகளை மலர்த்திமணம் விரித்துக்கொண்டிருந்தன. மற்றொரு பக்கம் கண்ணகி,

வழியிடை நெடிது நின்றாய்
மன்னன் வந்தனனோ கொன்றாய்
ஓழிவிலா தழுவேன் வெம்பி
ஓடி முன்னுரைப்பாய் தும்பீ

முழவென முழங்குங் கொண்டால்
மொழிக எம்மரசைக் கண்டால்
எழில்பெறு குயிலே கூவே
எங்கோளிந்தனன் சொல்காவே.

என்று பல பொருள்களையும் அழைத்துக் கேட்டு அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அப்புலம்பொலி பரணர் காதில் விழுந்தது. தாம் வாசித்த யாழை உறையிலிட்டார். கண்ணகி இருக்குமிடத்தை அடைந்தார். வருந்துகின்ற நீ யாவள்? மன்னவன் கிளையோ? என்று வினவினர். "ஐய! யாம் வேந்தனுக் குறவே மல்லேம். முன்பு எம்போல்வாள் ஒருத்தி யோடு அரசன் கேண்மை கொண்டிருந்தான். இன்று எங்கோ சென்றனன்" என்று விடை பகர்ந்தாள். பரணர்அவள் துன்பத்திற்கிரங்கி அன்னாய்' மண்ணக முழுதுந்தேடி மன்னனைக் கொண்டு வருகிறேன். இரவு வருமுன் அரண்மனைக்கு ஏகுக என்று அவளை அனுப்பினர்.

கண்ணகி கலுழ்ந்த கண்ணோடு ஊருக்கு நடந்து மீண்டு வந்தாள். வழியில் அரிசில் கிழாரும் பெருங் குன்றூர் கிழாரும் மலை நாட்டைப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தார்கள். அப்புலவர்களைக் கண்டு, புல வர்களே! வள்ளல் பேகனை வழியில் கண்டீர்களோ என்று வினவினள். அவர்களும் அவள் வருத்தத்தை அறிந்து மன்னனைத் தேடிக் கொணர்வதாகக் கூறிச் சென்றனர்.

கபிலர் பேகனிடம் பரிசில் பெறக் கருதி மலை நாட்டை அடைந்தார். மலையருகே யுள்ள ஒரு சிற்

றூரை யடைந்தார். மாலை நேரமாயிற்று. மன்னனை யும் மலை நாட்டையும் பாடிக் கொண்டிருந்தார். மன்னன் புகழைப் பற்றிய அவன் பாடலைக் கண்ணகி கேட்டுக் கலுழ்ந்து புலம்பிக் கொண்டிருந்தாள். கபிலர் கண்ணகியின் வரலாற்றை அறிந்து அவள் கற்பினையும் இற்பிறப்பினையும் அறிந்து வியந்து, மன்னனைப் பற்பல இடத்திலும் தேடிப் பார்த்துக் கொண்டு வருகிறேன் என்று அவளிடம் கூறி அவளை அனுப்பி வைத்தார். கண்ணகி கண்ணீர் வடித்து அரண்மனையை அடைந்தாள்.

தோழிமார்கள் அவள் நிலைமையைக் கண்டு வருந்தினார்கள். அழைத்துச் சென்றார்கள். அமளியிற் கிடத்தி அவள் வெம்மையைப் போக்குவதற்குச் சந்தனம் அப்பினார்கள். மலர்ந்த மலர்களைக் கொண்டு வந்து படுக்கையில் பரப்பினார்கள். நடந்த கால்கள் வருந்துமென்று அவற்றை வருடினார்கள். பாலுணவு கண்ணகிக்கு வெறுக்கத் தக்க நஞ்சுணவாயிருந்தது. அவள் உடம்பு தோய்ந்த மலர்கள் தீய்ந்தன. கண்ணகிக்கு நிலவுக் கதிர்கள் வெம்மையுடையனவாயிருந்தன. இரவுப் பொழுது மிகவும் நீட்சியுடையதாகக் காணப்பட்டது. ஒரு நாள் ஏழுநாள் போல் தோன்றிற்று. தோழியீர்! புலவர்களில் யாரேனும் வந்தனரோ? புரவலன் மீண்டனனோ? என்று கேட்பாள். கேட்டு, அமளியிற் புரண்டு தூக்கமின்றித் துன்புற்று வருந்துவாள். தோழி என் இடதுகண் துடிக்கிறது. உன் இன்னல் அகலக் கூடும் என்று ஒரு தோழி கூறுவாள். அரசி! காக்கை வந்து மாடத்தில்

கரைகிறது. அரசன் இரண்டொரு நாளில் வரக் கூடும் என்று சில தோழியர் வந்து கூறுவர். புலவர்கள் புரவலனைக் காடெங்கும் தேடிக் கொண்டிருக்கிறார்களாம். வழிப்போக்கர்கள் வந்து கூறிச் செல்கிறார்கள் என்று சில தோழியர் கூறுவர். இங்ஙனம் மன்னனைப் பற்றிக் கூறுவதைக் கேட்டுக் கண்ணகி அவன் வரக் கூடும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து வந்தாள்.

## பேகன் மீட்சி

மன்னனைத் தேடிக் கொணர்வதாகக் கண்ணகியிடம் கூறிய புலவர் நால்வர்களும் நடந்து சென்று குன்றிடைத் தேடி நலிந்தார்கள். ஆற்றிடைத் தேடி அலைந்தார்கள். காட்டிடைத் தேடிக் களைத்தார்கள். வழியில் எதிர்ப்பட்டவர்களையும் வினவி வழி நடந்தனர்.

பரணர் பல இடங்களிலும் தேடிப் பார்த்து அலையும்பொழுது, "மன்னன் இங்கே உறைகிறான். அங்குமிங்குந் தேடி அலையற்க என்று ஒரு பூம்பொழில் குயில்மொழியா லுரைத்துஇலை விரல்களால் அழைத்தது. புலவர் அப்பொழிலை அடைந்தார். அவர் களைப்பை நீக்க மலர்க் கொடிகள் விசிறின. மாமரங்கள் அவர் பசிக்குக் கனிகளைக் கொடுத்தன. ஓடை அவர் உண்ணுவதற்கு நீருதவியது. பரணர் மரநிழலி லிருந்து யாழைக் கையிலெடுத்துச் செவ்வழிப் பண்ணை வாசித்தார். யாழொலி வேந்தன் காதில் விழுந்தது. இசை இனிமை யாயிருந்தது.

வாசிப்பவர் யார் என்று மனம் எண்ணியது. மெல்ல மெல்ல நடந்து வேந்தன் பரணரை அடைந்தான். அடைந்த மனிதனின் முகமும், அணிகள் அணிந்த மார்பமும், உடுத்திருந்த ஆடைகளும் அவனை அரசனென்று தெரிவித்தன. பரணர் முன் இசை கூட்டி வாசித்த செவ்வழிப் பண்ணை இனிமை தோன்ற எடுத்தும் படுத்தும் வாசித்தார். கள்ளுண்டு களித்த மனிதனைப் போலக் காவலன் இசையின் இனிமையைக் கேட்டுக் களிப் பெய்தினன்.

"மன்னவ! வணக்கம். நீ வாழ்க. உன் கொடையைக் கேள்விப் பட்டேன். உன் குணங்களையும் கேள்விப் பட்டேன். உன் ஒழுக்கத்தையும் கேள்விப் பட்டேன். உன் அறங்களையும் கேள்விப் பட்டேன். உன்னை நாடி வந்தேன். வந்த வழியில் ஒரு நங்கை அழுது புலம்பினள். அரண்மனையில் நீ இல்லை என்று கூறினள். அவ்வணங்கு உன்னைக் காடெல்லாம் தேடித் திரிந்தாள். அவளை அனுப்பிவிட்டு உன்னை நான் தேடி வந்தேன். அரசே! அவள் பொய்யில்லாத அன்புடையவள். கண்ணீரை உடம்பெல்லாம் வடித்துக் கலுழ்கின்றாள். புகைபட்ட ஓவியம் போன்று பொலிவிழந்து காணப்படுகிறாள். அவள் அல்லலைப் போக்கியருளவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அப்பொழுது பரணரைப் போலவே பல இடங்களிலும் தேடிய மூன்று புலவர்கள் அவ்விடத்தை வந்தடைந்தனர். அவர்கள் அரசனைக் கண்டு வணங்கினர். பரணர் அம்மூவரையும் அரசனுக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். "இறைவ! மயிலின் ஆடலுக்கு

மகிழ்ந்து ஆடையைப் பரிசில் கொடுத்தாய். ஒரு நங்கை அல்லலுற்று உன்னைத் தேடி அலைகிறாள். கண்ணீர் சிந்தி அழுகிறாள். அவள் அழுகைக் கிரங்கியும் எங்கள் வேண்டுகோளுக் கிரங்கியும் நீ தேரிலேறி ஊருக்குச் செல்லல் வேண்டும்'' என்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

மடத்தகை மாமயில் பனிக்கு மென்றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமும் இலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய் யோயென
இஃதியாம் இரந்த பரிசில் அஃதிருளின்
இனமணி நெடுந்தே ரேறி
இன்னா துறைவி அரும்படர் களைமே. புறம்-145

என்று பாடிப் பரணர் வேண்டினர்.

மெல்லிய தகைமையையுடைய கரிய மயில் குளிரால் நடுங்கும் என்று அருள் செய்து படாம் கொடுத்த அழியாத நல்ல புகழையுடைய மதம்பட்ட யானையையும், மனம் செருக்கிய குதிரையையுமுடைய பேக! யாம் பசித்து வருவேம் அல்லேம். எம்மாற் பரிக்கப் படும் சுற்றமுமுடையேம் அல்லேம். களாப் பழம் போன்ற கரிய கோட்டையுடைய சிறிய யாழை இசை இன்பத்தை விரும்பி யுறைவார் அவ்விசை இன்பத்தால் தலை யசைத்துக் கொண்டாடும்படி வாசித்து, அறத்தைச் செய்வாயாக அருளை விரும்பு

வோய் என இது, நின்பால் யாம் இரந்த பரிசில்; இற்றை இரவின்கண் இனபாகிய மணியையுடைய உயர்ந்த தேரை ஏறிப்போய்க்காண்டற்கு இன்னாதாக உறைகின்றவள் பொறுத்தற்கரிய நினைவாலுண்டாகிய நோயைத் தீர்ப்பாயாக'' என்பது அப்பாட்டின் பொருள்.

அரிசில் கிழார் மன்னனை நோக்கி, "கொல்லும் போரையுடைய பேக! அத்தன்மையவாக; நின்னால் தரப்பட்ட பெறுதற்கரிய ஆபரணமும் செல்வமுமாகிய அவை பெறுதலை விரும்பேம். சிறிய யாழைச் செவ்வழியாகப் பண்ணி வாசித்து நினது வலிய நிலமாகிய நல்ல மலைநாட்டைப்பாட என்னைக் காதலித்துப் பரிசில் தருவையாயின், தலைவனே! நீ அருளாமையாற் கண்டார் இரங்க மெலிந்து, அரிய துயரத்தால் வருந்தும் உன்னுடைய் திருந்திய அணியையுடைய அரிவையது தழைத்த மயிலினது பீலியைக்காலொன்றக் குவித்தாற்போன்ற தழைத்த மெல்லிய கூந்தற்கண்ணே மணங்கமழும் புகையைக் கொள்ளுவித்துக் குளிர்ந்த மணங்கமழும் மாலையைச் சூட வளவிய செலவையுடைய உயர்ந்த தேரை நின் குதிரைகள் பூண்பனவாக" என்னும் பொருள்பட.

அன்ன வாகநின் அருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம் அடுபோர்ப் பேக
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட, என்னை நயந்து
பரிசில் நல்குவை யாயின், குரிசில்நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்

அருந்துய ருழக்கும்நின் திருந்திழை யரிவை
கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே.

புறம்-146

என்னும் பாடலைப் பாடி வேண்டிக் கொண்டார்.

புலவர்கள் உரைத்த பொய்யில் உரைகளை மன்னன் கேட்டுக் கொண்டிருந்தான். "கற்பிற் சிறந்த கண்ணகி கல்லுறு வழியே அலைந்தழுதனள் போலும். புலவர்கள் உரைத்த சொற்கள் அவள் உடல் மெலிவை உணர்த்துகின்றன. அவள் உண்மைக் கற்பினை உணர்த்துகின்றன.

உருவில் நல்லவள் உரைப்பதில் நல்லவள் ஒன்றை
வருமுன் ஆய்பவள் என்மனங் கவர்ந்தவள் மனமொத்து
இருநிலத்திடை யாவையும் செய்பவள் இவளுக்கு
ஒருவர் ஒப்பிலர் கண்ணகி தேவியே ஒப்பாள்.

என்று தன்னுள் எண்ணி எண்ணி ஏங்கினன். புலவர் வேண்டுகோள் நினைந்தும், கண்ணகியின் மெலிவு எண்ணியும், வள்ளல் பேகன் செல்லத் துணிந்தான். தேர் வரவழைக்கப் பட்டது. தேரில் வேந்தனும் புலவர்களும் ஏறினர்கள்.

ஏறிய தேர் உருண்டு உருண்டு சென்றது. இருள் மெல்ல மெல்ல உலகை விழுங்கியது. அன்றில் தன் பெடையோடு கூட்டிற்குச் சென்று கொண்டிருந்தது. மான் தன் துணையொடு துயின்று கொண்டிருந்தது. அவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டே புரவலனும் புலவர்களும் நல்லூரை அடைந்தனர்.

## பிரிந்தவர் கூடுதல்

கண்ணகி தன் காதலன் வருவான் வருவான் என்று வாயிலுக்கு வருவதும் மீண்டு செல்வதுமாக இருந்தாள். சென்று கொண்டிருந்தவள் காவலன் ஏறி வந்த தேரையும் காவலனையும் கண்களினால் கண்டாள். காவலன் இறங்கியவுடன் அவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள். கண்ணீரை அவன் தோளில் வடித்தாள். ஒருவர்க்கொருவர் உரையாடினர். உள்ளம் ஒன்றின. அவர்கள் உணர்ச்சியும் ஒன்றுபட்டன. புலவர்கள் நால்வரும் அவர்களை வாழ்த்தி மாடத்திற்கு ஏகுவித்தனர். அமைச்சர்களும் உற்றூர் உறவினர்களும் குடிகளும் புலவர் நால்வர்களையும் புகழ்ந்தார்கள். ஏவலாளர்களும் மன்னனைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

மன்னன் புலவர் நால்வர்களுக்கும் பொன்னும் பூணும், ஆடையும், தேர் முதலியனவும் கொடுத்தான். அவர்கள் தன்னை விட்டுப்பிரிவதற்கு வருந்தினான். அவர்கள் கண்ணகியின் கற்பையும் காவலன் கொடையையும் புகழ்ந்தனர். விடை பெற்றுக் கொண்டு தேரேறித் தங்கள் ஊர்களுக்கு மீண்டனர்.

பரணரும் அவர் மனைவியும் அவர்கள் ஊருக்குச் செல்லும் வழியில் ஒரு பாணன் வந்தான். அவன் அவர்களைக் கண்டு நீவிர் யாவிர்? என்று வினவினன்.

"நீவிர் யாவிர் என எம்மைக் கேட்டல்மையாத புல்லென்ற சுற்றத்தையும் மிக்க பசியையுமுடைய

இரவலனே, வெற்றி வேலையுடைய தலைவனைக் காண்பதன் முன் யாம் நின்னினும் வறியேம். இப்பொழுது அவ்வறுமை நீங்கி இத்தன்மையே மாயினேம்; எந்நாளும், உடா போரா வாதலை அறிந்து வைத்தும் படாத்தினை மயிலுக்குக் கொடுத்த எம் இறைவன் மதமிக்க யானையினையும் மனஞ் செருக்கிய குதிரையினையுமுடைய பேகன் எவ்வளவாயினும் கொடுத்தல் அழகிதென்று, மறு பிறப்பை நோக்கிற்றோ எனின், அன்று; அவனது கைவண்மை பிறரது மிடியைக் கருதிற்று'' என்னும் பொருள்பட,

யாரீரோ என வினவ லானாக்
காரென் ஒக்கல் கடும்பசி இரவல
வெல்வேல் அண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியேம் மன்னே. இனியே
இன்னே மாயினேம் மன்னே என்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படா மஞ்ஞைக்கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினும் ஈத்தல் நன்றெனா
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே

புறம்-141

என்று பரணர் பாடி அப்பாணனைப் பேகனிடம் ஆற்றுப் படுத்தினர்.

பேகன் குடிகளுக்குப் பற்பல நன்மைகள் செய்து நாட்டை நன்கு ஆண்டு வந்தான். புலவர்களுக்கும் பாணர்களுக்கும் பல பொருள்

கொடுத்தான். அறுசுவை உண்டியும், அறிஞர் நட்பும், தமிழாராய்ச்சியும், பேகன் ஆட்சியில் தங்களுக்குக் கிடைத்தமையின் பிறவியே சிறந்தது என்று குடிகள் அவன் குடையின் கீழ் வாழ்ந்தனர். இறுதியில் பேகனும் அவன் மனைவி கண்ணகியும் பிறப்பிறப்பில்லாப் பெருமான் திருவடியை அடைந்தனர். அவர்கள் பிரிவை நினைந்து புலவர்களும் குடிகளும் உற்றாரும் உறவினரும் வருந்தினார்கள்.

கூடலை யிழந்தன தொடையல். தோகையர்
ஆடலை யிழந்தன அணிகொள் மேடைகள்.
பாடலை யிழந்தன பண்கள். பாவையர்
ஊடலை யிழந்தனர்; ஓவ மாயினர்

# 3 வள்ளல் ஆய்

## ஆட்சி

முருகக் கடவுளைப் போலத் தனக்கென்று உருவமின்றி, எல்லா உயிர்களிடத்திலும் கலந்திருந்து, தன் வருகையை நாடும் மக்களுக்கு இன்பம் நல்கித் செந்தமிழோடு உறவு கொண்டுள்ள தென்றல் தோன்றும் இடம் பொதிய மலையாகும். அம்மலையருகே ஆய்குடி என்னும் ஒரூருண்டு. இமயமென்னும் பாரத்தை வடக்கிற் கொண்டு கடல் நடுவணிருக்கும் நிலமாகிய மரக்கலம் கவிழ்ந்து அமிழாதபடி அவ்வாய் குடி தெற்கில் விளங்குகிறது. அவ்வாய்குடி நகருக்கு ஆய் அண்டிரன் என்பான் அரசனுவான்.

ஆய் அண்டிரனுக்குப் பல மனைவியரிருந்தனர். அம்மனைவியர் மனத்தின் வழிச் செல்லும் பொறிகளைப் போன்று மன்னன் கருத்தின் வழி நடந்தனர். அண்டிரன் தன்னை வணங்குவார்க்கு மதியம்போல் தண்ணருள் செய்தான். பிணங்குவாரை ஞாயிறு போல் காய்ந்தான். வண்டமிழ்ப் பாவலர்களுக்கு மழைபோல் வரையாது செம்பொன் வழங்கினுன். பொதிய மலை நாடாகிய செய்யில் பொருளாகிய உரமிட்டு அன்பாகிய நன்னீர் பாய்ச்சி வடமொழிச் சொற்களாகிய களைகளைந்துக் கட்டுத்தமிழாகிய பைங்கூழை வளர்த்தான். பிறப்பிறப்பில்லாப் பெருமானை வணங்கி வாழ்ந்தான். குடிகள் அறவழியில் நடந்தார்கள். மகளிர்கள் தங்கள் மணவாளர் கருத்தின் வழி

நடந்தனர். துறவிகள் தவஞ்செய்து தங்கள் கருத்தை இறைவனிடம் செலுத்தினர். காவலன் கவலையின்றி நாட்டைக் காத்து வந்தான்.

## ஆலமர் கடவுள் அடியினை வணங்கல்

ஒரு நாள் அண்டிரன் மழையினால் வளம் பெற்ற மலையையும் சோலையையும் காண்பதற்கெண்ணித் தன் வாம்பரி இவர்ந்து சென்றான். செல்லும் நெறியில் தென்றல் சிறுகுழவிபோல மெல்ல அசைந்து வந்து விழுந்து மெய்க்கின்பஞ் செய்தது. ஒருசார், கருமணியோ என மனத்தைக் கலங்குவிக்கும் வண்டு இன்னிசை பாடிக்கொண்டிருந்தது. கொடிகள் தங்கள் மலர்களாகிய வள்ளத்தில் தேன் ஏந்தி உண் என அதற்கு ஈந்தன. வேங்கை மரம் பசும்பொன் மலர்களைப் பரிசளித்தது. கமுகு அரும்புகளாகிய முத்தங்களை அளித்தது. ஒருசார், அண்டிரன் வாழ்க! எங்கள் அருந் தமிழ் வாழ்க என்று மங்கையர் சிலர் மகிழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தனர். வேட்டுவ இளைஞர்கள் மான் முதலிய விலங்குகளைத் தேடிக் கண்டு வில்லினாலும் வேலினாலும் வேட்டையாடித் திரிந்துகொண்டிருந்தனர். கன்றுகள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. கலைமான்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தன. மக்காள், வேய் முத்தங்களையும், வேழ முத்தங்களையும், வேறு பொருள்களையும், நீவிர் விரும்புவனவற்றையும் கொண்மின் என்று, முகிலொலியை முரசொலியாக்கி, வெற்பிலிருந்து அருவி ஒரு பால் வீழ்ந்து கொண்டிருந்தது. அக்காட்சிகளை

யெல்லாம் காவலன் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான். அவ்விடத்தில் மன்னன் வருகையை ஒரு கருநாகம் கண்டது. அழகு மிகுந்த ஆடையொன்றை அவன் முன் வைத்தகன்றது. அதனைக் கண்டு தன் பரியிழிந்து எடுத்து விரித்துப் பார்த்தான். மென்மையில் பாலாவியை ஒத்திருந்தது. விளங்குதலில் பொன்னை ஒத்திருந்தது. கரு நாகம் இதனை என் முன் கொண்டு வந்து வைப்பதற்கு என்ன காரணம்? அதன் கருத்தை என்னால் அறிய முடியவில்லையே. அதன் கருத்தெவ்வாறிருப்பினும் கல்லாலின் கீழிருந்து தன்னை அறியும் நெறியைச் சொல்லாமல் சொல்லும் சிவபெருமானுக்கு இதனைச் சாத்தி வணங்குவேன் என்று எண்ணி அம்மலையருகிலிருந்த கோயிலை யடைந்து அப்பெருமானுக்குச் சாத்தி,

ஞாலம் படைத்தாய் செஞ் ஞாயிற்றினைப் படைத்தாய்
சாலச் சிறந்த தவத்தி னியல் புரைத்தாய்
சாலச் சிறந்த தவத்தி னியல் புரைத்த
ஆலமர் செல்வநின் னடியைப் பரவுதுமே

மண்ணைப் படைத்தாய்நன் மக்கள்தம் மைப்படைத்தாய்
உண்மைத் தவத்தை யுலகுக் குணர்த்துவையால்
உண்மைத் தவத்தை யுலகுக் குணர்த்தியநின்
தண்ணந் திருவடிச்செந் தாமரையைப் போற்றுதுமால்

உலகைப் படைத்தடியார் உய்யக்கல் லாலிருந்து
நலனைத் தருஞ்சிறந்த நன்னெறியைக் காட்டுவையால்
நலனைத் தருஞ்சிறந்த நன்னெறியைக் காட்டியநின்
பொலந்தா மரையடியைப் புகழ்ந்து பரவுதுமால்

என்று பாடிப் பணிந்தெழுந்து தன் அரண்மனையை அடைந்தான்.

## ஓடைகிழார் வருகை

ஆய் அண்டிரன் காலத்தில் ஒடைகிழார் என்னும் பாவலரொருவரிருந்தார். அவர் துறையூரில் வாழ்ந்து வந்தவர். மிகுந்த வறுமையுடையவர். அவ்வறுமையை நீக்குவதற்கு அரசனிடஞ் சென்று பரிசில் பெற எண்ணினார். வருக என்று மகிழ்ந்து கொடுப்பவன் அண்டிரன் என்று தம்மிடம் வந்த புலவர் பலர் கூறினர். அதனைக் கேட்ட ஓடைகிழார் தம் ஊரை விட்டுப் புறப்பட்டார். வழியில் தெளிந்த நீரையுடைய பொய்கையொன்றிருந்தது. அப்பொய்கையின் கரைகளில் வளர்ந்தோங்கிய மரங்கள் அடர்ந்திருந்தன. அம்மரங்களின் நிழலுருவங்கள் நீரில் காணப்பட்டன. அம்மரங்களிலிருந்த கிள்ளைகள் அந்நீரினுட் காணப்பட்ட நிழலுருவங்களை நீண்டுயர்ந்த நெடு மரங்கள் என்று நினைந்து. அம்மரங்களை எங்ஙனம் அடைவது என்று மயங்கி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தன. புலவர் அக்கிளிகளின் மயக்கத்தைக் கண்டு புன்னகை புரிந்து அப்புறம் போயினர். வழி நடந்து, சின்னாளில் தம்முடைய நாடாகிய சோழ நாட்டைக் கடந்து பாண்டிய நாட்டை அடைந்தார். மலர்களையும், மணிகளையும், பொன்னையும், முத்துக்களையும் திரைக் கைகளால் இரு கரைகளிலும் எற்றிக் கொண்டு வைகையாறு வற்றாது சென்றுகொண்டிருந்தது. மதுரை மாநகரிலுள்ள ஆடவர்களும் மகளிரும் பொன்னினால் மீன்கள் செய்து அவ்வாற்றில் போட்டு வணங்கி நீராடினார்கள். ஓடைகிழாரும் நீராடியெழுந்து, நீண்ட மாடங்களையுடைய நெடுந்தெருக்

கள் வழியாகச்சென்று குன்றினும் உயர்ந்த கோபுரங்களையுடைய கோவிலையடைந்தார். உள்ளே நுழைந்தார். ஓவியந் திகழும் உயர்ந்த தூண்களைக் கண்டு மகிழ்ந்து சென்று கண்ணுதற் பெருமானைக் கண்ணுரக் கண்டு கைகூப்பித் தொழுது பணிந்தெழுந்து விடைபெற்று வெளியே வந்தார். மதுரைமா நகரைக் கடந்தார்.

கோடைகாலத்தில் வெயிலால் வெந்துயர் அடைந்த தங்களுக்கு மேகம் மழை பெய்து நீருதவிய நன்றியை எண்ணி, நீர் நிறைந்த இளநீர்களைத் தலையில் தாங்கி, மேகமே உண் என்று உயர்ந்த தென்னை மரங்கள் நின்று கொண்டிருந்தன. அம் மரங்கள் நின்று நிழல் தரும் நீண்ட வழியிலே நடந்து சென்றார். வழியில் ஒரு பாலை நிலம் குறுக்கிட்டது. அது நீரும் நிழலு மில்லாதது. அவ்வருஞ்சுரத்தைப் பாவலர் நடந்து கடந்தார். அவர் மேலும் நடந்து கனிமிருந்த காவொன்றை அடைந்தார். அது களைத்து வந்த அப் புலவருக்கு முன்புநிழலைக் கொடுத்துப், பின்பு இன் சுவை யுடைய கனிகளை ஈந்தது அவர் அக் கனிகளை யுண்டு களைப்பு நீங்கி அக்காவைக் கடந்தார் மேலும் நடந்தார். புலவர் அரசரிருக்கும் ஆய்குடியை நண்ணி அழகிய மாடங்களையுடைய அகன்ற தெருவின் வழியாகச் சென்று அரண்மனையை அடைந்தார்.

உடல் மெலிவெய்திய ஓடைகிழார் நடை தளர் வெய்தி நடந்து, கண்களைக் கற்றவர் வருகையைக் காண்பதில் செலுத்திக்கொண்டிருந்த காவலன் முன் சேர்ந்தார். காவலன் வருக என்று வரவேற்று,

இருக்க என்று இயம்பினன். புலவர் இருக்கையி லிருந்து, "அரசே என்னுடைய வறுமையை அறிவான் ஆயே எனக் கருதி எமது வாக்கினால் மிகவும் நினது பெயரை வாழ்த்தி ஞாயிறுபட்ட சுரத்தின் கண்ணே ஏறி இவண் வந்தடைந்தேன். வறுமையுற்ற எங்க ளுக்கு ஒன்றை இடுவாரன்றே பயன்கருதாது ஒன்றை இடுமவராவார்; எம்மை யொழிந்த பிறர்க்கு இடுவாரன்றே பயன் கருதியிடுதலால் தங்களுக்கே இடுவாராவர். நீ நினக்குப் பொருந்தியது ஆராய்ந்து எமக்குப் பரிசில் தந்தனையாய் விடுவாயாக. துறை யூர்த் துறையின்கணுள்ள நுண்ணிய பன்மணலினும் நீ பன்னாள் வாழ்வாயாக என நின்னை வாழ்த்தி நீ தந்த செல்வத்தை உண்டு வாழ்வேம்" என்று தம் வறுமையை எடுத்துரைத்தார். ஆய் அண்டிரன் அவருரையை அகங்குழைந்து கேட்டான். அவர் வறுமையை நீக்கக் கருதி அள்ளி அள்ளி அன்போடு பல பொருள்களைக் கொடுத்தான். அவர் களைப்பின்றி ஏறிச் செல்வதற்கு ஒரு களிறும் கொடுத்தான். கொடுத்தவற்றைக் கொண்டு மகிழ்ந்து அவனிடம் விடைபெற்று வேழத்திவர்ந்து வீடு சேர்ந்தார்.

## கொங்கர் போர்

வேறேரின்றி, ஓரேரேயுடைய உழவன் தன் செய்யில் உயர்ந்து வளர்ந்த பயிர்களை ஓம்பிக் காப் பது போல ஆய் அண்டிரன் தன் நாட்டிலுள்ள குடி களை நாடிக் காவல் புரிந்துவந்தான். அக்காலத்தில் அண்டிரன் நாட்டிற்கு அருகே வாழ்ந்து வந்த சேரர்

களாகிய கொங்கர் அவனிடத்தில் அழுக்காறும் பகைமையுங் கொண்டிருந்தனர். அவர்கள் திடீரென்று திரண்டு வந்து பொதிய நாட்டில் புகுந்து கொள்ளைகொண்டனர். கொள்ளைக்கு ஆளாகிய குடிகளில் சிலர் ஓடிவந்து கொங்கர் வேலும் வாளும் ஏந்தி ஊரைக் கொள்ளை கொள்கிறார்கள். எங்கள் இடுக்கணை நீக்கவேண்டும் என்று வணங்கி நின்று கூறினர். அதனைக் கேட்டவுடன் வெகுண்டெழுந்து தன் தானையை நடத்தி விரைந்தேகிக் கொள்ளை கொள்ளும் கொங்கரைக் கண்டனன். கொங்கரும் அண்டிரன் வீரரும் ஆர்த்தெழுந்து போர் புரிந்தனர்.

கொட்டு சங்கம் ஆர்க்க எங்கும்
கொல்லு செல்லென் றேகுவார்
வெட்டு வேமென் றேகு வார்முன்
வில்லி லம்பி ணைப்பரால்
சுட்டு வாரைக் கிட்டு வார்முன்
சூழுவாரை வெட்டுவார்.
பட்டு வீழு வாரை நண்ணிப்
பற்றி யுண்ணும் பாற்றினம்.

அதிர்ந்து வாளி தம்முள் முட்டும்
ஆவி யுண்ணும் முன்பு போய்.
எதிர்ந்து வாள்கள் முட்டும். முன்னம்
ஏகி யாவி யுண்ணுமால்.
முதிர்ந்த வெஞ்சி னத்த எஃகம்
முட்டும். மார்பில் மூழ்கு மால்.
சிதைந்து கால்கை சென்னி வீழும்.
செந்நீர் கொண்டு செல்லுமே.

போர்க்களத்தில் இங்ஙனம் இருதிறத்தாரும் பொருகையில், அண்டிரன் வில்லெடுத்து வாளும் வேலும் ஏந்தி வெகுண்டு களம் புகுந்தான். அவன் வில்லில் தொடுத்த அம்புகள் கொங்கர் மார்பில் பாய்ந்து புண்படுத்தின. மார்பில் பாய்ந்து கழன்று அப்புறமும் போயின. அப்புறம் போகிய அம்புகளும் நிலத்தில் விழுவனவல்ல. அவை அடுத்து நிற்கும் வீரர்கள் மார்பில் பாய்ந்து பாய்ந்து அவர்கள் உயிர்களையும் உண்டு சென்றன. நின்று எதிர்ந்த வீரர்கள் நிலத்தில் வீழ்ந்தார்கள். எஞ்சிய வீரர்களும் வேங்கை பாய்ந்த மானினம்போல வெருண்டு தங்கள் கைகளிற் பிடித்திருந்த வேல்களை நிலத்தில் எறிந்துவிட்டு விரைந்து புறங்காட்டித் தந்நாடு போய்ச்சேர்ந்தனர். ஓடிய கொங்கர்களைக் கண்டு அண்டிரன் இகழ்ந்தானல்லன். ஓட்டிய தன்னையும் புகழ்ந்து கொண்டானல்லன். வீரர்கள் கூடினார்கள். அவ்வூர்க் குடிகள் குழுமினார்கள். எல்லாரும் அவனைப் புகழ்ந்தார்கள். அண்டிரன் தன் படையுடன் ஆய்குடி வந்து சேர்ந்தான்.

அண்டிரன் விற்றிறமையைக் கேட்டு வேற்று நாட்டு வீரர்கள் புகழ்ந்தனர். அவனுடைய வள்ளன்மையைக் கேட்டுப் புலவர்களெல்லாம் புகழ்ந்துரைத்தனர். அவனுடைய முறைமையைக் கண்டு மக்களெல்லாம் மகிழ்ந்து வாழ்த்தினர்.

## மோசியார் வருகை

சோழ நாட்டிலுள்ள உறையூரில் மோசியாரென்னும் புலவரொருவர் வாழ்ந்து வந்தார்.

அவருக்கு ஒரு கால் முடம். அதனல் அவர் முட மோசியார் என்று அழைக்கப்பட்டனர். அவர் அண்டிரன் போர்த்திறமையையும், கொடை மிகுதியையும், முறைமையையும், அறத்தையும் பலர் கூறக் கேட்டனர். அங்ஙனம் ஒரு மன்னன் இருப்பின் அவனைக் கண்டு வரவேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டுத் தன்னூரை விட்டகன்ருர். அகன்றவர் நடந்து நடந்து கரும்புபோல் நெல் வளரும் காவிரி நாட்டையும், தென்றல் வந்துலவும் செந்தமிழ் நாட்டையும் கடந்து, புலவர்கள் புகழும் பொதியமலை நாட்டை நண்ணினர். மேலும் நடந்து செல்லும் பொழுது,

பொன்னிலேம் அண்டிரன் போன்ற ளிப்பதற்கு
இன்கனி உண்ணுகென் றீயும் மாமரம்
நன்கனி வாழைகள் வணங்கி நல்குமால்
முன்உதிர்த்தனபலா முதிர்ந்த தீஞ்சுளை

மாம் பழங்களையும் வாழைப் பழங்களையும் பலாப் பழங்களையும் உண்டு காவில் களைப்பாறி மோசியார் நடந்தார். வழியில் ஒரு சிற்றூர் குறுக்கிட்டது. அதன் வழியாகச் செல்லும்பொழுது, அவ்வூரிலுள்ள வேடர்கள் பழச் சாறுகளையும் தேனையும் பருகி வேங்கைமர நிழலில் ஆடிப் பாடி அகமகிழ்வதைக் கண்டு அப்பால் சென்ருர். மங்கையர் போன்று மட வன்னங்கள் ஒருபால் நடந்து கொண்டிருந்தன. பொருசிலை மறவர்களைப் போன்று செருவிடைகள் ஒரு பால் திரிந்து கொண்டிருந்தன. அண்டிரனிடம் பரிசில் பெற்று அவன் உவந்தளித்த யானைகளோடு

சிலர் எதிரே வந்தனர். சிலர் அவனிடம் பரிசில் பெறச் சென்றனர். சிலர் அவனைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் நடந்தனர். அவற்றையெல்லாம் புலவர் கண்டும் கேட்டும் நடந்து ஆய்குடியை அடைந்து அரசன்முன் சென்று வணங்கி நின்றனர். மன்னன் வரவேற்று இருக்கையளித்தனன்.

மோசியார் இருக்கையி லமர்ந்து அரசன் முகத்தையும் மார்பையும் நிமிர்ந்து பார்த்தார். செருவில் பட்ட செம்புண்கள் அவற்றில் காணப்பட்டன. அவனைக் கண்ணுறக் கண்டு, என் கருத்து முடிந்தது என்று எண்ணி எழுந்து நின்றார். "அரசே பகைவரது மிக்க மாறுபாட்டை வென்ற வலியையுடைய, யாவரும் ஒப்பப் புகழும் நாட்டையுடையாய், மாவேளாகிய ஆயே யாம் வேண்டியது யானையுமன்று; குதிரையுமன்று; விளங்கிய பொற்படையையுடைய குதிரையிற் பூட்டப்பட்ட தேருமன்று; பாணரும் புலவரும் கூத்தர் முதலாயினருமாகிய அவர்கள் தம்முடைய பொருளென வளைத்துக் கொள்வாராயின் அதனை எம்முடையதென்று மீண்டு கைக்கொள்ளுதலைத் தெளியாத பயன் பொருந்திய உரிமையோடு கூடி மற்றும் அத்தன்மையவாக, நின்னுடைய வாழ்நாட்கள்; யான் வந்தது நின்னைக் காண்டல் வேண்டிய மாத்திரையே" என்னும் பொருள்பட,

மலைகெழு நாடன் மாவே ளாஅய்
களிறு மன்றே; மாவு மன்றே
ஒளிறு படைப் புரவிய தேரு மன்றே
பாணர் பாடுநர் பரிசிலர் ஆங்கவர்

தமதெனத் தொடுக்குவ ராயின் எமதெனப்
பற்றல் தேற்றுப் பயங்கெழு தாயமொடு
அன்ன வாகநின் ஊழி நின்னைக்
காண்டல் வேண்டிய அளவை வேண்டார்
உறுமுரண் கடந்த ஆற்றல்
பொதுமீக் கூற்றத்து நாடுகிழ வோயே, புறம்-135.

என்று பாடினர்.

மன்னன் அப் பாடலமுதினைப் பருகினன். பரிசில் பெறுவதற்கே பாவலர் பலர் வருவது வழக்கம். இவர் நின்னைக் காண்பதற்கே வந்தேன் என்று கூறுகிருர். பரிசில் பெறவரவில்லை என்கிருர். இவருக்கு இன்று அளித்திலேமெனின் நமது கொடைக்கு ஓரி ழுக்கேற்படும் என்று பலருக்கும் கொடுப்பதுபோலப் பல பரிசிலும் களிறும் வழங்கினன். வள்ளல் தருங் கொடைக்கு ஒரு வரம்புமின்று போலும். நம் கருத்தினை எடுத்துக் கூறிய பிறகும் கொள் எனக்கொடுத்தனன்; கொடுப்பதனைக் கொள்ளாது தள்ளுதல் தவறு என்று எண்ணி, அவற்றைப் பெற்றுக் கொண்டார். புலவர் அவனைப் புகழ்ந்து "யாவரினும் முன்னே நினைக்கப் படுமவனைப் பின்னே நினைத்தேன் யான். அவ்வாறு நினைத்த குற்றத்தால் எனது உள்ளம் அமிழ்ந்திப் போவதாக. அவனையன்றிப் பிறரைப் புகழ்ந்த நாவும் கருவியாற் பிளக்கப் படுவதாக. அவன் புகழையன்றிப் பிறர் புகழைக் கேட்ட எனது செவியும் பாழ்பட்ட ஊரின்கண்ணுள்ள கிணறு போலத் தூர்வதாக; வடதிசைக்கண்ணதாகிய வானைப்பொருந்தும் இமயமலையும், தென்திசைக்கண்

ஆய் குடியும் இல்லையாயின், இந்தப் பரந்த இடத்தை யுடைய உலகம் கீழ்மேலதாகிக் கெடும்'' என்னும் பொருபட,

முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனே
ஆழ்கென் னுள்ளம் போழ்கென் நாவே
பாழூர்க் கிணற்றில் தூர்க என் செவியே
......... ......... .........
வடதிசை-யதுவே வான்றோய் இமயம்
தென்றிசை ஆஅய் குடி யின்றாயின்
பிறழ்வது மன்னோஇம் மலர்தலை யுலகே. புறம்-132

என்னும் செய்யுளைப் பாடினார்.

முடமோசியார் ஆய்குடியில் சின்னாள் தங்கி யிருந்தார். மன்னன் நாளோலக்கத்தில் என்ன என்ன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்று சின்னாள் சென்று பார்த்தார். நாடோறும் பல புலவர்களும் பல பாணர்களும் பல பாடினிகளும் பரிசில் வாங்க வந்திருந்தனர். அப் பரிசிலர்களுக்கு அண்டிரன் உயர்ந்த பரிசிலாகிய யானைகளையே மகிழ்ந்து கொடுத்தான். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான யானைகள் கொடுக்கப்பட்டன. மோசியாருக்கு வியப்பின் மேல் வியப்பு மிகுந்தது நெஞ்சில் அவ்வியப்பு நிற்க வில்லை. "விளங்கிய மணிகளாலியன்ற வளைந்த பூணு கிய ஆரத்தையுடைய ஆயே! நினது நாட்டின்கண் இளையபிடி ஒரு கருப்பத்திற்குப் பத்துக் கன்றுகள் ஈனுமோதான்? நின்னையும் நின்மலையையும் பாடிவரும் பரிசிலர்க்கு இனிய முகத்தை ஒளியாது வெளிப்படுத்திக் காதலித்து நீ கொடுத்த தலைமையை யுடைத்தாகிய யானையை எண்ணின், நீ கொங்கரை மேல்

கடற்கண்ணே ஓட்டப்பட்ட நாளில் அவர் புறங் கொடுத்தலால் தம்மிடத்தினின்றும் பெயர்த்துப் போகட்டப்பட்ட வேலினும் பலவாகும்" என்னும் பொருள்பட,

விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய் நின்னாட்டு
இளம்பிடி ஒருசூல் பத்தி னும்மோ
நின்னும்நின் மலையும் பாடி வருநர்க்கு
இன்முகங் கரவாது உவந்துநீ அளித்த
அண்ணல் யானை எண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே. புறம் - 130

என்னும் பாடலைப் பாடிப் புகழ்ந்தார்.

ஆய் அண்டிரன் வள்ளன்மையும் ஆட்சி முறையும் மோசியாரை அகமகிழ்வித்தன. அவன் ஊரும் நாடும் அவர் கண்களுக் கின்பூட்டின. பொதியமலையில் பிறந்துலவுந் தென்றலிளஞ் சிறுகாற்று அவர் மேனிக்குப் புத்துணர்ச்சி கொடுத்தது. ஆய்குடியை விட்டு அகல மனம் எழவில்லை. அதனால் தான் பிறந்து உறைந்த உறையூரையும் மறந்து ஆய்குடியைத் தம் உறைவிடமாகக் கொண்டார். அரசரனைவரையும் மறந்து ஆய் அண்டிரனையே உறுதுணையாகக் கொண்டார். அவன் புகழையே அடிக்கடி அங்கிருந்து பாடிக்கொண்டு வந்தார்.

ஒருநாள் முடமோசியார் மலைவளனும் பொழில் வளனுங் காணுவதற் கெண்ணினர். எண்ணியவர் உயர்ந்த தென்னை மரங்களும் மாமரங்களும் பலா மரங்களும் நின்று நிழல் செய்யும் நீண்ட நெறிவழியே

நடந்து சென்றார். வெயில் நுழைவறியாக் குயில நுழை பூம்பொழில் ஒன்றை அடைந்தார். ஆயினிடம் பரிசில் பெற எண்ணி ஒரு விறலி அப்பொழிலின் வழியாக நடந்து வந்தாள். வந்தவள் மோசியாரைக் கண்டு அரசன் ஆய் அண்டிரன் பரிசில் தருவான் கொல் என வினவினாள். "மெல்லிய இயல்பினையுடைய விறலி நீ நல்ல புகழைச் செவியாற் கேட்பினல்லது அவன் வடிவைக் காண்டலறியாய். காண்டலை விரும்பினையாயின், மாட்சிமைப்பட்ட நினது மணம் வளருங் கூந்தலிலே வரையிடத்துக் காற்று வந்தசைப்பப் பீலியை யுடைய மயில்போலக் காட்சி யுண்டாக நடந்து மழைபோன்ற வண்மையுடைய தேரினையுடைய வேள் ஆயைக் காணச் செல்வாயாக" என்னும் பொருள்பட,

மெல்லியல் விறலி நல்லிசை செவியிற்
கேட்பி னல்லது காண்பறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக்
கலவ மஞ்ஞையிற் காண்வர இயலி
மாரி யன்ன வண்மைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே. புறம் - 133

என்று பாடி அவ்விறலியை ஆற்றுப் படுத்தினர்.

மோசியார் பொழில்வளங் காணச் சென்றார். மாதவி மரங்கள் மலர்களையுடைய மல்லிகைக் கொடிகளைச் சுமந்து ஒருபால் நின்றன. வேங்கை மரங்கள் முகைகளையுடைய முல்லைக் கொடிகளைச் சுமந்து ஒருபால் நின்றன. பாதிரியும் சண்பகமும் மலர்களை

மலர்த்து மணம் விரித்து ஒருபால் நின்றன. தே மா மரங்கள் இன்சுவையுடைய பல கனிகளை ஏந்தி நின்று ஒருபால் வருவார்க் கெல்லாம் கனிகளை வழங்கின. தென்றற் காற்று மலர்களின் மணங்களைக் கவர்ந்து அசைந்தசைந்தேகி விசிறிற்று.

மல்லிகையைச் சுமந்தொருபால் மாதவிகள்
 நிற்கும் ஒருமருங்கு. வேங்கை
முல்லைநெடுங் கொடிசுமக்கும். பாதிரியும்
 சண்பகமும் முருகு யிர்க்கும்.
செல்வமிகு நல்லவரிற் பல்கனிகள்
 வருவார்க்குத் தேமா நல்கும்.
மெல்லிதழ்ப்பூ மணங் கவர்ந்து கடலலையின்
 நடைபயின்று விசிறுந் தென்றல்.

மோசியார் அவற்றை யெல்லாம் கண்டு களித்து நடந்து சென்றார். காடொன்று காணப்பட்டது. அங்கே மான்கள் தினைப்பயிர்களைத் தின்று கொண்டிருந்தன. யானைக் கன்றுகள் மூங்கில் இலைகளைத் தின்று கொண்டிருந்தன. பன்றிகள் நிலத்தை அகழ்ந்து கிழங்குகளைத் தின்று கொண்டிருந்தன. களிறுகளும் பிடிகளும் கால்கொடு செல்லும் சிறு குன்றுகளைப் போல் நடந்து பல இடங்களிலும் படர்ந்து சென்றன. கணக்கற்ற களிறுகளையும் பிடிகளையுங் கண்ட புலவர் வியப்படைந்தார். ஆய் தன்னிடம் வருவார்க் கெல்லாம் களிறு கொடுக்கும் வள்ளன்மை நினைப்பிற்கு வந்தது. "முகிலினம் சென்று தங்கும் உயர்ந்த மலைக்குத் தலைவன், சுரபுன்னைப் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினையும் வாய்த்த

வாளினையு முடைய அண்டிரனது மலையைப் பாடி னவோ களிறுகளை மிகவுடைய இந்தக் கவினுடைய காடு !" என்று மனத்தில் எண்ணினர்.

மழைக் கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறு மிகவுடையஇக் கவின்பெறு காடே. புறம்-131

என்ற பாட்டைப் பாடினர். பாடி ஆயையும் புகழ்ந் தார். அவன் காட்டையும் புகழ்ந்தார். மேலும் நடந்தார்.

புலவர் பொதியமலை யருகே போனர். ஒருபால் அருவி விழுந்து கொண்டிருந்தது. ஒருபால் அடர்ந்த பச்சிளங் கொடிகள் மலர்களைச் சுமந்து கொண் டசைந்தன. மலைவேடர்கள் தினையையும் ஐவன நெல்லையும் வித்தி விளைப்பதற்கு, வளர்ந்து நின்ற அகிலினையும் சந்தன மரங்களையும் வெட்டி நெருப் பிட்டு அழித்துக் கொண்டிருந்தனர். அவரால் எரிக் கப்பட்ட அகிற்புகையும் சந்தனப் புகையும் காடெல் லாம் கமழ்ந்து வானெழுந்து மலையுச்சியை யடைந் தது. மழை பெய்வதற்கு முகிலும் வான்வழியாக மலையுச்சியை யடைந்தது. புகையும் முகிலும் அம் மலைக்கு வெண்ணிறமுடைய குடைபோல் விளங் கின. மோசியார் வேறு பல காட்சிகளையும் கண்டு களித்துச் சென்ற வழியே மீண்டார்.

அண்டிரன் தன் நாட்டுக் குடிகளுக்குப் பற்பல நன்மை புரிந்து வந்தான். வரும் புலவர்களுக்கும் பாணர்களுக்கும் களிறுகளும் வேறு பரிசில்களும்

கொடுத்தான். தமிழ் இலக்கணங்களையும் இலக்கியங்களையும் முடமோசியார் முதலிய பல புலவர்களோடு கூடியிருந்து கற்று மகிழ்ந்தான். மனைவி மக்களோடு மனமொத்து வாழ்ந்து வந்தான். மாற்றரசர்களை வென்று வாகை சூடி மன்னர்களால் புகழப்பெற்றான். இங்ஙனம் ஆய் அண்டிரன் வாழுங் காலத்தில் இரக்கமில்லாத கூற்றுவன் வந்து சேர்ந்தான். உடம்பினின்றும் உயிரைப்பிரித்து வானின் வழியாகக்கொண்டு சென்றான். வானவர்கள் அவன் வருகையை அறிந்தார்கள். வச்சிராயுதத்தையுடைய இந்திரன் கோயிலிலுள்ள முரசங்களை அடித்து ஆர்த்து அவனை வரவேற்றார்கள். பின்பு இறைவன் திருவடி நீழலை எய்தி இடையறா இன்பமெய்தினான்.

கணவன் பிரிவுக்கு அவன் காதலியர்கள் வருந்தினார்கள். அழுதார்கள்; அலறினார்கள்; நிலத்தில் விழுந்தார்கள். அவர்கள் மனம் அமைதியடையவில்லை. மாழ்கி மாழ்கி மனைவியரனைவரும் அவன் சென்ற நெறியே சென்று மண்ணுலக வாழ்க்கையைத் துறந்தனர். நாட்டிலுள்ள மக்களனைவரும், புலவர்களும் பாணர்களும் அழுது அழுது உருகினர்.

புனலுகுத் தழுகார் யாரே
புலம்பி நின் றிரங்கார் யாரே
மனமழன் றுருகார் யாரே
கூற்றினை வையார் யாரே
இனமெலாங் கூடிக் கூடி
யிணைந்திணைந் தழுவார் மாழ்கும்
அனமென நடந்து நோக்கி
அரிவையர் அழுது நைவார்

அண்டிரன் உடம்பையும் அவன் மனைவியருடம்பையும் அந்நாட்டு மக்கள் எடுத்துச் சென்றார்கள். அவ்வுடல்களை நெருப்பிலிட்டு எரித்தனர். அவனுக்கும் அவன் மனைவியர்களுக்கும் கோவிலெடுத்துக் கும்பிட்டு வழிபாடு செய்தனர்.

குட்டுவன் கீரனார் என்ற புலவர் ஆய் அண்டிரன் பிரிவுக்கு மனம் வருந்தி, "களத்திற் கேற்ப நடக்கும் அசைந்த நடையையுடைய குதிரையும் யானையும் நாடும் ஊர்களும் பாடுவார்க்குக் குறையறக் கொடுக்கும் ஆயாகிய அண்டிரன் காலன் என்று சொல்லப் படாநின்ற கண்ணோட்டமில்லாதவன் கொண்டு போகத் தேவருலகத்தை அடைந்தானாகக் கொண்டு பொந்தாகிய தான் வாழுமிடத்துப் போழ்ந்தாற்போலும்வாயலகையுடையபேராந்தைசுட்டுக்குவியென்று செத்தோரை அழைப்பதுபோலக் கூவும் கள்ளியையுடைய பாழிடமாகிய புறங்காட்டுள் ஒருபுடையிலே தங்கி ஒள்ளிய தீச்சுட உடம்பு மாய்ந்துவிட்டது போலிவிழந்த கண்ணையுடையராய்த் தம்மைப் பாதுகாப்போரைக் காணாது ஆரவாரிக்குங் கிளையுடனே செயலற்று அறிவுடையோர் தம் மெய்யுணங்கிய பசியுடையராய்ப் பிறருடைய நாட்டின்கண் தலைப்படும் போக்கையுடையராயினர் இப்பொழுது ; இஃதொரு நிலை இருந்தவாறென்னே" என்னும் பொருள்பட,

ஆடுநடைப் புரவியுங் களிறுந் தேரும்
வாடா யாணர் நாடும் ஊரும்
பாடுநர்க் கருகா ஆய் அண்டிரன்
கால னென்னுங் கண்ணிலி யுய்ப்ப

மேலோ ருலகம் எய்தின னெனுஅப்
பொத்த வரையுட் போழ்வாய்க் கூகை
சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்
கள்ளியம் பறந்தலை ஒரு சிறை யல்கி
ஒள்ளெரி நைப்ப உடம்பு மாய்ந்தது.
புல்லென் கண்ணர் புரவலர்க் காணுது
கல்லென் சுற்ற மொடு கையழிந்து புலவர்
வாடிய பசிய ராகிப் பிறர்
நாடு படு செலவின ராயின ரினியே புறம் - 240

என்னும் பாட்டைப் பாடினர். முட மோசியாரும் அவன் பிரிவுக்கு வருந்திக்கையறு நிலை பாடியுள்ளார்.

# 4. வள்ளல் நள்ளி

பொழிவதற்கு வருகின்ற முகிலின் ஒலியும் ஒன்றோடொன்று போர் செய்கின்ற யானைகளின் ஒலியும் விழுகின்ற அருவியின் ஒலியும் அடிக்கப்படுகின்ற முரசுகளின் ஒலியும் தோட்டி என்னும் மலையில் ஒன்றோடொன்றுமாறுபட்டு ஓழிவின்றி ஒலித்துக்கொண்டிருக்கும். அம் மலை, நீரருந்தும் நினைப்போடு வந்த மானும், அதன் கன்றும் அந்நினைப்பை இழந்துகேட்கும்படி வண்டுகள், காவி மலர்களிலுள்ள கள்ளையுண்டு களித்துச் செவ்வழிப்பண்ணைப்பாடும் சுனைகளையுடையது. இருப்பதற்கு இடமும் உண்ணுவதற்கு நீரும் கொடுத்துதவுவதனால், அவ்வுதவிக்காக ஞாயிற்றின் வெயிலை தடுத்துக் குளிர்ந்த நிழலை வழங்குகின்ற மரங்களையும் உடையது. அருங்கலன்கள் அணிந்து பாட்டுக்குத்தகுந்தவாறு அடிபெயர்த்தாடும் அரிவையர்களைப் போலக் கிளிகள் பாட அப்பாட்டுகளுக்குத் தக்கவாறு நடிக்கும் கொடிகளையுடையது. பறவைகள் வந்து தினைக்கதிர்களைக் கவராதபடி கவணெறிந்து புனங்காக்கும் மாதர்கள் இசைக்கின்ற இசையைத் தெரிந்து கொள்வதற்குச் செவி கொடுக்கும் கிளிகளையும், களவு, கொலை, இரத்தல் முதலிய இழிதொழிலின்றிக் காட்டில் இயற்கையாக வளர்ந்து கிடக்கும் புல் முதலியவற்றை உண்ணும் மான்களையும் உடையது.

அத்தகைய தோட்டிமலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டினுக்கும் அரசனாகி அரசாண்டவன் நள்ளியென்பவன். இவன் வேட்டுவர் குலத்தில் பிறந்தவன். தமிழ் மொழியை ஐயந்திரிபறக் கற்றவன். தமிழ்ப்

புலவர்களுக்கு வரையாது கொடுப்பவன்.பகைவர்க்கு அஞ்சுதலில்லாதவன். அவன் மங்கையர்க்கரசி யென்னும் மங்கையை மணந்து உடலும் உயிரும்போல ஒன்றுபட்டு வாழ்ந்து வந்தான். தன்னுட்டையும் அறநெறியி லாட்சி செய்தான்.

வள்ளல் நள்ளியின் முயற்சியினுல் வேட்டுவக் குலத்தினர் வீரராய் விளங்கினர். தங்கள் குலத் தொழிலாகிய ஆறலைத்தலைக் கைவிட்டனர். கல்வி யிலும் அறிவிலும் சிறந்தவராய் விளங்கினர். நற்குண முடையவராய்க் காணப்பட்டனர். அரசன் பகைவ ரோடு போருக்குச் செல்லும் பொழுது தாமும் சென்று அவர்களோடு போர் செய்து வெற்றி யோடும் பொருளோடும் மீளுவார்கள். பல பொருள் களையும் வெளியூர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் கொண்டு சென்று விற்றுப் பெரும்பொருள் தேடி மீள்வார்கள். பெண்கள் தங்கள் கணவருக்கும், தங் கள் வீட்டிற்கு வரும் விருந்தினற்கும் உணவூட்டி மகிழ்வார்கள். புலிக் குட்டிகளையும் யானைக் கன்று களையும் மான் குருளைகளையும் பிடித்துச் சிறுவர்கள் அவற்றோடு விளையாடுவார்கள். சிறுமியர்கள் முத்துக் களாகிய நெல்லைக் குவித்து யானை மருப்பாகிய உலக் கையினுல் குற்றுவார்கள். மக்கள் பலவகை உணவு களையும் உண்டு பாரில் மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

மாங்கனியுண் பார்வெறுக்கின்
மணமிகுந்த வேர்ப்பலவின்
தீங்கனியுண்பார் வெறுக்கின்
தினையிடியும் தேனுமுண்பார்

ஆங்கவைதாமும் வெறுக்கின்
அலைத்தவிலங் கூனுண்பார்
ஓங்கலரு குறைபவர்போல்
உண்டுவப்பார் உலகிலெவர்.

வள்ளல் நள்ளி தன் நாட்டை நன்கு காத்து வந்தான். ஒரு நாள் தன் ஏவலாளரோடு வேட்டையாடுவதற்குத் தன் தோட்டி மலையை நோக்கி நடந்தான். மாதவி, தாதகி, மல்லிகை, தில்லை, பாதிரி, கூதளம் முதலிய மரங்கள் அடர்ந்த சோலையையும், பூக்கள் மலர்ந்த பொய்கைகளையும், கடந்து சென்றான்.

வருகளனக் கிளிமொழிய மணத்தென்றல் வழிகாட்டக் ,
கருவிளைகள் கண்டுவக்கக் காந்தளணி விளக்கேந்தப்
பொருசிலையும் பலகணையும் உடன்கொண்டு போம்அரசன்
பெருகுவகை யொடுநடந்தான் ஏவலர்கள் பின்தொடர.

பசுந்தளிர்களாகிய உடையை உடுத்து மலர்களாகிய கலன்கள் புனைந்து பழங்களாகிய திறைப் பொருள்களைச் சுமந்து கொடிகளும் மரங்களும் தன்னை வணங்கும் குடிமக்களைப் போல வணங்கி நிற்கும் சோலைகளைத் தாண்டிச் சென்றான். அரசன் தன்னோடு தொடர்ந்துவரும் ஏவலாளரைக் காடுகளைக் கலைத்து வேட்டைக்குத் தயாராக்குக என்று அனுப்பினான். ஏவலாளர்கள் பல இடங்களுக்கும் சென்றார்கள்.

இருகை தட்டி எழுப்பினர் சிற்சிலர்
கரிய கல்லிற் கலைத்தனர் சிற்சிலர்
பொருளில் வீளைவிற் போக்கினர் சிற்சிலர்
மருவி ரிக்கும் மரச்செறி வெங்கணும்

புல்ல ருந்துபுல் வாய்களைப் போக்கினர்
கல்லிற் றுஞ்சுங் கரிகளை யோட்டினர்
வல்லி ருட்டினை மானும்பல் பன்றிகள்
செல்லுஞ் செச்சைகள் மற்றுஞ் செலுத்தினர்.

விலங்குகளில் பல விரைந்து சென்று அச்சங் கொள்ளும். பல தங்கள் கன்றுகளைக் காணுமல் கதறும். பல ஓடி ஒளியும். அரசன் வில்லை வளைத்து அம்புகளை இணைத்துச் செலுத்தினன். கணைகளிற் சில விண்ணென்று விரைந்து சென்று விலங்குகளின் கண், காது, கால், கழுத்து முதலிய உறுப்புக்களில் ஒவ்வொன்றிற் பாய்ந்து ஊடுருவிப் போய்ப் பலவற் றின் உயிர்களை உண்ணும். சில யானையின் நெற்றியிற் பாய்ந்து, அதன் பின்புறம் ஓடி, அதன் பின் நின்ற பன்றியை வீழ்த்திப், பாய்ந்து செல்லும் கலைமானையும் வீழ்த்தும். ஓடி ஓடி ஒளிந்த விலங்குகளும் கூடிக் கூடிக் குறுகிய விலங்குகளும் மன்னன் கணைகளால் மாண்டு வீழ்ந்தன.

கண்ணி முந்து விழுந்தன காலிற்று
மண்ணிற் சாய்ந்து விழுந்த. வயிற்றினுட்
புண்ண டைந்து விழுந்துடன் பொன்றின.
எண்ணி லாத விலங்குக ளிங் ஙனே

வள்ளல் நள்ளி வேட்டையில் களைப்படைந்தான். வேட்டத்தை விடுத்து மெல்ல நடந்து தென்றல் உலா வும் செழும்பொழிலொன்றை அடைந்தான். கிழிந்த ஆடையையுடையவர்களும், பசியினுல் வாடிய உடம் பையுடையவர்களும், நடையினுல் களைப்படைந்தவர் களுமாகிய சிலர் ஒரு பலாமரத்தின் நிழலில் தங்கி

இருப்பதைக் கண்டான். அரசன் அவரருகே சென்றான். வன்பரணர் என்ற புலவர் வணங்கினார், அவன் வருகையை அறிந்து எழுந்து, இருக்கவேண்டுமென்று நின்று கேட்டுக்கொண்டார். அரசன் அவர்கள் வாட்டத்தைப் பார்த்ததும், அங்குத் தங்கியிருந்து தன் களைப்பை நீக்கிக் கொள்ளாமலும், தன் ஏவலாளரை அழைக்காமலும் நடந்துசென்று தான் முன் வேட்டையாடிய மானைக் கொண்டு வந்து, அதனை அறுத்து, நெருப்புண்டாக்கிச் சுட்டுப் பக்குவஞ் செய்து மீண்டு வந்து இதனை உண்மின் என்று வன்பரணர் முதலியோருக்குக் கொடுத்தான். அவர்களும் அன்போடு கொடுத்த அவ்வுணவை வாங்கி உண்டு மீண்டு வந்து அவனிடம் விடைபெற நின்றார்கள். அவன் அப்பரணர்களுக்குப் பரிசில் கொடுக்க எண்ணிப் பாணர்களே! யான் காட்டு நாட்டில் வாழ்கின்றவன். சிறந்த அணிகலன் என்னிடமில்லை என்று கூறித் தன் மார்பில் அணிந்திருந்த முத்து மாலையையும், கையிலணிந்திருந்த கடகத்தையும் கொடுத்தான். வன்பரணர் அவன் அன்பையும், பேச்சினிமையையும், கொடையையும் கண்டு வியப்படைந்து, ஐய! நின் நாடு யாது? நின் பெயர் யாது? என்று வினவினார். அரசன் தன்னை இன்னான் என்று வெளிப்படுத்தாமலே அவர்களை விட்டகன்று சென்றான்.

வன் பரணரும் அவருறவினரும் அப்பெருந்தகையைப் பலவாறு புகழ்ந்தார்கள். அவனை மீண்டும் பார்ப்பதற்கு எண்ணி அவன் சென்ற நெறியே நடந்து சென்

ருர்கள். சிறுவர்கள் காலினுல் மிதித்து உண்ணுந் தோறும் அவர்களுக்குமகிழ்ந்து பாலூட்டுந்தாயரைப் போன்று, வண்டுகள் மிதிக்க மிதிக்க அவற்றிற்குத் தேனை நல்கும் மலர்களையுடைய மரங்கள் வழியில் நின்றுகொண்டிருந்தன. குறவர் சேர்த்து வைத்திருந்த தேனையும் பலாச்சுளைகளையும் கவர்ந்து அளவிற்கதிய மாய் உண்டு, அறிவிழந்து அயலிலிருந்த அத்திமரத் தில் ஏறமாட்டாமல் அல்லலுற்றுக் கொண்டிருந்தது. அக் காட்சிகளைக் கண்டு கொண்டு, தமக்கு எதிரே வரும் வழிப்போக்கரிடம் வல்வில் வேடனை வழி யிடைக் கண்டிரோ? என்று கேட்டுக் கொண்டும், நள்ளி சென்ற வழியைத் தெரிந்துக் கொண்டும், அவன் யாவன் என விளக்கமாக அறிந்து கொண்டும் நடந்து சென்ருர்கள். அப்பொழுது வன்பரணர் முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் பாட எண்ணி, "கூதிர்காலத் துப் பருந்தினது கரிய சிறகை யொத்த துணி யாகிய சீரையை யுடையேனுய்ப் பலாவடி யைப் பொருந்தி, தன்னையும் நினையேனுய் வேற்று நாட்டின் கண் சென்ற எனது ஓய்ந்த செலவால் உள தாகிய வருத்தத்தினையும், மிடியையும் பார்த்து மானி னது திரளைத் தொலைத்த குருதி தோய்ந்த அழகிய வீரக்கழலினையுடைய காலினையும் வாலிய ஒளியை யுடைய அழகிய நீலமணி விளங்கும் உச்சியுமுடைய செல்வத்தையுடைய தலைவனுகி ஒரு வாலியர் வில்லை யுடைய வேட்டுவன் தன்னை அஞ்சலி பண்ணினேனுய் எழுந்திருப்பேனைக் கைகவித்து இருத்தி நெய்யிழுது போன்ற வெள்ளிய நிணத்தையுடைய கொழுவியதடி

யைக் காட்டு வழியின்கண் வழிமயங்கிப் போகிய இளையர்தாம் விரைந்து வந்து பொருந்துவதற்கு முன்னே கடிதாகத் தான்கடைந்த தீயான் விரைந்து சுட்டு நினது மிகப்பெரிய சுற்றத்துடனே தின்மின் என்று தருதலால், அதனை யாங்கள் அமிழ்து போலத் தின்று சுடுகின்ற பசி தீர்ந்ததாக, நல்லமரச்செறிவை யுடையநறியகுளிர்ந்த மலைச்சாரற்கண் நீரைக்குளிரக் குடித்து விடைகொள்ளத் தொடக்கினேனாக,விரைய வந்து பெறுதற்கரிய பெருமை யமைந்த நல்ல அணி கலங்கள் தருதற்கு வேறொன்றில்லை; யாம் காட்டு நாட்டேமெனச் சொல்லித் தனது மார்பிற் பூணப் பட்ட விளங்கிய முத்துவடங்களையுடைய ஆரத்தைக் கொளுத்துச் செறிந்த முன்கைக் கணிந்த கடகத் துடனே தந்தனன். நும்முடைய நாடு எந்நாடோ என்று கேட்ப நாடும் சொல்லிற்றிலன். நீர் யார்எனக் கேட்பப் பெயரும் சொல்லிற்றிலன். இரும்பாற் புனைந்து செய்யப்படாத மிக்கபுகழையுடைய தோட்டியாகிய அம் மலையைக் காக்கும் அழகிய பெரிய பக்கமலையினையும் பளிங்கை வகுத்தாற் போன்ற வெளிய நிறத்தையுடைய இனிய நீரையுமுடைய பெரிய மலை நாட்டையு முடைய நள்ளி அவன் என அவன் நாடும் பெயரும் பிறர் பிறர் வழியின்கண்ணே சொல்லக்கேட்டேன்என்னும் பொருள்படக்"கூதிர்ப் பருந்திர் இருஞ்சிறகன்ன" என்னும்பாடலை யாத்துப் பாடினார் ஏனையவர்கள் அப் பாட்டைக் கேட்டு மகிழ்ந்தார்கள். அனைவரும் நள்ளி அரண்மனையை அடைந்தார்கள்.

வன்பரணரும் அவரோடு வந்த பாணரும் குன்ற மனைய கோயிலினுள் நுழைந்து மன்னன் இருக்கும் நாளோலக்கத்தை அடைந்தார்கள். மன்னன் அவர்களை வரவேற்று மகிழ்ந்தான். வன்பரணர் முதலியோர்கள் குழலிசைத்தும், யாழ்தடவியும், முழவு இயக்கியும், பாடல் பாடியும் அரசனை மகிழ்வூட்டினார்கள். மகிழ்வடைந்த மன்னன் பாணர்கள் உடுத்திருந்த கந்தைகளை அகற்றிப் பாலாவி யனைய பட்டுடைகளைக் கட்டுதற்குக் கொடுத்தான். பல பொன்னணிகலங்களையும் அவர்களுக்குக் கொடுத்தான். தன் அருகே இருத்தி அறுசுவை உணவருத்தி அவர்களை அரசன் மகிழ்வித்தான். அரசன் கொடுத்த ஆடைகளோடும் அணிகலங்களோடும் விளங்கிய பாணர்கள் நேற்று வந்தவர்கள் இவரல்லர் என்று ஊரிலுள்ளார் மயங்கும்படி நகரில் நடந்து திரிந்தார்கள். பலநாள் தங்கியிருந்து தேனும் கனிகளும் ஊனும் பல்வேறுவகையான உணவுகளும் உண்டுஉண்டு உணவில்வெறுப்புற்றுர்கள். தங்கள் ஊருக்கு மீள நினைந்து வள்ளல் நள்ளியிடம் சென்று தங்கள் கருத்தை நவின்றுர்கள். அவன் அவர்களை விட்டுப் பிரிவதற்கு மனமின்றிப் பன்னுள் அங்கிருத்தி நன்கு உணவருத்திஆடைகளும் அணிகலங்களும் அவர்களுக்களித்தான். பாணர்கள் உண்ணுவதிலும், உடுத்துவதிலும், முடிப்பதிலும், அணிவதிலும் வல்லவராகித் தங்கள் குலத் தொழிலாகிய ஆடலிலும் பாடலிலும் பயிற்சியற்றவரானுர்கள். பாணர்கள் பிறர் இகழுமாறு தங்கள் குலத்தொழில்களை மறந்திருத்தலையும்

வள்ளல் நள்ளி அவர்களுக்கு வரையாது கொடுத்துத வுதலையும் எண்ணி, நள்ளி "வாழ்வாயாக, நள்ளி நள்ளென்னும் ஓசையுடைய மாலைப் பொழுதின் கண்ணே மருதம் என்ற பண்ணை வாசித்துக் காலைப் பொழுதின்கண் கைவழியாகிய யாழின்கண் செவ்வழி யென்னும்பண்ணைவாசித்துவரலாற்று முறைமையை எம்முடைய பாணர் சாதியிலுள்ளோர் மறந்தார். அவ்வாறு மறந்தது, நீ கொடுத்து ஓம்புதலைக் கடனாக மேற்கொண்ட வண்மையான் என்னும் பொருள்பட

நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரஎமர் மறந்தனர் அது நீ
பரவுக்கடன் பூண்ட வண்மை யானே.

புறம்-241

என்னும் பாடலைப் பாடி இரங்கினர். நள்ளி தன் பகைவரை அடக்கியும் குடிகளை நன்கு காத்தும், புலவர்களுக்குக் கொடுத்தும், புகழோடு விளங்கி இறைவன் திருவடிகளை எய்தினன்.

## 5. வள்ளல் ஓரி

### ஆட்சி

கொங்கு நாட்டில் சிறந்து விளங்கும் மலை கொல்லி மலை. அது தன்னிடம் வருகின்றவ ரனைவர்களுக்கும் முதன் முதல் நிழலைக் கொடுக்கும். பின்பு, அவர்கள் குளிப்பதற்கு நீரைக் கொடுக்கும். உண்ணுவதற்குக் கனிகளையும் காய்களையும் கொடுக் கும். உண்ட பின் முடித்துக்கொள்வதற்கு நறுமண முடைய மலர்களைக் கொடுக்கும். பூசிக் கொள்வ தற்குச் சந்தனத்தைக் கொடுக்கும். கொண்டு செல் வதற்கு மணிகளையும் முத்துக்களையும் கொடுக்கும். தம்மிடம் வரும் புலவர்களுக்கு வள்ளல்கள் வழங்கு மாறு போலப் பலவற்றையும் வருவார்க்கெல்லாம் வழங்குதலினால் புலவர்களால்அதுபுகழப்பட்டுள்ளது. அம் மலையில் வாழும் குறவர்கள், அகிலையும் சந்தன மரங்களையும் எரியூட்டி அழித்து, அவ்விடத்தில் யானை மருப்பினால்வேலி அமைத்து, அருவிநீர்ப்பாய்ச் சித் தினை,ஐவனம் முதலிய பயிர்களை வளர்ப்பார்கள். பெண்கள் அப் பயிர்களைப் பகற்காலங்களில் முத்துக் களாகிய கற்களை வைத்துக் கவணெறிந்து காவல் செய்வார்கள். விளைந்த பின் தானியங்களை அனை வரும் தங்கள் வீட்டில் நிரப்பிக் கொள்வார்கள். சிறு வர்கள் முயலையும் வேங்கைக் குட்டிகளையும் முடுக்கிப் பிடிப்பார்கள். ஆடவர்கள் அயிலையும் அம்பையும் கையிற்கொண்டு சென்று புலி கரடி முதலிய விலங்கு களை வேட்டையாடுவார்கள். மகளிர்கள் மயில்போல் நடந்து மலர் கொய்து மகிழ்ந்து விளையாடுவார்கள்.

கொல்லிமலை நாட்டை அறநெறியில் அரசாண்ட அரசன் வல்வில் ஓரி ஆதன் என்பவன். இவன் சிறு வயதிலே கல்வியில் வல்லவனுனன். வில்லிலும் வீர னுக விளங்கினுன். வில் வித்தையில் வல்லவனுக விளங்கியதனுல் இவன் வல்வில் ஓரி என்று வீரர் களால் புகழப்பட்டான்.

வல்வில் ஓரியாதன் தன் தாய்மொழியாகிய தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினுன். அம்மொழி சொல் நயம் பொருள் நயமுடையதாயிருப்பதையும், உவமேயத்திற்குத் தகுந்த உவமானத்தை எடுத்துக் கூறி விளக்குவதையும், அக நோயை நீக்கும் அரு மருந்தாயிருப்பதையும் அறிந்து அதனை நன்கு கற் றறிந்தான். பின்பு, தன் மனத்திற் கியைந்த மங்கை யொருத்தியை மணந்து இல்லற நெறி யொழுகி நல்லறம் பல புரிந்து வந்தான். அவன் தன் நாட்டை வறிஞன் ஒருவன் தன் வயலைஅடிக்கடி சென்று கவ னிப்பதுபோலவும், ஒரு மாது தன் மகவை அடிக் கடி கவனிப்பது போலவும் கவனித்து குறை கடிந்து முறை செய்து வந்தான். தன்னை நோக்கிவரும் புலவர் களுக்கு அருமருந் தனைய அமுதருத்தி அவர்களுக்கு அன்பினுல் அருங் கலங்களும் ஆடையும் பொன்னும் அளித்து வந்தான்.

## வேட்டை

இவ்வாறு வாழ்கின்ற காலத்தில் ஓரி வேட்டை யில் விருப்புடையவனுய் வில்லும் அம்பும் வேலும் எடுத்துக்கொண்டு கொல்லி மலையை நோக்கிச் சென்

னான். சென்ற நெறியில், கொடையிற் சிறந்த கொற்றவன் வருகையை யறிந்த நில மடந்தை தன் பல கண்களினால் அவனைக் கண்டு மகிழ்வது போல அங்கிருந்த கருவிளை மலர்கள் மலர்ந்திருந்தன. அந் நில மடந்தை அவனைக் கண்டு இரும்பூதுற்று மயிர் பொடித்தாற் போலப் புற்கள் பொலிந்து விளங்கின. பெண்கள் தங்கள் மொழியினால் தங்களை வெல்வதை அறிந்த கிள்ளைகள் அவர்களுடைய தினைப்புனத்திலுள்ள கதிர்களைத் தின்றழிப்பதற்குச் செல்லும். அவற்றை அப் பெண்கள் கண்டு கவணால் எறிந்து காவல் செய்வார்கள். அம் மலையிலுள்ள மந்திகள் மாங்கனிகளில் வெறுப்பு ஏற்படின் பலாக் கனிகளை மாந்திக் காட்டில் வளர்ந்துகிடக்கும் ஊசலில் களித்து விளையாடும். மான்களிற் சில தினைக்கதிர்களைத் தின்று கொண்டிருக்கும். சில தாவி விளையாடும். சில மான்கள் வேங்கையைக் கண்ட விடத்து வெருண்டு ஓடும்.

காவலன் கண்ணுக்கினிய காட்சிகளைக் கண்ட விடத்துச் சிறிது நின்று நின்று கண்டுமகிழ்ந்தான். மான் முதலிய விலங்குகளையும் கண்டான். அவன் அப்பால் செல்வதை நிறுத்திக்கொண்டான். ஓரம் பெடுத்து வில்லில் இணைத்து அவ்விலங்குகளை எய்தான். அவ்வம்பு பற்பல விலங்குகளின்மேல் பாய்ந்து அவற்றைக் கீழே வீழ்த்தித் தானும் கீழே விழுந்தது. அவ்விடம் விட்டகன்று சென்றபொழுது புலியும், கரியும் ஒன்றோடொன்று வெகுண்ட முழக்கம் ஒரு பக்கம்கேட்டது. மேகமும் வேழமும் மாறு கொண்டு முழங்கும் முழக்கம் ஒருபக்கம் கேட்டது.

காரிருளனைய கரடி பன்றிகளின் முழக்கம் ஒருபால் கேட்டது. முழக்கம் வரும்வழியை நோக்கி அரசன் நடந்து சென்றான்.

அரசன் நடந்து சென்றபொழுது ஒரு கரியை ஒரு புலி வெகுண்டு நோக்கி வாயைத் திறந்துஉருமிக் கொண்டிருந்தது. அவ்விரண்டு விலங்குகளுக்குப் பின்புறம் ஒரு பன்றியும் ஒரு மானும் நடந்துகொண் டிருந்தன. அவை நான்கினையும் அவ்வரசன் கண்டு அவற்றை எய்வதற்கெண்ணிக் கணையை எடுத்துக் குறி வைத்துஎய்தான். அவன் எய்த அம்பு ஒருவாழை மரத்திலுள்ள காயொன்றினையும் கனியொன்றினை யும் இலையின் காம்பொன்றினையும் பூவின் மடலொன் றினையும் இலையொன்றினையும் எளிதில் துளைத்து ஊடுருவிச் சென்றாற் போலக் கரியினையும் புலியினை யும், கலைமானையும், பன்றியையும் ஊடுருவிச்சென்று, மேலே தலையை நீட்டிக்கொண்டு புற்றிலிருந்த உடும் பினையும் ஊடுருவிச் சென்று அப்புறம் போயது.

## பரணரைக் காணுதல்

இங்ஙனம் வில்லில் ஓரிவேட்டையாடும்பொழுது வேறோரூருக்குச்செல்ல எண்ணித் தம்மினத்தாரோடு அம்மலைவழியாக நடந்து ஓரிடத்தில் தங்கியிருந்த வன்பரணர் என்னும் புலவர் விண் என்று ஒலிக் கும் ஓரொலியைக் கேட்டார். அவ்வொலியைத் தொடர்ந்து விலங்குகளினுடைய ஒலிகளையும் கேட் டார். தம் கண்களுக்கு முன்பாகவே கணையொன்று கடுகிச் செல்வதையும் கண்டார். என்னை? யார் கணை

விடுவது? என்று திகைத்துக் கொண்டிருந்தார். திகைத்து நின்றளவில், முன்சென்ற கணை மண்ணில் வீழ்ந்து புதைந்தது. ஒருவிலங்கு மண்ணில் துள்ளித் துள்ளிப்புரண்டு கொண்டிருந்தது. இக் காட்சிகளைக் கண்டபுலவர் விரைந்து சென்ற படை யாது? எய்தவன் யாவன்? என்று அறிவதற்கு மெல்லச் சென்று பார்த்தார். உடும்பையும் கணையையும் கண்டார். எய்தவன் யாவன் என்று பார்த்தபொழுது, அக்கணை வந்த வழியில் ஒன்றன் பின் ஒன்ருகப் பல விலங்குகள் மண்ணிடை வீழ்ந்து மாய்ந்து கிடத்தலைக் கண்டு வியப்பும் திகைப்புங் கொண்டு நின்ருர்.

வன் பரணர் அங்ஙனம் திகைத்து நிற்கும் பொழுது, இடது கையில் வில்லை - ஏந்தியவனும், மாலையை யணிந்த மார்பை யுடையவனும், சந்தனம் பூசிய தோள்களை யுடையவனுமாகிய ஓராடவன் அங்கே வந்தான், தன் அம்பினுக்கு இரையாகி மண் ணிடைக் கிடந்த மாக்களைக் கண்டான். அவ்விலங் குகளை வழியிற் செல்லும் யாருக்காவது கொடுக்கலா மென்றெண்ணி நிமிர்ந்து பார்த்தான். அவன்பார்வை வன்பரணர் மேல் விழுந்தது. வன்பரணரும் அவ ரைக்கண்டார்.

அவ்வாடவன் யாவன் என்று வன்பரணர் எண் ணினர். இருவரும் ஒருவரை யொருவர் அறியார். ஆடவனுடைய வடிவமும் அணிகலங்களும் அவனை மன்னன் என்று தெரிவித்தன. அவன் தம்மைப்

பார்த்து அணுகுஞ் செயல் அவனை அருளுடைய வன் என்று தெரிவித்தது; அவ்வளவில், புலவர் விரைந்து நடந்து தம் உறவினர் உறையும் இடத்தை அடைந்தார். பாணர்களே! பறையை அடியுங்கள். யாழை வாசியுங்கள். இசைப்பாட்டைப் பாடுங்கள். பிரம்பை எடுத்து என் கையிற் கொடுங்கள் என்று கூறினர். தோற்கருவிகளும் துளைக்கருவிகளும் அளவோடு ஒலித்தன. யாழ் வாசிக்கப்பட்டது. இசைப்பாட்டுப் பாடப்பட்டது. வன்பரணரும் அவருறவினரும் இங்ஙனம் அவ்வாடவனை வரவேற்றனர். அவன் அவர்களிசையைக் கேட்டு அகமிக மகிழ்ந்தான். அவர்கள் பாடப்பாட அவர்கள் இசையில் மனத்தைப் பதியவைத்தான். அப்பாடல்களின் பொருளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். இங்ஙனம் அவ்வாடவன் மகிழ்ச்சியடைவதைக் கண்டும் அவன் தோற்றப் பொலிவைக் கண்டும் வன்பரணர் அவனைப் புகழ்ந்து பாடத் தொடங்கினர். அப்புகழுரையைக் கேட்பதற்கு நாணி அவன் தலைகவிழ்ந்தான். மேலும் தன்னைப் புகழாதபடி, இது மானூன்; இதனைத் தின்மின். இது தேன்; இதனைப் பருகுமின் என்று கூறி அவர்களை உண்பித்தான். மேலும், "பாணர்களே! நீவிர் கல்லின் வழியாகவும் காடுகளின் வழியாகவும் இங்கு நடந்து வந்திருக்கிறீர்கள். வழியில் பல அல்லல்களை அடைந்திருப்பீர்கள். உணவருந்திக் களைப்பு நீங்கு முன் பாட்டுக்களைப் பல திறத்திலும் பாடினீர்கள். உங்கள் இசை மிகவும் இனிமையாயிருந்தது. யான் தனித்து இங்கு வேட்டையாட வந்தேன். உங்கள்

இசைக்குத் தக்கவாறு கொடுப்பதற்கு என்னிடம் பொருளில்லை. இப் பொன்னையும் மணியையும் பெற்றுக் கொள்ளுங்கள். என்மேல் வெறுப்புக் கொள்ளாதீர்கள்" என்று பலவற்றைக் கொடுத்து அவர்களிடம் விடைபெற்றுத் தான் வந்தவழியே சென்று அரண்மனையை அடைந்தான்.

வன்பரணரும் அவருறவினரும் அரசன் சென்ற பின் அவனைப் புகழ்ந்தார்கள். அவன் நல்ல குணமுடையவன் என்றனர். அவன் சொற்கள் இனிமையானவை என்றனர். அவனைப் புகழும்போது, தான் பெரியோனாதலில், கேட்பதற்கு நாணினன் என்றனர். வன்பரணர் அவன் வேட்டையின் திறமையையும் அவனைக் கண்ட வரலாற்றையும் விரித்துக் கூறினார். அனைவருஞ் சென்று அவன் வேட்டையாடிய விலங்குகளைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

## பாணர்கள் அரண்மனையை அடைதல்

வழியிலே கண்ட மன்னனை அவன் அரண்மனையிலும் காணவேண்டும் என்று எண்ணினார்கள். எண்ணி, மன்னன் சென்ற வழியே நடந்து சென்றார்கள். வழியில் மழைநீரால் மாசு நீங்கிய கருங்கற்கள் பாகனால் கழுவப்பட்ட யானைகள் போன்று காணப்பட்டன. தினைக் கதிர்களையும் தேமாங் கனிகளையும் பறித்து மலைமேலேறி அவற்றை உண்ணும் மந்திகள் இல்லறத்தினின்றும் நீங்கித் துறவற வாழ்க்கையை மேற்கொண்டு காய்கனி யுண்ணும் முனிவர்போன்று விளங்கின. இக்காட்சிகளைக் கண்டு செல்லுகையில்

மக்கள் மருளுமாறு அங்குமிங்கும் சென்று திரியும் கொல்லிப் பாவையையும் கண்டு இறும்பூதுற்று ஏகினார்கள்.

பாடலில் வல்லவராகிய பாணருடைய வருகையை அறிந்து, தங்கள் இசைமுறையைக் காட்டி அரங்கேற்ற எண்ணி, வண்டு குழலொலி எழுப்பியது; அருவி முழவொலி எழுப்பியது; கிள்ளை இசைப்பாட்டுப் பாடிற்று. அவற்றைக் கேட்டு நன்று நன்று என்று புகழ்ந்து பாணர்கள் நடந்து சென்றார்கள்.

மானினம் நிழலில் துஞ்ச
மரையினம் புலிகண் டஞ்சத்
தேனினந் தளிகள் செல்லச்
செழுங்கொடி மலர்ந்து நல்கக்
கானிடை மஞ்ஞை யாடக்
கண்டுகண் டுவந்து பாணர்
வானிடைக் கொடிக ளாடும்
மன்னவன் கோயில் சேர்ந்தார்.

அரண்மனை உள்ளிடம் அகன்றிருந்தது. பல தூண்களைப் பல வரிசைகளில் கொண்டிருந்தது. உள்ளே நுழைந்து மன்னனைக்கண்டு பாணர்கள் வணங்கினார்கள். வாழ்த்தினார்கள். முன்போலக் கருவிகளை இயக்கி இன்னிசைப் பாட்டுக்களைப் பாடினார்கள். மன்னன் அவர்களிசையில் ஈடுபட்டுக் கேட்டு இன்பந் துய்த்தான். வன்பரணர், "ஆனையைக் கொன்று வீழ்த்திய சிறந்த தொடையை யுடைய அம்பு பெரியவாயை யுடைய புலியை இறந்து பாட்டை யுறுவித்துத் துளைபொருந்திய கோட்டை யுடைத்

தாகிய தலையினையுடைய புள்ளிமான் கலையையுருட்டி உரல் போலும் தலையையுடைய கேழலாகிய பன்றியை விழச்செய்து அதற்கு அயலதாகிய ஆழ்தலையுடைய புற்றின்கண் கிடக்கின்ற உடும்பின்கண் சென்று செறியும் வல்வில்லா லுண்டாகிய வேட்டத்தை வென்றிப்படுத்தி யிருந்தவன், புகழமைந்த சிறப்பினையுடைய அம்பு ஏத்தொழிலிலே மிகச் சென்றுறுதற்குக் காரணமாகிய கொலைவன் யாரோ தான்? அருவியையுடைய பயன்படு மலைக்குத் தலைவனாகிய ஓரியோ அல்லனோ தான்? அவனைத் தரும் யான் பாடுவன். விறலி ஒரு வண்ணம் பாடு. யாழிலே பண்ணை நிறுத்துமின். சல்லியை வாசியுமின். சிறு பறையை அறையுங்கோள். கரிய கோலைக் கையின் கண்ணே தாருங்கோள் என்று சொல்லி அணுகித் தலைவனாதலாலே இருபத்தொரு பாடற்றுறையையும் முறையாற் பாடி முடித்துப் பின்னர்க்கோவே என்று அவன் பெயர் கூறிய காலத்து அவ்விடத்து அவ்வார்த்தை தன் பெயராதலால் நாணி, பின்னை யாங்கள் நாட்டிடந்தோறும் சென்று வருவோம்; இவ்விடத்து ஒரு வேட்டுவரில்லை நின்னை ஒப்போரென யாம் விரும்பியது கூறவும் அதற்குக் காலந்தரானாய் வேட்டையின்கண் தானெய்த மானினது நிணத்தையுடைய தசையினது புழுக்குடனே ஆவின் நெய்யை உருக்கினாற்போன்ற மதுவைத் தந்து தன்னுடைய மலையின்கட்பிறந்த வலியில்லாத நல்ல பொன்னைப் பல மணித்திரள்களுடனே கலந்து இதனைக் கொள்மினெனச் சொல்லிச் சுரத்திடத்தே

எமக்குத் தந்தான் முழையை யுடைத்தாகிய உச்சியையுடைய உயர்ந்த பெரிய கொல்லிமலைக்குத் தலைவன். பாதுகாவாத வண்மையினையுடைய வெற்றியை விருப்புவோன்" என்னும் பொருள்பட வேழம் வீழ்த்த என்னும் பாட்டைப் பாடினர்.

புகழுரையைக் கேட்பதற்கு நாணும் புரவலனாகி ஓரி புலவராகிய வன்பரணர் அன்பினால் இயம்பிய தமிழ்ப் பாட்டைக் கேட்டு மகிழ்ந்து பணிந்தான். வன்பரணருக்கும் அவரோடு உடன்வந்த அவருறவினர்களுக்கும் அமிழ்தனைய அடிசிலூட்டி அணிகலங்களும் ஆடைகளும் கொடுத்து யானைகளையும் பரிசிலளித்தான். பாணர்கள் அரசன் கொடுத்த பரிசில்களைப் பெற்று மகிழ்ந்து அவனிடம் விடைபெற்றுத் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். தாங்கள் கொண்டு சென்ற பரிசில்களைப் பலர்க்குங் காட்டி அரசனையும் அவன் விற்றிறமையினையும் அவன் கொல்லிமலையையும் புகழ்ந்தார்கள். கொண்டுசென்ற யானைகளைக் கந்துகளிற் கட்டிக் கவளமூட்டி வளர்த்தார்கள்.

அவர்கள் கொண்டு சென்ற அணிகலங்களைத் தங்கள் மனைவியர்களிடம் கொடுத்தார்கள். அவர்கள் அவற்றை வாங்கிக் காதணிகளை கழுத்திற் பூட்டியும், கழுத்தணிகளை காதுகளிற் பூட்டியும், கழற்றியும் மயங்கினார்கள். கொண்டு சென்ற பொருள்களைக் கொண்டு உண்டு உடுத்து உவந்தனர். முன்போல் பரிசில் பெறுவதற்கு எண்ணினார்களில்லை, பரிசில் பெற எண்ணு

மையினால் தாங்கள் கற்ற பாடற்றிறமையையும் மறந்து வாழ்ந்து வந்தனர்.

## வன்பரணர் வருத்தம்

பொருள் மிகுதியினாலும் வறுமை யின்மையினாலும் பழைமையான தங்களுடைய தொழிலை மறந்த பாணர்களுடைய நிலைமையை வன்பரணர் எண்ணி வருந்தினார். வல்வில் ஓரியினுடைய கொடையே பாணர்கள் தங்கள் பாடற்றொழிலை மறப்பதற்குக் காரணம் என்று நினைத்தார். "முகில் சூழ்ந்த மலைக்குத் தலைவன் நாடோறும் பட்டம் முதலாகிய பூண்களை அணிந்த யானையை இரப்போர்க்குக் கொடுக்கும் கதிர் விடுகின்ற பசும் பொன்னாற் செய்த அணியினையும் வளைந்த கடகமணிந்த முன் கையினையுமுடைய கொல்லும் போர் அமையாத ஆதன் ஓரியினது மழைபோலும் வள்ளிய கொடையைக் காண்டற்கு மிகவும் சென்றது எம்முடைய கூத்தச் சுற்றம். அச் சுற்றத்தார் குளிர்ந்த நீரின்கண் பூவாத மணி மிடைந்த குவளைப்பூவை வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொன்னரி மாலையினையும் பிற அணி கலங்களையும் யானையணிகளுடனே பெற்றனராய் நீங்கிப் பசியாராகலானே கொல்லோதான் வாரால் வலித்துப் பிணிக்கப்பட்ட பல கருவியையும் தொகுதிகொண்ட இனிய இயங்க ளொலிப்பத் தமது பாடலையும் மறந்து ஆடுதலும் மாட்டாராயினர்" என்னும் பொருள்பட.

மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்
இழையணி யானை இரப்போர்க் கீயும்
சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை
அடுபோ ரானு ஆத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றது மன் எம் கண்ணுளங் கடும்பே.
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியங் கறங்க
ஆடலும் ஒல்லார்தம் பாடலுமறந்தே,

புறம்-153

என்று பாடி வருந்தினர்.

## கழைதின் யானையார் வருகை

கல்வியிற் சிறந்த கழைதின் யானையார் என்னும் புலவர் வல்வில் ஓரியினது கொடைத் திறத்தைக் கேள்வியுற்றுக் கொல்லி நாட்டை அடைந்து அரசனைக் கண்டு, "இழிந்தோன் கூற்றால் ஈ எனச் சொல்லி இரத்தல் இழிந்தது. அவ்வீ என்றதனெதிர் ஈயேன் என்று சொல்லி மறுத்தல் அவ்விரத்தலினும் இழிந்தது. ஒருவன் இரப்பதன் முன்னே அவன் குறிப்பை முகத்தான் உணர்ந்து இதனைக் கொள்வாயாக என்று சொல்லித் தானிரந்து கொடுத்தல் ஒருவற்கு உயர்ந்தது. அதனை அவன் அவ்வாறு கொடுப்ப அதனெதிர் கொள்ளேன் என்று சொல்லி மறுத்தல் அக்கொடையினும் உயர்ந்தது. தெளிந்த

நீர்ப் பரப்பின் ஒலிக்கும் திரையையுடைய பெரிய கடல் நீரை உண்ணுராவர் தண்ணீரை விரும்பிஞேர். ஆவும் மாவும் சென்று நீரை உண்ணக் கலங்கிச் சேற்ரோடு கூடிய சிறுமை யுடைத்தேயாயினும் உண்ணும் நீரையுடைய தாழ்ந்த விடத்துச் செல்லும் வழி பல வாகும்; தாம் புறப்பட்டுச்செல்லப்பட்ட வழியிடத்து அப்பொழுது செய்யும் புள் நிமித்தத்தையும் புறப் பட்ட முழுத்தத்தையும் பழித்தலல்லது தாம் பரிசில் பெறக் கருதிச் செல்லப்பட்டோரை அவர் ஈத்திலரா யினும் பரிசிலர் பழியார். அதனுல் நீ எனக்கு இன்னே யாயினும், ஓரி, ஆகர்யத்தின்கண் மின் முதலிய தொகுதியையுடைய மழைபோல யாவர்க்கும் எப் பொருளையும் வரையாது வழங்கும் வண்மை யுடை யோய் நின்னை வெறேன்; வாழ்வாயாக" என்னும் பொருள்பட,

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணு ராகுப நீர் வேட் டோரே
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கி னதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை

உள்ளிச் சென்றோர்ப் பழியலர் அதனால்
புலவேன் வாழிய ரோரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே.

புறம் - 204

என்னும் பாடலைப் பாடித் தம் வாழ்க்கையின் நிலைமை யினை எடுத்துரைத்தார்.

ஓரி மன்னன் அப் புலவரைச் சில பகல் தம்மோ டிருத்தி,நல்லுணவு அருத்திச் .செந்தமிழ்ச் சுவைகளை அவர் பால் கேட்டறிய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த தம் கருத்தினை மாற்றி, அவருக்கு அப் பொழுதே பல பரிசில்கள் கொடுத்தனுப்பினன்.

வள்ளல் ஓரி பல பகைவர்களை வென்றும், தமிழ் மொழியை வளர்த்தும், புலவர்களுக்குப் பரிசில் வழங் கியும் அறநெறியில் நாடு காத்தும் பல நாள் வாழ்ந்து இறைவன் திருவடியை யடைந்தான். இவன் வாழ்க்கை அதியமான் வரலாற்றிலும் கூறப்படும்.

## 2. வள்ளல் காரி

### ஆட்சி

பக்கத்திலுள்ள குருந்த மரத்தில் படர்ந்து மாலை நேரத்தில் மலர்களை மலர்த்தி மணத்தைப் பரப்புகின்ற முல்லைச் செடிகள் மிகுந்து வளரும் நாடு மலையமானுடாகும். அந் நாட்டில் பெண்ணையாறு பல காலாகச் சென்று வயலிலுள்ள பயிர்களை வளர்க்கும். காலில் படுத்திருக்கும் எருமை தன் கன்று தன் பக்கம் வருவதைக் கண்டு அதனுக்குப் பாலூட்டும். நண்டுகள் வயலிலுள்ள வளைகளில் சென்று கண் வளரும். தவளைகள் அந் நண்டுகளுக்குத் தாலாட்டுக் கூறும். தாமரைகள் தங்கள் கணவனாகிய ஞாயிற்றின் புறப்பாட்டை முதன் முதல் காலையில் கண்டு வந்து தெரிவிக்கும் வண்டுகளுக்கு மலர்களாகிய கிண்ணத்திலுள்ள தேனை உண்பிக்கும்.

அந்நாட்டில் பல ஊர்கள் உண்டு. அவ்வூரிலுள்ள மக்கள் தாங்கள் இளமையிற் பழகிய தொழில்களைச் செய்து, அவற்றிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு நல்வாழ்க்கை வாழ்ந்து உறவினருடனுண்டு உறைந்தனர். அவ்வூர்களுள் பாவலர்களால் புகழப்படுவதும் காவலனுறைவதுமாகிய கோவலூர் தலைநகராகும். மாரியைப்போல் வரையாது வழங்குபவனும் பலநூற் கேள்வியுடையவனும் போரினில் புலி போன்று போரிடுபவனுமாகிய காரி அத் தலைநகரி

லிருந்து தன்னாட்டைக் காவல் செய்துகொண்டு வந்தான். அவன் மனைவி கற்பிலும் குணத்திலும் சிறந்தவள். அவளும் அவனும் மலரும் மணமும் போல மனமொன்றுபட்டு இல்லற வாழ்க்கையை இனிது நடத்தி வந்தனர்.

இங்ஙனம் வாழும் நாளில் கபலரென்னும் புலவர் கோவலூரிலுள்ள திருமுடி காரியைக் கண்டு பரிசில்பெற எண்ணித் தம்மூராகிய வாதவூரிலிருந்து புறப்பட்டார். புறப்பட்டு மாமரம் நிறைந்த வழியே நடந்து சென்றார். மாமர நிழலில் மங்கை யொருத்தி நல்லிசையோடு கூடிய பாட்டுப்பாடி நெல் குற்றிக் கொண்டிருந்தாள். கிளி அவளுடைய இசைப்பாட்டைக் கேட்டு அவ்விடத்தை விட்டகன்று வேறொரு மரத்தையடைந்து அவளைப் போன்று பாடிப் பழகிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டே நடந்து சென்றார். ஒரு புறத்தில் எருமைகள் வயலினுள் செல்லத் தொடங்கின. தவளைகள் அவற்றைத் தடுத்தன. எருமைகள் நிற்காமல் அவ்வயல்களில் நுழைந்து காவிமலர்களையும் கரும்புகளையும் தின்று அவ்விடத்தை விட்டகன்று அருகிலிருந்த பொய்கையி லிறங்கி மூழ்கின. மற்றொரு புறத்தில் முற்றக்கற்ற மூதறிவாளரைப் போன்று வெண்ணெல் விளைந்து தலைசாய்ந்து நின்றன. இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டே கோவலூரை நெருங்கினார். பரிகளையும் கரிகளையும் பலர் பழக்கும் ஒலிகள் கேட்டன. இளம் பெண்களுக்குப் பலர் இசை பயிற்றும் ஒலி

கள் கேட்டன. கபிலர் அவற்றைக் கேட்டுக் கொண்டே தெருவழியாக நடந்து அரண்மனையை அடைந்தார்.

அரசன் அரசிருக்கையிலிருந்து கொண்டு தன்னிடமிருக்கும் பாணர்களுக்கும், தமிழ் புலவர்களுக்கும், இசை வல்லார்களுக்கும் பொன்னும் தேரும் கொடுத்துக்கொண்டிருந்தான். கபிலர் காவலனை அடைந்தார். "ஒரு திசைக்கண் வள்ளியோனாகிய ஒருவனை நினைந்து நான்கு திசையினுமுள்ள பரிசின் மாக்கள் பலரும் வருவர்; அவர் வரிசையறிதல் அரிது. கொடுத்தல் மிகவும் எளிது. பெரிய வண்மையையுடைய தலைவ! நீ அவ்வரிசை யறிதலை நன்றாக அறிந்தாயாயின், அறிவுடையோரிடத்து வரிசை கருதாது ஒரு தரமாகப் பார்த்தலைத் தவிர்வாயாக" என்னும் பொருள்பட,

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் டோன்றல்
அது நன் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர்மாட்டே

புறம் - 121

என்னும் பாடலைப் பாடினார்.

கபிலரது பாடலைக் கேட்ட காவலன் அவரைத் தன்னோடு சிலபகல் தங்கும்படிகேட்டுக் கொண்டார். அவர் அரசன் விருப்பப்படி அவனோடு சிலபகல் தங்கி

யிருந்தார். அவர் செந்தமிழ் மொழியின் சிறப்பை அரசனுக்கு எடுத்துரைக்க எண்ணி, "அரசே! தமிழ் மொழி கூறுவதற்கு இன்னோசையுடைய மொழியாகும்; வடமொழி முதலியவற்றில் காணப்படும் வல்லோசைகள் தமிழ் மொழியில் இல்லை. தமிழ்மொழி இலக்கண வரம்புடையது. கண்களாற் காணும் காட்சிகளைப் பற்றியும் கருத்தினால் எண்ணும் எண்ணங்களைப் பற்றியுமே எடுத்துரைக்கும். நிகழாத பொய்நிகழ்ச்சிகளை எடுத்துரைத்து மக்களை மயக்குவதில்லை. இயற்கையாக ஒலி உண்டாகும் முறையில் உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் எடுத்துரைக்கிறது. ஒன்றிரண்டெழுத்துக்களால் சொற்களை உண்டாக்குகிறது. உலகத்தில் வாழ்வதற்கேற்ற முறைகளையும் அறங்களையும் தொழில்களையும் விரித்துக் கூறுகிறது. பிறமொழிகளிற் கூறப்படாத அகப்பொருள் புறப்பொருள் ஆகிய இரண்டினையும் எடுத்தியம்புகிறது. போர் முறையைக்கூறும் புறப்பொரு ளிலக்கணத்தையும் காதலர் வாழ்க்கையைக்கூறும் அகப்பொரு ளிலக்கணத்தையும் கற்பதனால் தமிழர்கள் புகழோடு வாழ்கிறார்கள். அவற்றைக் கற்காதொழியின் அறியாமை ஏற்பட்டுப் பிறர்க்கு அடிமையாவர்" என்று எடுத்துரைத்தார். காவலன் அவருரையை அன்பொடு கேட்டு மகிழ்ந்து அவருக்குப் பொன்னுடையும் பூண்களும் வேண்டுவன அணிவித்து யானைமருப்பா லியன்ற தேரிலேற்றி அனுப்பினான். கபிலர் மன்னன் பிரிவுக்கு வருந்தினான். நல்ல நாளன்றாகப் போகிப் புல், நிமித்தம்

இடையே நின்று தடுப்பச் செவ்வியன்றாகச் சென்று கூடிக் கூறுபாடன்றாக முனியும் வார்த்தைகளைச் சொல்லினும் வறிதாக மீள்வாரல்லர். ஒழுங்குபட ஓசை நிறைந்து ஒலிக்கும்அருவியையுடைய பெருமை பொருந்திய மலையையுடையோனைப் பாடியவர்கள் என்னும் பொருள்பட ஒரு பாட்டுப் பாடிப் பிரிந்து சென்றார்.

## நப்பசலையார் வருகை

சின்னாட்களுக்குப் பின் நப்பசலையார் என்னும் நல்லிசைப் புலவர் மெல்லியலார் காரி மன்னவனுடைய வண்மையைக் கேள்வியுற்று அவனிடம் பரிசில் பெறக்கருதி வந்தடைந்தார். "பறையொலி போலும் ஒலி பொருந்திய அருவியையுடைய முள்ளூர்க்கு வேந்தே! அழித்தற்கரிய தன்மையையுடைய நின் சுற்றத்துடனே பெருக, நிலத்தின்மேல் மிக்க மாந்தரெல்லாரினும் அறிவின்கண் மாசற்ற அந்தணனாகிய கபிலன் இரந்து செல்லும் புலவர்க்கு இனிப் புகழ்தற்கு' இடனில்லையாகப் பாடினான். அதனைக்கொண்டு சினமிக்க சேனையையுடைய சேரன் மேல்கடலின்கண் பொன்னைத்தரும் நாவாய் செலுத்திய அவ்விடத்து வேறு சில மரக்கலம் போகமாட்டாத அத்தன்மையுடையேமாயும் எமது மிடி துரக்க. நின்புகழ் கொடுவர வந்து நினது வண்மையிலே சில சொல்லத் தொடுத்தனம் யாங்கள். முட் போலும் பல்லினையுடைய பாம்பை எறியும் இடியேறு போல முரசு கிளர்ந்தொலிப்பத் தலைமையை

யுடைய யானையுடனே அரசு போர்க்களத்தின் கட்படப் பொறுத்தற்கரிய பூசலைச் சிதறவெட்டிப் பெரிதும் பொருந்தாத பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றுப் பக்கத்தை யுடைய நாட்டை யுடையோய் என்னும் பொருள்பட ஒரு பாட்டுப் பாடித் தாம் வந்த கருத்தினைத் தெரிவித்தனர். மன்னன் அவருக்கு வேண்டிய பரிசிலைக் கொடுத்தனுப்பினன். நப்பசலையாரும் தம்மூருக்கு மீண்டனர்.

## போர்

காரி மன்னன் தன் கற்பிற் சிறந்த காதலியோடு இல்லறம் நடத்திவந்தான். நாட்டையும் நன்கு காத்துவந்தான். காத்து வரும் காலத்தில் வடநாட்டு ஆரிய மன்னர் சிலர் காரி மன்னனை வெல்லக்கருதித் தங்கள் படைகளோடு முள்ளூரை அடைந்தனர். முள்ளூர் அவர்களால் கொள்ளையிடப்பட்டது. அவ்வூரினர் விரைந்தோடிவந்து கோவலூரை யடைந்து ஆரியர் வருகையையும் அவர்கள் செய்தசெயலையும் அரசனிடம் கூறினர். அரசன் வெகுண்டு தோள்தட்டிச் சிரித்து நின்றான்.

சேர ரல்லீர் செம்பிய ரல்லீர் அவர்தாமும்
வீரங் காண்பர் எம்படை வேண்டி விரைவாரே
கூரம் பேவிக் கூற்றுயிர் கொள்ளக் குறித்தீரே
வாரம் பாடின் ஊர்பல கொண்டு மகிழ்வீரே.

ஆற்றல் காட்ட ஆரியரேஇங் கடைந்தீரோ
மாற்றார் வந்தால் ஓடுவரோ தென் வளநாட்டார்
தோற்றால் வாழேம் இன்றெனின் நும்மைத் துணித்தேம்.

என்று கூற்றம் போலக் கூறி எழுந்தான். பறைகளும் சங்குகளும் ஆரவாரித்தன. வீரர்கள் வெகுண்டு வேந்தனை அடைந்தனர். காரி மன்னன் தன் நால் வகைப் படைகளோடும் புறப்பட்டான். தூளிகள் விண்ணுலகம் படர்ந்து காரிமன்னனுக்குப் பகைவர் களாகிய ஆரியர்களுடைய உயிர்கள் நாளை வந்து சேரும் என்று தெரிவித்தன. படைகள் கழனிகளைத் தாண்டியும் சோலைகளைத் தாண்டியும் முள்ளூரை அடைந்தன. அங்கிருந்த ஆரியர் படைகளைக் கண்டு ஆரவாரித்து அவர்களோடு போர் புரிந்தன.

ஒருவர் முன் ஒருவர் ஓடினர். சினந்து ஒருவரோ டொருவர் உரையாடினர். கருவிழியினின்றும் நெருப் புப் பொறி தோன்ற விழித்து நோக்கினர். வாள்களை வீசினர்கள். வேல்களை எறிந்தார்கள். அவை பகைவர் தோள்களிலும் தாள்களிலும் பாய்ந்து அவர்களை நிலத்தில் வீழ்த்தின. சிலர் முன்னேறிச் சென்று பகைவர் தலைகளைச் சீவினர். சிலர் வில்லைவளைத்துக் கணைகளைத் தொடுத்தனர். சிலர் வெகுண்டு சென்று கரிகளையும் பரிகளையும் ஆட்களையும் வெட்டினர். யானைகள் தங்களுக்கு முன் வரும் வீரர்களும் பரிகளும் மாளும்படி கால்களால் மிதிக்கும். காரிமன்னன் தன் காரிக்குதிரையிலேறி அதனைச் செலுத்தினான். அது படைக் கடலினூடே பாய்ந்து சென்றது. சூறுவளிக் காற்றைப் போல நாலா பக்கமும் சுற்றித் திரிந்தது. அது காலெடுப்பதையும் கீழே வைப்பதையும் யாரும் யறிந்திலர். அக்குதிரையைச் செலுத்தும் காரி மன் னன் வேல்களைப் பகைவர்மேல் வெகுண்டோச்

சினன். அவ்வேல்கள் ஆரியப் படைகள் மேல் பாய்ந்து ஊடுருவி அப்பால் சென்றன. ஆரிய மன்னர் களும் அவர்கள் படைகளும் ஆடிக்காற்றில் அகப் பட்ட பதர்கள்போல் அகங்குலைந் தோடிச் சென்ற னர். மானத்தைவிட்டு, வாள் முதலிய படைகளைக் கீழே எறிந்து கற்களும் முட்களும் கால்களில் தைக்கக் கால் வாங்கி நடந்தனர்.

வீரர்கள் ஆரவாரித்து அரசனை அணுகினர். அவனுடைய அருந் திறலைப் புகழ்ந்தனர். முள்ளூரி லுள்ள மக்கள் மகிழ்ந்து மன்னனை வணங்கி வாழ்த் தினர். மன்னர் வாகை சூடித் தன் படைகளோடு கோவலூரை அடைந்தான்.

தமிழ் நாட்டு மன்னரும் வீரர்களும் காரிமன் னன் வலிமை மிகுந்தவன் என்று வாயாரப் புகழவும், செந்தமிழ்ப் புலவர்கள் அவன் சீர்களை எடுத்துப் பாடவும் தன் நாட்டைக் காவல் செய்துவந்தான். பின்பு தன்னை வென்ற அதியமானையும் வென்று தன் நாட்டைப் பெற்று, நன்கு ஆட்சி செய்து இறுதியில் விண்ணுலகடைந்தான். இவனுடைய வாழ்க்கை அதியமான் நெடுமான் அஞ்சி வரலாற்றிலும் விரித் துக் கூறப்படும். ஆண்டுங் காண்க.

# வள்ளல் அதியமான்

## ஆட்சி

கன்னல் வளரும் வயலெங்கும்
கதிர்முத் தொளிரும் அயலெங்கும்
தென்னை ஈனும் விரிபாளை
தேங்காய் வீழ்த்தும் மடுவாளை
நன்னீ ரோடும் பன்னண்டு
நாளும் பாடும் பொன்வண்டு
பொன்னி பாயுந் தென்னாடு
பொருவில் கொங்கு நன்னாடே.

கொங்கு நாட்டின் ஒரு பகுதிக்குத் தகடூர் தலை நகராக விளங்கியது. தகடூரைச் சுற்றிப் பெரிய மதிலிருந்தது. அதனை அடுத்து நிமிர்ந்து உயர்ந்த நெல்லும் அதனை அடுத்து வாழையும் அதனை அடுத்தடுத்துப் பலா, கமுகு தென்னை மரங்களும் சூழ்ந்திருந்தன. அந் நகரத்திலிருந்த அதியர் குலத்தில் பூவின் இயைந்த மணம் போலவும் பொன்னின் இயைந்தஒளி போலவும் அதியமான் நெடுமான் அஞ்சி தோன்றினான்.

அதியமான் இளமைப் பருவத்திலே பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்றான். தமிழ்த் தேனைப் பருகினான். பண்டிதரிடத்தில் இலக்கண இலக்கியங்களையும் அரசியல் நூல்களையும் அறிவியல் நூல்களையும் கற்றுணர்ந்தான். வில்வித்தையிலும், வாள் வித்தையிலும், கரியேற்றத்திலும், பரியேற்றத்திலும் வல்லவ

ஞன். வடிவார் குழலி என்ற மங்கையை மணந்து உடலும் உயிரும் போல ஒன்றி இல்லறம் நடத்தினன். அவன் தன் தந்தை விண்ணுல கடைந்தபின் தான் தன்னுடைய நாட்டை அரசாண்டு வந்தான். அதியமான் குடையும், அவன் தன்னிடத்தே முறை வேண்டினர்க்கு நடுநிலை யறிந்து கூறும் விடையும், அவன் நாட்டு மக்களை மகிழ்வித்தன. அவனுடைய கொடை புலவர்க ளுள்ளத்தைப் பூரிக்கச் செய்தது.

## ஔவையார் வருகை

ஔவையார் அதியமான் தமிழறிவையும் கொடையையும் புலவர்கள் புகழக் கேட்டார். அவனிடம் பரிசில் பெற எண்ணினர். பூங்கொடி கால் கொண்டு நடந்து சென்றாற் போல வழியே நடந்து சென்றார். பொன்னளிக்கும் புரவலனை நாடிச் செல்லும் தன்னைப் போலவே பழமுடைய மரங்களை நாடிப் பறவைகள் வானத்தில் பறந்து செல்வதைக் கண்டு மனமகிழ்ந்து நடந்தார். நடந்து சென்ற வழியில், வண்டுகள் பாடிச் சென்றன. தாழைகள் மடல் வாய்திறந்து சோறளித்து அவற்றிற்கு விருந்து செய்தன. கொன்றை மலர்கள் வண்டுகாள் கொண்டு செல்மின் என்று பொன் மலர் நல்கின. அக்காட்சியைக் கண்டு களித்து ஔவையார் நடந்து சென்றார். காந்தட் செடிகள் மலர்களாகிய கைகளால் அவர் செல்லும் வழிகளைத் தெரிவித்தன. வயல்களில் வளர்ந்து நின்ற நெற் பயிர்கள் அவரைத் தலைகளால் வணங்கி நின்றன. மாடத்திலிருந்த கொடிகள் வருக

என்று அழைத்தன. தகடூரைத் தமிழ் மூதாட்டியார் அடைந்தார்.

காலை நேரத்தில் முறைவேண்டுவார்க்கும் குறை வேண்டுவார்க்கும் காட்சிக் கெளியனாய் அதியமான் நாளோலக்கத்தி லமர்ந்திருந்தான். ஔவையார் அகழ் கடந்து வாயில் கடந்து மண்டபத்தை அடைந்தார். வாழ்க மன்னவ! என்று வாழ்த்தினார். வணங்கினார். மன்னன் இவருக்கு இருக்கை கொடுத்தான். தாம் கொண்டு வந்த யாழை எடுத்து இசையூட்டினார். காந்தள் மலரனைய கைவிரல்களால் நரம்புகளைத் தடவி வாசித்தார். வாயினாலும் பாடினார். பாடிய பண்ணும் பாடலும் அதியமானையும் அவணிருந்தோரையும் மகிழ்வித்தன. மன்னன் நன்று நன்று என்று நவின்று அவர் பாடலையும் அவரையும் புகழ்ந்தான். ஔவையாரை அழைத்துச் சென்று தன் வாழ்க்கைத் துணைவிக்குக் காட்டி அவர் புலமையைத் தெரிவித்தான். அமிழ்தமனைய அறுசுவை உணவு அவருக் கருத்தினான்.

## ஔவையார் சினம்

ஒரு நாளாயிற்று இருநாளாயின அதியமான் பரிசில் கொடுத்து ஔவையாரை அனுப்பவில்லை. அதியமானுடைய கல்வியின் திறமையும், சொல்லின் திறமையும், உபசரிக்கும் திறமையும் ஔவையாருக்கு இன்பத்தைக் கொடுத்தன. பரிசிலளித்து அனுப்பாதது அவர் மனத்தை வருத்தியது. பரிசல் பெறுமலே வீட்டுக்குச் செல்லத் துணிந்தார். அரசனிடம்

சென்று தெரிவித்தாரிலர். "வாயில் காப்போய்! வாயில் காப்போய்! விரைந்த குதிரையுடைய குரிசிலாகிய நெடுமான் அஞ்சி தான் தன் தரமறியான் கொல்லோ? அது கிடக்க. என் தரம் அறியான் கொல்லோ? அறிவும் புகழும் உடையோர் இறந்தாராக, வறிய இடத்தையுடைய உலகமும் அன்று. ஆதலாற் காவினேம் யாழை. கட்டினேம் பைகளை. மரத்தைத் துணிக்கும் தச்சன் பயந்த மழுவையுடைய கைத்தொழில் வல்ல மகார் காட்டிடத்துச் சென்றால் அக் காட்டகம் பயன்படுமாறு அவர்க்கு எத் தன்மைத்தோ? எமக்கும் யாதொரு திசைக்கட் போகினும் அத்திசைக்கண் சோறு அத்தன்மைத்து." என்னும் பொருள்பட என்று வெகுண்டு பாடி விரைந்து சென்றார்.

வாயி லோயே வாயி லோயே

*　　*　　*

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறி யலன்கொல்? என்னறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே. அதனால்
காவினம் கலனே. சுருக்கினெம் கலப்பை.
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே. புறம்-206

வாயிற் காவலன் ஔவையாரின் சினத்தை அறிந்தான். அரசனிடம் விரைந்து சென்று ஔவையாரின் செல்கையைக் கூறினன், மன்னன் கலக்க

மடைந்தான். நடந்து சென்று ஔவையார் செல்கை யைத் தடுத்து அழைத்துக்கொண்டு வந்தான். இருக்கையில் இருத்திப் பொன்னும் மணியும் பூந்துகி லும் கொடுத்தனுப்பினன்.

## பெருஞ் சித்திரனர் வருகை

பெருஞ் சித்திரனர் என்னும் புலவர் மிகுந்த வறுமையுடையவர்; பல புதல்வர்களையுடையவர். மன்னர்களைப் பாடிப் பரிசில் பெற்று வறுமையைப் போக்கியும் மக்களை வளர்த்தும் வந்தார். அவர் அதியமானிடம் பரிசில் பெற எண்ணிக் காடும் மலை யுங் கடந்து வழியிலுள்ள பலவூர்களையும் கடந்து தகடூரை யடைந்தார். அரண்மனையை அடைந்தார். அரசன் அமைச்சரோடு தன் பகையை அடக்குவதற் குச் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். பெருஞ் சித்திர னர் வருகையை அறிந்த அஞ்சி ஏவலனை அழைத்து அவனிடம் பரிசில் கொடுத்து அனுப் பினன். அரசன் கொடுத்த பரிசிலை ஏவலன் சித்திர னரிடம் கொண்டு வந்து கொடுத்தான். சித்திரனர் திகைத்தார். தம்மைக் கண்டு தம் தகுதி யறிந்து பரிசில் கொடுக்காததற்கு வருந்தினர். அவன் கொடுத்த பரிசிலைப் பெறுவதற்கு மறுத்தார். அதிய மான் அவர் மன நிலையை அறிந்து தானே வந்து உப சரித்துப் பரிசில் கொடுத்தான். அதனைப் பெற்றுப் பெருஞ் சித்திரனர் தம் ஊர்போய்ச் சேர்ந்தார்.

அறிவிற் சிறந்த ஔவையார் நாஞ்சில் என்னும் ஊருக்குத் தலைவனாகிய வள்ளுவனிடம் சென்றார்.

அவன் அவரை மதித்துப் பெரிய யானையைப் பரிசி லளித்தான். அதனைப் பெற்றுக் கொண்டு அவனைப் புகழ்ந்து பாடி அவனிடம் விடை பெற்று அந் நாஞ் சிலை விட்டகன்று தம் ஊருக்குப்போய்ச் சேர்ந்தார். ஔவையார் அடிக்கடி அதியமானிடம் வந்து பரிசில் பெற்றுக்கொண்டு செல்வதும் வருவதுமாக வாழ்ந்து வந்தார்.

## எழுவரை வெல்லல்

எழினி என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் புலவர்களை ஆதரிப்பவன். பெரும் படையை யுடையவன். அதியமானின் உறவினன். அவ்வெழினி அதியமானிடம் பகைமையுடையவன். அதியமானை வெல்லவேண்டுமென்று நீண்ட நாளாக நினைத்துக் கொண்டிருந்தான். தன் படை வலிமையால் அவனை வெல்ல முடியாது என்று எண்ணினன். தனக்குத் துணையாக ஆறு சிற்றரசர்களைச் சேர்த்து அவர் களுடைய படைகளையும் தன் படையோடு சேர்த்து முன்னால் அனுப்பினன். எழினியும் அவனோடு சேர்ந்த சிற்றரசர்களும் பரிமேலேறித் தகடூர் நோக்கிச் சென்றார்கள். கொடிகள் சென்றன. படைகளும் நடந்தன. மன்னர்களும் படைகளும் தகடூரை அடைந்தனர்.

அதியமான் பகைவர் வருகையை அறிந்தான். தன் படைகளைத் திரட்டி அவர்களை எதிர்த்தான். இருதிறத்தினர்களும் போர் புரிந்தனர்.

குத்தினர். வெட்டினர். கொத்தினர். முட்டினர்.
கத்தி சுழற்றினர். கைப்படை தொட்டனர்.
ஒத்த உரத்தினர் பற்றிவு ருத்தனர்.
செத்தனர் பற்பலர் சீர்கொ ளுரத்தினர்.

கரிகளும் கரிகளும் ஒன்ருெடொன்று பொருதன. பரிகளும் பரிகளும் ஒன்ருெடொன்று பகைத்துச் சண்டை செய்தன. தேர்களும் தேர்களும் ஒன்ருெடொன்று சினந்து எதிர்ந்தன. வீரர்களும் வீரர்களும் ஒருவரோடொருவர் வெகுண்டு மலைந்தனர். செருமேற் சென்ற மன்னர் எழுவரும் வாளாலும் வேலாலும் கரிகளையும் பரிகளையும் காலாட் படைகளையும் கொன்று குவித்தனர். அதியமான் நெடுமான் அஞ்சி செருக்களம் புகுந்தான். வில்லை எடுத்தான் அம்பினைத் தொடுத்தான். அவைகள் எதிர்ந்த பகைவர்மேல் பாய்ந்தன. அம்புகள் பாயப்பட்ட வீரர்கள் ஆரைகள் இணைக்கப்பட்ட குறடுபோலக் காணப்பட்டனர். வாளை வீரர்கள்மேல் வீசினுன். பனைமரங்களிலிருந்து காய்கள் வீழ்வனபோல மறவர் தலைகள் உடம்பிலிருந்து மண்ணில் வீழ்ந்தன. வேல்களை எறிந்தான். அவை யானைகளின்மேல் பாய்ந்து ஊடுருவிச்செல்ல, கருமுகில் மண்ணில் வீழ்ந்து புரள்வனபோல வீழ்ந்து புரண்டன. பகைவர்களும் அவர்கள் படைகளும் எதிர்ப்பதற்கு அஞ்சின. எழினி அதியமான் எறிந்த வேலொன்றினுக்கு இரையாயினுன், மன்னர் அறுவரும் எழினி மண்ணில் வீழ்ந்தவுடன் புறமுதுகிட்டுப் போர்க்களத்தை விட்டகன்றனர். அவர்கள் படைகளும் அவர்களைத் தொடர்ந்து ஓடின.

ஔவையார் போர் நிகழ்ச்சியைப் பார்க்கப் போர்க்களம் போயிருந்தார். அதியமான் ஆற்றலை அறிந்தார். "திண்ணிய பிணிப்பையுடைய முரசம் இழு மென்னும் ஓசையை யுடைத்தாய் ஒலிப்ப, மேற் சென்று போரை வெல்லுதல் இனி எங்கே யுள்ளது? நின்னொடு எதிர்ந்து வந்தோர் நினது தூசிப்படையைப் பொறுத்தற்கும் மாட்டாராய்ச் சிதறிக் கெட்டுப் போகலிலே மருவிய பெருமையில்லாத அரசரது நோயின் பக்கத்தான் இறந்த உடம்பை அணைத்துத் தமது ஆசைத் தன்மையை மறந்து அவர் வாளாற் படாத குற்றம் அவரிடத்தினின்றும் நீக்கவேண்டி அறத்தை விரும்பிய கோட்பாட்டையுடைய நான்கு வேதத்தையு முடைய அந்தணர் நல்ல கூற்றிலே பொருந்திய பசிய தருப்பைப் புல்லைப் பரப்பினராய்க் கிடத்தித் தமது ஆண்மையே பற்றுக்கோடாக நல்ல பூசலிலே பட்ட மேம்பட்ட வீரக் கழலினையுடைய வேந்தர் செல்லும் உலகத்திலே செல்க என்று வாளோக்கி யடக்கும் இழிதகவும் பிழைத்தார்கள். வரியையுடைய தேனீ ஒலிக்கும் வாயின்கண் வந்து புகுகின்ற மதத்தினையுடைய தலைமை பொருந்திய யானை போர்க் களத்தின் கண்ணே படப் பொறுத்தற் கரிய பூசற்கண்ணே சிதற வெட்டி, பெரிய தகைமை யுடையாய் நீ சீரிய புண்பட்டபடியால்," என்னும் பொருள்பட,

திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது? வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றூர் வெடிபட்டு

ஓடல் மரீஇய பீடில் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத் தொழிய
வருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே. புறம்-93

என்ற பாட்டைப்பாடி அதியமானைப் புகழ்ந்தார். அதியமான் முரசங்கள் ஆர்க்கவும், பல்லியங்கள் முழங்கவும், சாமரைகள் இரட்டவும், படைகள் பின்தொடரவும், பரிமிசை இவர்ந்து தன் கோயிலை அடைந்தான்.

## மகப் பேறு

அதியமான் போர்க்களஞ் சென்றிருந்த பொழுது அவன் மனைவி வடிவார் குழலிக்கு ஓராண் மகவு பிறந்தது. ஆண்மகவு பிறந்தசெய்தி அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரசன் புண்பட்ட போர்க் கோலத்துடனே அம்மகவைப் பார்க்கச் சென்றான், அதுவே முதல் மகவாதலின் அதனைப்பார்த்து அகம் மிக மகிழ்ந்தான். மகவைப் பார்த்து அகம் மிகவும் மகிழ்ந்த பின்பும் போர்க்களத்தில் மாற்றாரை வெகுண்டு பார்த்தனால் ஏற்பட்ட அவனுடைய கண்

களின் செந்நிறம் மாறும லிருந்தது. அருகிலிருந்த ஔவையார் "கையின் கண்ணது வேலே; காலின் கண்ணது அணிந்த வீரக்கழல்கள்; உடம்பின் கண்ணது வேர்வை; மிடற்றின் கண்ணது ஈரம்புலராத பசிய புண்; பகைவர் தொலைதற்கு ஏதுவாகிய வளரும் இளைய பனையினது உச்சியின்கண்ணே வாங்கிக் கொள்ளப்பட்ட ஊசித் தன்மையைப் பொருந்திய வெளிய தோட்டையும், வெட்சியினது பெரியமலரை யும், வேங்கைப்பூவுடனே விரவிச் சுருண்ட கரிய மயிர் பொலிவு பெறச் சூடிப் புலியோடு பொருத வலிய யானையை யொப்ப இன்னமும் நீங்காது சினம். ஆதலால், ஐயோ பிழைத்தாரல்லர் இவனைச் சினப் பித்தவர்கள்; பகைவரை வெகுண்டு பார்த்தகண் தன் னுடைய புதல்வனைப் பார்த்தும் சிவப்பு நீங்காவா யின" என்னும் பொருள்பட ஒரு பாட்டுப் பாடினர். அதியமான் அவர் பாடலைக் கேட்டு மகிழ்ந்தான். நாளோலக்கத்தை அடைந்தான். போரிற் புண்பட் டவர்களுக்கும் பகைவரை வென்றவர்களுக்கும் புலவர் களுக்கும் பொன்னும் பிறவும் கொடுத்தான்.

அதியமான் தன் நாட்டை நன்கு காவல் செய்து வந்தான். தன் நாட்டு மக்களுக்குப் படைப் பயிற்சி யளித்து வந்தான். மன்னன் தன் மனைவியோடு ஒன்றுபட்டு நல்லறஞ் செய்தும் மகவொடு மழலை கேட்டு மகிழ்ந்தும், ஔவையாரோடு அருந்தமிழ் ஆராய்ந்தும், இன்னிசை கேட்டும் இன்பந் துய்த் துப் பன்னாள் வாழ்ந்தான்.

## தூது

தொண்டைமான் இளந்திரையன் என்பான் அதியமானிடம் பகைமை கொள்ளத் தொடங்கினான். தொண்டைமான் புலவர்களைப் பேணும் புகழுடையான் என்பதையும், செந்தமிழ் அறிந்த பைந்தமிழ்க்குரிசில் என்பதையும் அறிந்து அதியமான் ஔவையாரை அனுப்பி அவன் பகைமையை அடக்க எண்ணினான். ஔவை பாரிடத்திலும் தன் கருத்தினை உரைத்தான். இளந்திரையன் இருந்து அரசாளும் காஞ்சிமா நகருக்கு அவரை ஏகுவித்தான்.

ஔவையார் அதியமானிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனையை அகன்றார். தகடூரையும் அதனைச் சார்ந்த வயல்களையும் கடந்து ஒரு பூம்பொழிலை அடைந்தார். குயிலும் பிறவும் ஔவையார் வருகையை அறிந்தன. தாங்கள் பழகிய இசையையும் நடிப்பையும் காட்டி அவரிடம் நல்லுரை பெற எண்ணின. குயில் இன்னிசை பாடியது. வரிவண்டு குழலூதியது. மயில் ஆடிற்று. ஔவையார் அக்காட்சியைக் கண்டார். நன்று நன்று என்று நவின்று அப்பால் நடந்தார். ஒரு பக்கம் வாழை மரமும், பலாமரமும், மாமரமும் தமிழ் மொழியின் சுவையைக் கேள்விப்பட்டன. அவை தமிழின் சுவையைப் போன்ற இன்சுவையைத் தாம்பெற வேண்டும் என்று எண்ணின. உணவு உண்ணும் வேராகிய வாயையுடைய தலைப்பாகத்தைத் தரையில் வைத்துத் தலைகீழாகத் தவம்புரிந்தன. தமிழின்

இன்சுவையை உண்டு உண்டு இன்புற்ற தையலாரா கிய ஒளவையார் தங்கள் அருகே வருவதைத் தெரிந் தன. தங்கள் பழங்கள் தமிழ்ச் சுவைபோன்று இனிமையுள்ளனவா? என்று அவற்றை உண்டு இனி மையின் தன்மையை எடுத்துரைக்க என்று அவ ருக்கு முன்பு தங்கள் கனிகளை உதிர்த்தன. அவற்றை உண்டு ஒளவையார் அப்பால் நடந்தார். பச்சைப் பசும் பட்டினை விரித்தாற் போன்ற பசும்புல் வெளி இருந்தது. அப்புல் வெளியினூடே நடந்து சென்றார். மாடத்தின் உச்சிகளில் கட்டப்பட்டிருந்த கொடிகள் தமிழ் மூதாட்டியாரை வருக வருக என்று மகிழ்ந்து அழைப்பன போல ஆடின. காஞ்சிமா நகரை ஒளவையார் கண்ணுற்றார். நகரினுள் நுழைந்து நடந்து சென்றார்.

காஞ்சிமா நகரம் மாடங்களால் மிகுந்த வனப் புடையது. மாடங்களின்மேல் மங்கையர் மூன்று பந்துகளினாலும் அவற்றிற்கு மேற்பட்டதொகையை யுடைய பந்துகளாலும் எறிந்தும் பிடித்தும் விளை யாடிக் கொண்டிருந்தனர். மாடத்தினுள்ளே சான் றோர் பலர் தமிழ்ச் செய்யுளிலுள்ள தீஞ்சுவைகளைத் தேனையுண்ணும் வண்டுகள் போல் தேர்ந்து கொண் டிருந்தனர். அவர்களைப் பார்த்துக்கொண்டே தெரு வழியாக நடந்து சென்றார். சிறுவர்கள் சிறு தேரு ருட்டி விளையாடினர். மகளிர் பலர் மெல்லிய நூல் களைப் பஞ்சினால் நூற்றுக் கொண்டிருந்தனர். ஆட வர்கள் பழங்கள், பூக்கள், தளிர்கள் முதலிய உருவங் களை விளிம்பில் அமைத்துப் பாலாவி யனைய மெல்லிய

ஆடைகளை நெய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தொழிலைக் கண்டு கொண்டே காவலன் வாழும் குன்றமனைய கோவிலை அடைந்தார்.

அரசனுக்கு ஔவையார் தம் வருகையைத் தெரிவித்துச் சபையை அடைந்தார். இளந்திரையன் வருக என்று வரவழைத்துத் தமிழ் மூதாட்டிக்கு இருக்கை கொடுத்தான். அவர் நலத்தை வினவி அறிந்தான். வந்த வழியைப் பற்றியும் ஆங்காங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கேட்டறிந்தான். உண்ணற்கினிய உணவூட்டி உபசரித்தான்.

இளந்திரையன் ஔவையாரைப்பற்றி நன்கறி வான். அரசனால் ஆதரிக்கப்படுதலை அறிவான். அவைப் புலவராய் இருத்தலை அறிவான். அதியமான் அவருக்குப் பரிசில் கொடுத்துப் பாராட்டுதலை அறி வான். அவருக்குத் தன் படைப் பெருக்கத்தைக் காண்பித்தால் அவர் தன் வலியைப்பற்றி அவனிடம் தெரிவிப்பார் என்று எண்ணினான். தெரிவிப்பின் அதியமான் தனக்கு அடங்கி நடப்பான் என்றும் எண்ணினான்.

வருக என்று ஔவையாரை இளந்திரையன் அழைத்துக்கொண்டு சென்றான். சென்றுகொண்டி ருக்கையில் நும் அகன்ற இடத்தையுடைய நாட்டில் பொருநருளரோ என்று வினவினான். அவ்வினாவிற்கு ஔவையார் நன்கு விடையளிக்க வேண்டுமென்று எண்ணினார். "மடப்பத்தினையும் மையுண்ட கண்களை யும் ஒளிதங்கிய நுதலினையுமுடைய விறலி! என்னோடு

பொருவாருமுளரோ நும்முடைய பெரிய இடத்தை யுடைய நாட்டின்கண் என்னைக் கேட்டலமையாத செருச் செய்யும் தானையையுடைய வேந்தே! நீ போர் செய்யக் கருதுவையாயின்; எம்முடைய நாட்டின் கண்ணே அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரரும் உளர். அதுவே யன்றி, மன்றின்கண் தூங்கும் பிணிப்புற்ற முடிவினது காற்றெறிந்த தெளிந்த ஓசையை யுடைய கண்ணின்கண் ஒலியைக் கேட்பின், அது போர்ப்பறை என்று மகிழும் என்னுடைய தலைவனு முளன்'' என்னும் பொருள்பட,

மடவரல் உள்கண் வாணுதல் விறலி
பொருநரு முளரோ நும் அகன்றலை நாட்டென
வினவ லானுப் பொருபடை வேந்தே
எறிகோ லஞ்சா அரவி னன்ன
சிறுவன் மள்ளரு முளரே. அதா அன்று
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னும் என்னையும் உளனே. புறம்-89

என்ற செய்யுளை அவனுக்கு முன்னால் எடுத்துரைத்தார்.

ஔவையார் உரைத்த உரைகளைக் கேட்டுக் கொண்டே இளந்திரையன் அவரை அழைத்துச் சென்றான். அருகிலிருந்த மடவார் உறையும் மாளிகையைக் காட்டினன். வருக என்று மேலும் அழைத்துச் சென்று இவை போரிடும் பரிகள். இவை போரிடும் கரிகள் என்றும் அவற்றைக் காட்டிக்

கொண்டு சென்றான். படைக் கொட்டிலுக்கு அழைத்துச்சென்று அழகுற அணி அணியாய் அமைக்கப்பட்டிருந்த வேற்படைகளையும், விற்களையும், அம்புகளையும், ஈட்டிகளையும், வாள்களையும், கேடயங்களையும், பிறவற்றையும் காட்டினன். ஔவையார் அஞ்சினாரில்லை. அதியமான் திறமை அவருக்குத் தெரியும். அவன் திறமையை அறியாத இளந்திரையனுக்கு அதனை அறிவுறுத்த எண்ணினார். "இவை தாம் பீலி அணியப்பட்டு மாலையைச் சூட்டப்பட்டு உடலிடந்திரண்ட காம்பை அழகுபடச் செய்யப்பட்டு நெய்யிடப்பட்டுக் காவலையுடைய அகன்ற கோயிலிடத்தன. அவை தாம், பகைவரைக் குத்துதலால் கங்கும் நுனியும் முரிந்து கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தன வாயின எந்நாளும்; செல்வமுண்டாயின் உணவு கொடுத்து, இல்லையாயின் உள்ளதனைப் பலரோடு கூடவுண்ணும் வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனாகிய தலைமையையுடைய எம் வேந்தனுடைய கூரிய நுனியையுடைய வேல்கள்" என்னும் பொருள்பட,

இவ்வே, பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே. அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லாயின் உட னுண்ணும்
இல்லோர் ஒக்கற் றலைவன்
அண்ணலங் கோமான் வைநுதி வேலே புறம்-95

என்று முன்னர் இளந்திரையனைப் புகழ்வது போலப் பழித்தும், அதியமானை இகழ்வதுபோலப் புகழ்ந்தும் எடுத்துரைத்தார். இறுமாந் துரையாடிய இளந்திரையன் ஒளவையார் உரைகேட்டு அடங்கினன்.

மங்கை சொல்லம்புகளால் மன்னன் வலியிழந்தான். இது நாணத்தக்க செயல் என்று தான் நாணி மறைவதுபோல ஞாயிறு மேலை மலையை அடைந்தான். அரசனை வென்ற அரிவை யாவள் என்று அலைகடல் மங்கை அகத்தெழு மகிழ்ச்சியால் தன் முகத்தை உயர்த்திப் பார்ப்பது போலத் திங்கள் திரைக்கடலிலிருந்து தோன்றிற்று. காலையில் கதிரவன் எழுந்தபின் ஒளவையார் அரசனிடம் விடை பெற்று முன் சென்றவழியே திரும்பித் தகடூரை யடைந்து நெடுமானைக் கண்டு நிகழ்ச்சிகளனைத்தை யும் எடுத்துரைத்தார். அவன் ஒளவையாருடைய திறமையைக் கேட்டு வியந்து அவரிடம் முன்னையினும் பன்மடங்கு அன்பு வைத்தான். பொன்னும் பூணும் அவருக்குப் பரிசிலளித்தான்.

## ஒளவைக்கு நெல்லிக் கனி ஈதல்

ஒருநாள் அதியமான் தனக்குரிமையாகவுடைய குதிரைமலையையும் அதனைச் சார்ந்த காட்டினையும் காண்பதற்கு எண்ணித் தன் பரி இவர்ந்து சென்றான். செல்லும் வழியில் ஒரு சோலை இருந்தது. அதனுள் நுழைந்தான். பல மாமரங்களும் தென்னைமரங்களும் பலாமரங்களும் பிற மரங்களும் வளர்ந்திருந்தன.

பறவைகள் பாடிப் பறந்து அங்குமிங்கும் திரிந்தன. அரசன் குதிரையினின்றும் இறங்கி அங்குள்ள காட்சிகளைப் பார்த்துக்கொண்டே நடந்து சென்ருன். பெரிய பலாமரமொன்றில் நல்ல பழங்கள் பல பழுத்திருந்தன. அதனருகே மாமரம் தன் கிளையிலுள்ள குலையை அசைத்து அசைத்துப் பலாமரத்திலுள்ள பழத்தைக் கீழே வீழ்த்திற்று. பழத்தை இழந்து பலாமரம் வருந்திக் கொண்டிருந்தது. தென்னை அதனை அறிந்து தன் உச்சியிலிருந்த நெற்றைப் பலாப். பழத்தை வீழ்த்திய மாமரக்குலையை வீழ்த்திக் கீழே உதிர்த்தது. அக்காட்சியையும் பிற காட்சிகளையும் கண்டு சோலையின்றும் அகன்று மலைச்சாரலை யடைந்தான். சாரலில் அருவிநீர் பாயப்பெற்றுத் தினைப்பயிர் நன்கு விளைந்திருந்தது. விளைந்த அத்தினைப் பயிரைக் காவல் செய்வதற்கு ஒரு கன்னிப் பெண் வந்திருந்தாள். அவள் குறிஞ்சிப் பண்ணைத் தன் வாயால் இனிமையுறப் பாடிக் கொண்டிருந்தாள். பண்ணைத் தொடங்குவதற்கு முன்ஞல், அவளிருந்த கொல்லையிலுள்ள தினைப்பயிரைத் தின்பதற்கு யானை ஒன்று வந்திருந்தது. பண்ணை எடுத்து அப்பெண் பாடப் பாட யானையின் செவிக்கு இனிமை ஏற்பட்டது. இருந்த இடத்திலிருந்து கொண்டு அவள் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தது. தின்னுதற்குவந்த தினையுணவை மறந்தது. கன்னிப்பெண் காவல்செய்கிருள் என்று அக்கொல்லையை விட்டு நீங்கவுமில்லை. மலைச்சாரல் வழியாகச் சென்று கொண்டிருந்த மன்னன் அக்காட்சியைக் கண்டான்.

கன்னிப் பெண்ணின் இசை இனிமையையும் களிற்றின் இசைக் கேள்வியையும் தன்னுள்ளே எண்ணி மகிழ்ந்தான். அவ்விடத்தை விட்டகன்றான்.

ஓரிடத்தில் ஒரு மான் காணப்பட்டது. அதனருகே ஒரு நாகிளங் கன்றும் காணப்பட்டது. அது அன்று ஈன்ற கன்று. அக் கன்றினுடம்பை அம்மான் நாவினால் நக்கி நக்கி அதனையும் நடத்தித் தானும் நடந்து கொண்டிருந்தது. அக்காட்சியையும் காவலன் கண்டு சென்றான்.

அதியமான் மேலும் நடந்தான். பசும் புல் தரையில் புலியொன்று படுத்திருந்தது. அதனை எய்வதற்கு வில்லை எடுத்து அம்பைத் தொடுத்தான். புலி அரசனைக் கண்டது. அம்பு விடுமுன் எழுந்து அவ்விடத்தை விட்டு அகன்றது. அரசனும் அதனைத் தொடர்ந்து சென்றான். செல்லும் நெறியில் ஒரு சித்தன் காணப்பட்டான். வில்லைக் கீழே வைத்துவிட்டு வேந்தன் அச் சித்தனை வணங்கி நின்றான். அச் சித்தன் அரசனுக்கு இருக்கை கொடுத்தான். அரச! நின் கொடைத் திறமையையும் கோலின் திறமையையும் கேள்விப் பட்டிருக்கிறேன். நீ நல்ல புகழோடு வாழ்கிறாய். நீ நீண்டகாலம் வாழ்வாயாக என்று கூறினான். காட்டினூடே சென்று நெல்லிக்கனி ஒன்று பறித்து வந்து அதியமானிடம் கொடுத்து மன்னவ! நெல்லிக் கனிகளில் பலவகை உண்டு. நெல்லிக்கனிகளை உண்ணின் அவை நீர் வேட்கையை நீக்கும். நான் கொடுத்த இக் கனியும் நெல்லிக்கனிதான். இது ஏனைக் கனிகளைப்

போன்றதன்று. இது தன்னை உண்டவர் சாவினை ஒழிக்கும் என்று கூறி மறைந்தான். சித்தனைச் சிவ பெருமான் என்று எண்ணினான். அவன் அளித்த நெல்லிக்கனியை அதியமான் உண்டானில்லை. தான் உண்பதனினும் ஔவையார் உண்ணுவாராயின் தமிழ்மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மை உண் டாகும் என்று எண்ணினான். நடந்து வழியே வந்து பரிமிசை யிவர்ந்து அரண்மனை அடைந்தான்.

அதியமான் ஔவையாரை அழைத்தான். அருகே அமர்த்தினான். காட்டில் கன்னிப் பெண் குறிஞ்சிப் பண் பாடிய திறமையையும் அதனை அமைதியோடு கேட்டுக்கொண்டிருந்த யானையின் செயலையும் எடுத் துரைத்தான். அவ்வுரையினுக் கிடையில் சித்தன் கொடுத்த நெல்லிக் கனியை நல்கித் தின்னுக என்று செப்பினான். ஔவையார் கனியைக் கையினால் வாங் கினார். காட்சிக்கு இனிமையாயிருந்தது. வாயில் போட்டார். தின்றார். தீஞ்சுவை யுடையதாயிருந்தது. "மன்னவ! கனி இன்சுவை யுடையதாயிருக்கிறது இன்னும் ஒன்று தருக. இக்கனி எப்படி உனக்குக் கிடைத்தது என்று கேட்டார். சித்தனைக் கண்ட வரலாற்றையும் அவன் கொடுத்த வரலாற்றையும் அவன் கூறிய கூற்றையும் கூறினான். ஔவையார் அவன் உரைத்த உரையைக் கேட்டுத் திகைத்தார். அரசன் தானும் உண்ணாமல் தன்னுடைய மனைவி மைந்தனுக்கும் ஊட்டாமல் தன்னை யழைத்துக் கொடுத்ததற்கு வியப்படைந்தார்.

"வெற்றியுண்டான தப்பாத வாளை எடுத்துப் பகைவர் களத்தின்கட் படவென்ற கழலவிடப்பட்ட வீரவளை பொருந்திய பெரிய கையினையுடைய மிக்க ஆரவாரத்தைச் செய்யும் மதுவினையுடைய அதியர் கோமான், மாற்றுரைப் போரின்கட்கொல்லும் வீரச் செல்வத்தினையும் பொன்னுற் செய்யப்பட்ட மாலையையுமுடைய அஞ்சி, நீ பால் போலும் பிறை நுதல் போலப் போலிந்த திருமுடியினையும் நீல மணி போலும் கரிய திருமிடற்றினையுமுடைய ஒருவனைப் போல, பெரும பழைய நிலைமையையுடைய பெரிய மலையிடத்து விடரின்கண் அரிய உச்சிக்கண் கொள்ளப்பட்ட சிறிய இலையினையுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெருதற்கரிதென்று கருதாது பெறும் பெரும்பேற்றினை எமக்குக் கூருது நின்னுள்ளே அடக்கிச் சாதலொழிய எமக்கு அளித்தாயாதலால் நிலைபெறு வாயாக" என்னும் பொருள்பட,

வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித்தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால் புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணி மிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது

*ஆதல் நின்னகத் தடக்கிச்*
*சாதல் நீங்க எமக் கீந் தனையே.*

என்று பாடி மன்னனுக்கு வாழ்த்துரைத்தார்.

ஒளவையார் அதியமானிடத்தில் மிகுந்த மதிப்பு வைத்து வாழ்ந்து வந்தார். அதியமானும் அவரிடத்தில் மிகுந்த மதிப்பு வைத்து வாழ்ந்து வந்தான். அவனுடைய குடையைப் பற்றியும் அருளைப் பற்றியும் வீரத்தைப்பற்றியும் ஒளவையார் புகழ்ந்து பாடியுள்ளார்.

## தமிழறி வுறுத்தல்

அதியமானுடைய தவமகன் பெயர் பொகுட்டெழுனி. அவன் கல்வியும் வில்வித்தை முதலியவையும் கற்றறிந்தான். அவனுக்கு ஒளவையார் தமிழ் இலக்கணங்களையும் இலக்கியங்களையும், அறம் பொருள், இன்பங்களின் இயல்பையும் கற்பித்தார். அவனும் நன்குகற்றறிந்தான். அவனுக்கு ஒளவையார் அருந்தமிழ் இயல்பை எடுத்துரைக்க எண்ணினர். உலகின்கண் புகழே நிலைத்து நிற்பது. புகழை ஒருவனுடைய வலிமை எடுத்துரைக்கும். அவனுடைய கொடையும் எடுத்துரைக்கும். உலகமும் எடுத்துரைக்கும். தமிழும் எடுத்துரைக்கும். இந்நான்கில் தமிழே சிறந்தது. முதல் மூன்றும் ஒருவனுடைய புகழை எடுத்துரைத்தாலும் அவற்றால் எடுத்துரைக்கும்புகழ் சில பகலே நிலவுலகில் நிற்கும். தமிழ் மொழி எடுத்துரைக்கும் புகழ் பலகாலம் பாரிடை நிலவும். மேலும் அது அன்னையையும் தந்தையையும் அழைப்பதற்கு

உதவுகிறது. தன்னையும் அறிவிக்கும்; பிறரையும் அறிவிக்கும். நன்மைகளையும் தீமைகளையும் நமக்கு எடுத்துரைக்கிறது. பழமையான மொழிகள் என்று சொல்லப்படும் வடமொழி, இலத்தீன், கிரீக்கு, ஈபுரு முதலிய மொழிகளினும் பழமை வாய்ந்தது. பழமை வாய்ந்த தமிழ்மொழி பழமை வாய்ந்த நிகழ்ச்சிகளைப் பிற்காலத்தார்க்கு எடுத்துரைக்கிறது. எடுத்துரைக்கும்பொழுது, தன்னை அணிகளால் அழகுபடப் பாடிய புலவர்களைப்பற்றியும் அப்புலவர்களுக்குப் பொருள் முதலியன உதவிய அரசர் முதலியோர்களையும் கூறும். பிறர் புகழை எடுத்துரைப்பதில்லை. உலகத்தில் பிறந்தவர் கணக்கற்றவர். இறந்தவர்களும் கணக்கற்றவர். முன்னோரில் எவர் இப்பொழுது இருக்கின்றனர். முன்பு பிறந்திறந்த பல்லோருள்ளும் நம் தமிழ் மொழி எடுத்துரைக்கும் சிலரையே நாம் அறிகிறோம். பிறரை நாம் அறிய முடியவில்லை. ஆகையால் இளவரசே, தமிழ் மொழியில் பற்றுவை. தமிழ் மொழியைப் பேணு. தமிழ்ப்புலவர்களை நீ ஆதரி என்று அவனுக்கு அறிவுறுத்தினர். அவனும், அவற்றைக் கேட்டு மகிழ்ந்து அங்ஙனமே நடந்து வந்தான். ஒளவையாரையும் நன்கு பேணி வந்தான். கற்பன கற்றறிந்த பொகுட்டெழினியைப் புதல்வராகப் பெற்றதும், மாண்பிற் சிறந்த வடிவார் குழலியை மனைவியாகப் பெற்றதும், அறிவிற் சிறந்த ஒளவையாரை அவைப் புலவராகப் பெற்றதும், நமது தவமே யாகும் என்று அதியமான் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

# காரியோடு போர் புரிதல்

ஒருநாள் அதியமானிடம் ஓரொற்றன் வந்தான். வணங்கி நின்று, மன்னவ! கோவலூரைக் காவல் செய்யும் காவலராகிய காரிமன்னர் தங்களை முன் போல் மதிப்பதில்லை. இப்பொழுது தங்களைப் பழித்துப் பேசுகிறார். தம் நாட்டின்மேல் படையெடுத்து வரின், வரும் மன்னரை மாய்ப்பேன், என்றும் பேசுகிறார் என்று சொன்னான். அவன் சென்றபின் வேறிரண்டு ஒற்றர்கள் வந்து அங்ஙனமே விளம்பிச் சென்றனர். மன்னன் சினங்கொண்டான். காரியோடு போர்செய்து அடக்கக் கருதினான். படைகளைத் திரட்டுவதற்குப் பறையறையக் கட்டளையிட்டான். பறையறையப்பட்டது. பறையொலி கேட்ட மறக்குல மங்கையர்களும் வீரர்களும் மகிழ்ச்சியடைந்தார்கள். வீரர்கள் போர்க் கோலம் பூண்டு புறப்பட்டார்கள். மங்கையர்கள் வழியனுப்பினார்கள்

கரியெரிந்து மீளெனக்
கணைகொடுத் தனுப்புவார்.
பரியெரிந்து மீளெனப்
படைகொடுத் தனுப்புவார்.

வரிவிலேந்தி முன்னம் நண்ணும்
மள்ளரை எதிர்க்கையில்
வெரி நிடின் வீசாதே யென்று
வேல்கொடுத் தனுப்புவார்,

மங்கையர் கொடுத்த படைகளை மகிழ்ந்து பெற்றுக் கொண்டு வீரர்கள் அரண்மனையை அடைந்தார்கள். அரசன் நால்வகைப்படைகளையும் முன்னால் நடத்தி

அவர்களுக்குப் பின்னால் புரவிமீ திவர்ந்து போனான். ஔவையாரும் அரசனோடு சென்றார். மக்களும் புலவர்களும் வாழ்த்தி வழியனுப்பினர். பறைகள் முழங்கின. சங்குகள் ஆர்த்தன. தூளிகள் எழுந்தன. வீரர்கள் கூற்றம் போன்று நடந்து கோவலூரை அடைந்தார்கள்.

காரி மன்னன் படை வருகையை அறிந்தான். தன் படைகளை அனுப்பித் தானும் போர்க்களம் புகுந்தான். அதியமான் படையும் காரிமன்னன் படையும் போர் புரிந்தன. வீரர்கள் வெகுண்டு ஒருவரோடொருவர் போர் புரிந்தனர். களிறும் களிறும் கனன்று முட்டின. பரிகள் பாய்ந்து பகைவரை மிதித்தன. தேர்கள் விரைந்து சென்று தெவ்வரை மாய்த்தன.

வேலும் வாளும்சென்று சென்று
வீரர் மார்பு பாய்யுமால்.
கோலும் எஃகும் ஏகி ஏகிக்
கொய்யுளைமா வீழ்த்துமால்.

காலும் கையும் வீழ யானை
கல்லெனப் புரண்டிட
மேலும் மேலும் வாளை ஏவி
வெட்டு வார்பல் வீரரே.

தாள்கள் வீழும் கைகள் வீழும்
தார்பு னைந்த மார் பொடு
தோள்கள் வீழும் சென்னி வீழும்
சோறி வீழும் யானையின் கோடு வீழும்
நின்று சென்று மீளிகள்
வாள்க ளேந்தி மாறு கொண்டு
மாய்க்கு மக்க ளத்தினே.

அதியமான் வில் முதலிய படைகளை எடுத்துக் கொண்டு போர்க்களம் புகுந்தான். அவன் வருகையை அறிந்த காரியும் அவன் வீரரும் அவனோடு போர்புரிந்தனர். அவன்மேல் வேலை எறிந்தார்கள். வாளை வீசினார்கள். அம்புகளைத் தொடுத்தார்கள். அதியமான் அவற்றைத் தன் கேடயத்தால் தடுத்தான். வில்லை எடுத்தான். அம்புகளை இணைத்தான். என் அம்புகளின் சுவையைக் காண்மின் என்று பகைவர்மேல் ஏவினான். வில்லை எடுத்ததைப் பகைவர் அறிந்திலர். அம்புகளை ஏவுவதைப் பகைவர் அறிந்திலர். எதிரே நிற்பவரைக் கீழே வீழ்த்துவதை அறிந்திலர். பகைவர்கள் தங்கள் தங்கள் உடம்பின் மேல் பட்டுப் புண்படுத்துவதையும் ஊடுருவிச் செல்வதையும் அனுபவித்தறிந்தார்கள். எதிர்த்து நின்று போரிடச்சென்ற காரி மன்னனுடைய வீரர்கள் அஞ்சினார்கள். வில்லையும் வேலையும் பிறபடைகளையும் எறிந்துவிட்டு அவரவர் ஏறிச்சென்றயானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் செலுத்தி விரைந்து களத்தை விட்டகன்றனர். காரி மன்னனும் அதியமான் அம்புகளால் புண்பட்டு எதிர்க்கும் ஆற்றலின்றித் தன் காரிக் குதிரையிவர்ந்து களத்தைவிட்டகன்றான்.

வீரர்கள் ஆர்த்தெழுந்தார்கள். பறையொலியும் பணிலவொலியும் காதுகளைச் செவிடு படுத்தின. அதியமான் வாகைசூடினான். ஔவையார் அவனருகே வந்தார், போரை விரும்பி ஒலிக்கும் ஓசை பொருந்திய முரசினையுடைய ஏழரசரோடு பகைத்து மேற்சென்று போரின் கண் வென்று நின்வலியைத்

தோற்றுவித்த அன்றை நாளும் பாடுபவர்க்குப் பாட அரியை; நீ மாறுபாடு மிக்க கோவலூரை அழித்து வென்று பிறவும் அரண்களை அழிக்கின்ற ஆழியைத் தாங்கிய நினது தோளை இற்றை நாளும் பரணன் பாடினன் என்று அவனைப் புகழ்ந்து பாடினர். அதியமான் காரி மன்னனுடைய கோவலூரைத் தன் வசப்படுத்தினன். சில நாள் அவ்வூரிலிருந்து ஆவன செய்தபின் அவன் தகடூர் வந்து சேர்ந்தான்.

தகடூர் வந்து சேர்ந்த மன்னன் முகத்தினும் மார்பினும் விழுப்புண் பட்ட வீரர் · தலைவர்களை அழைத்தான். வீரர்களை அழைத்தான். பரிசில் பல வழங்கினன். பாவலர்களை அழைத்தான். பாணர்களை அழைத்தான். ஔவையார் பரணர் முதலிய பெரும் புலவர்களைஅழைத்தான். அவர்களுக்குப் பொன்னும் பூணும் கொடுத்தான். அதியமான் தம் நாட்டிற்குப் பல நன்மைகள் செய்தும், தமிழ் மொழியை பேணி வளர்த்தும் பாண்டிய மன்னனும் சோழ மன்னனும் தங்களுக்குப் படைத்துணை வேண்டும் பொழுது சென்றுஅவர்களோடு அவர்கள் மற்றரை வென்றும், தன்னுட்டினுக்கு அணித்தா யிருக்கின்ற கொல்லி மலைக்குத் தலைவனுகிய வல்வில் ஓரியினேடு உறவு பூண்டும் வாழ்ந்து வந்தான்.

## கொல்லிக் கூற்றப் போர்

போர்க் களத்தில், புறமுதுகு காட்டி ஓடிய காரி மன்னன் காடு கடந்தும் நாடு கடந்தும் வானுற உயர்ந்த மலைகளடர்ந்த சேர நாட்டை அடைந்தான்.

சேர நாட்டின் ஒரு பகுதியைப் பெருஞ்சேர லிரும் பொறை என்னும் மன்னன் ஆண்டு கொண்டிருந் தான். அவன் பெரும் படையை யுடையவன். புல வர்களைப் பேணும் புகழையுடையவன். அவனைக் காரி மன்னன் அடைந்தான். அதியமான் தன்னூ ராகிய கோவலூரின் மேல் படையெடுத்து வந்த தையும், அவன் தன்னை வென்று அவ்வூரையும் நாட் டையும் கைப்பற்றியதையும் அவனிடம் எடுத்தியம் பினன். இரும்பொறை தன் அமைச்சர்களை அழைத் துச் சூழ்வன சூழ்ந்தான். அமைச்சர்கள் அதியமான் வலிமையையும் அவன் துணை வலிமையையும் ஆராய்ந் தார்கள். ஆராய்ந்து தங்களுக்குப் பகைவனும் கொல்லி மலைக்குத் தலைவனுமாகிய வல்விலோரியோடு முதலில் போரிடின் அவன் அதியமானைப் படைத்துணை கழைப்பான். அவ்விருவரையும் கொல்லிக் கூற்றத் தில் போரிட்டு வெல்வது எளிது. அதன்பின் அதிய மானுக்குரிய தகடூரின் மேலும் படையெடுத்துச் செல் லலாம் என்றனர்கள். அங்ஙனமே இரும்பொறையும் காரியும் பேசி முடிவு செய்தனர்.

இரும்பொறை தன் வீரர்களை அழைத்துக் கொல் லிக்குச் சென்று ஓரி மன்னனுடைய ஆனிரைகளைக் கைப்பற்றி வருமாறு கட்டளையிட்டான். வீரர்கள் அரசன் கட்டளைப்படி கொல்லிக் கூற்றத்தை அடை ந்து ஆனிரைகளைக் கைப்பற்றி மீண்டனர். அரசன் வள்ளுவனை அழைத்துக் கொல்லிக் கூற்றத்திற்குச் சென்று போர்ப் பறை அறையுமாறு கட்டளையிட் டான். வள்ளுவன் சென்றான். "பெருஞ்சேர லிரும்

பொறை மன்னர் கொல்லிக் கூற்றத்தின் மேல் படை எடுக்க வருகிறார். நோயுடையவர்களும், நோன்பியற்றும் தவசிகளும் பெண்பாலாரும், பிள்ளையில்லாரும் காவலிடங்களை அடைவார்களாக. ஆக்களையும் அப்புறப்படுத்துக'' என்று பறை யறைந்து மீண்டான்.

போர் வீரர்கள் பொங்கி யெழுந்தார்கள். ஆரவாரித்து அகம் மகிழ்ந்தார்கள். வில்லும், வாளும் வேலும், கணையும் எடுத்தார்கள். பரிகள் பண் அமைக்கப் பெற்றன. கரிகள் மணிகள் பூட்டப்பட்டன. தேர்கள் அலங்கரிக்கப்பட்டன. பதலைகளும் பம்பைகளும் முரசங்களும் பேரிகைகளும் முழங்கின. விண்மதிகள் மண்ணிடை ஊர்ந்து சென்றாற்போல வெண் குடைகள் சென்றன. மின்னற் கொடிகள் அசைந்து செல்வனபோன்று மன்னவன் விற்கொடிகள் முன்னர் சென்றன. காலாட் படையினர் கைகளிற் படைகள் ஏந்தி, அலைகடல் ஆர்த்துச் செல்வது போன்று ஆர்த்துச் சென்றார்கள். கோவலூர்க் காரி மன்னன் தன் காரிக் குதிரைமீது ஏறிச் சென்றான். இரும்பொறை மன்னன் வஞ்சி சூடித் தேரி வர்ந்து சினந்து சென்றான். புலவர்கள் வாழ்த்தினர். மாடமிசையிருந்த மங்கையர்கள் மன்னன் வாகை சூடுக என்று மலர் மாரி பொழிந்தனர்.

நாற் படைகளும் நடந்து சென்றன. நகர மாந்தர்கள் படைகளுடைய செல்கையைப் பார்த்துப் பலர் புகழ்ந்தனர். ஆர்த்துப் பலர் அக மகிழ்ந்தனர். வாழ்த்திப் பலர் வழியனுப்பினர். இரும்பொறை மன்

னன் வில்லெடுத்தான். போர் களத்தில் எத்தனை பேர் மாய்வாரோ? வேங்கை வெகுண்டெழுந்தால், மானி னம் எங்ஙனம் எதிர்த்து நிற்கும்? என்று மன்னனைப் பலர் புகழ்ந்தார்கள். மன்னன் வல்விலோரி யோடு போர்புரியச் செல்கிறான். நாம் அவனுக்குரிய கொல்லி மலையோடு போர் புரிவோம் என்று எண்ணி மலை நாட் டிலுள்ள மலைகளெல்லாம் கடந்து செல்வன போன்று மத யானைகள் நடந்து செல்கின்றன காண்மின் என்று பலர் யானை படைகளைப் புகழ்ந்தார்கள். பாரில் வாழும் பரிகளில் ஓரி மன்னனுடைய ஓரிக் குதிரையும் காரி மன்னனுடைய காரிக் குதிரையும் சிறந்தவை யாகும். இவை இப்போரில் ஒன்றோடொன்று போரிடும். நாம் சென்று காண்போம் என்று நடப்பன போன்று பரி கள் படர்வதைப் பார்மின் என்று பலர் குதிரைகளைப் புகழ்ந்தனர். போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடா மல் விழுப்புண்பட்டு மண்ணிடை வீழ்ந்திறந்த மற வர்களை விண்ணுலகினுக்கு ஏற்றிச் செல்லும் விமா னம் போன்று தேர்கள் செல்கின்றன என்று தேர் களைப் பலர் சிறப்பித்துரைத்தனர். வில்லில் வல்ல வீரன் ஓரி அடிக்கடி வேட்டையாடிப் பல விலங்குகளை யும் மாய்த்தான். இன்று அவனோடு போர் புரிய வேண்டுமென்று பல வேங்கைகள் வெகுண்டெழுந் தாற் போன்று வீரர்கள் செல்வதைக் காண்மின்கள் என்று வீரர்களைப் பலர் புகழ்ந்தார்கள். கொல்லிக் கூற்றத்தினை நோக்கி நாற்பெரும் படையும் நடந்து சென்றன.

இரும்பொறை தன் நாட்டின்மேல் படை எடுத்து வருவான் என்று ஓரி உறுதியாய் எண்ணிக்கொண்டிருந்தான். தனக்குப் படையொடு வந்து உதவும் படித் தூதுவனை அனுப்பினான். அவனும் தகடூரை அடைந்து அதியமானைக் கண்டு, இரும்பொறை வருகையையும் அவன் எண்ணத்தையும் விரித்துரைத்தான். ஒற்றர்கள் காரி மன்னனுடைய வாழ்க்கையைப்பற்றியும் இரும்பொறையினுடைய எண்ணத்தைப்பற்றியும் எடுத்தியம்பிய உரைகளையும் அதியமான் ஆராய்ந்தான். இருபகைவர்களும் போர் புரிந்து ஓரி மன்னனை வென்றபின் தன்னோடும் போர்புரிய வருவார்கள் என்று எண்ணினான். எண்ணினவன் தன்னுடைய நண்பர்களாகிய பாண்டியனிடமும் சோழ மன்னனிடமும் தூதுவரை அனுப்பிப் பெரும் படைகளைப் பெற்றான். பின்பு போர் நிகழ்ச்சியைப் பறை சாற்றித் தன்னாட்டினர்களுக்குத் தெரிவித்தான். பறை யொலியை ஆடவரும் மகளிர்களும் கேட்டு அகமகிழ்ந்தார்கள்.

அரசன் இருக்கும் அரண்மனையை நோக்கி வீரர்கள் சென்றனர். சிலர் வேலும் வாளும் ஏந்திச் சென்றார்கள். சிலர் வில்லும் அம்பும் கொண்டு ஏகினார்கள். சிலர் ஈட்டியும் மழுவும் எடுத்து நடந்தனர். சிலர் தோளே துணையாகச் சென்றனர். சில வீரத் தாயர் தங்கள் சிறுவர்களுக்கு வெள்ளுடை உடுத்தி மணமலர் முடித்து வாளும் வேலும் கொடுத்துச் செல்க என்று செருக்களத்திற்கு அனுப்பினர். பிள்ளாய்! உன்னை நான் பெற்றெடுத்து வளர்த்து

என் கடனை முடித்தேன். உன் தந்தையார் உனக்கு கல்வி கற்பித்து அவர் கடனை முடித்தார். உன் அரசன் போர்த்தொழில் கற்பித்துத் தன் கடனை முடித்தான். நீ பகைவனை வாளால் எறிந்து உன் கடனைச் செய் என்று தன் தனி மகனைக் களத்திற்கு அனுப்பினுள். பிள்ளாய்! உன்னைப் பெற்றெடுத்து உன் முகம் நோக்கி முதன் முதல் பெரு மகிழ் வடைந்தேன். பின்பு உன் குதலை மொழியைக் கேட்டு உள்ளங் குளிர்ந்தேன். அதன் பின் நீ கல்வி கேள்விகளிற் சிறந்தவன் என்று சான்ருேர் கூறக் கேட்டுக் களிப் படைந்தேன். இன்று போர்க்களஞ் சென்று யானை எறிந்தாய் என்னும் உன் புகழ்ச்சியைச் செவிகளால் கேட்பேனுயின் உவகை எய்துவேன் என்று ஒரு தாய் தன் மகனைச் செலுத்தினுள். மக்கட் பிறப்பைப் பெறுவது அரிது. மக்களாய்ப் பிறப்பினும் மறக்குடியில் பிறப்பது அரிது. மறக்குடியிற் பிறப்பினும் வலிய உடம்பைப் பெறுவது அரிது. வலிய உடம்பு பெறினும் விற்பயிற்சி கொள்வது அரிது. விற்பயிற்சி கொள்ளினும் போர்க்களம் புக்கு விழுப்புண் படுதலும் வீரர்களை வெல்லுதலும் அரியனவாம் என்று ஒரு தாய் தன் மகனை அனுப்பினுள்.

வீரர்களிற் சிலர் மன்னனுடைய கட்டளையைச் செய்து முடித்து வருகிருேம் என்று தங்கள் தாயாரிடத்தும் மனைவியரிடத்தும் கூறி விடை பெற்றுச் சென்ருர்கள். சிலர் தங்கள் மக்கள் முகங்களைப் பார்த்துச் சென்றனர். சிலர் தங்கள் குடியிற் பிறந்த வீரர்களை வணங்கிச் சென்ருர்கள்.

அதியமான் நெடுமான் அஞ்சி பொய்கையில் நீராடிப் பட்டுடை உடுத்து, மணமலர் முடித்துப், படைகள் எடுத்துத் தேரில் ஏறினன். புலவர்கள் வாழ்த்தினார்கள். போர் முரசங்கள் அதிர்ந்தன. சங்கங்கள் ஆர்த்தன. நெடுங்கோளன் என்ற பெயரையுடைய படைத்தலைவன் படைகளை நடத்திச் சென்றான். பாண்டியனுடைய படைகளும் சோழன் படைகளும் அப்படைகளோடு சென்றன. படைகளது செல்கையினால் தூளிகள் விண்ணில் எழுந்தன. நிலத்தில் கிடந்த கற்கள் தூளாயின. காடுகள் அழிந்து வெளியாயின. பலகாதம் கடந்தார்கள். அதியமானும் வீரர்களும் கொல்லிக் கூற்றத்தை அடைந்தார்கள். வல்விலோரி அவர்களை வரவேற்றான்.

பெருஞ்சேர லிரும்பொறையும் காரி மன்னனும் தங்கள் படைகளைச் செலுத்திக் கொண்டு கொல்லிக் கூற்றத்தை அடைந்தார்கள். ஓரி மன்னனும் அதியமானும் தங்களுடைய பெரும் படைகளோடு பகைவர்களை எதிர்த்தார்கள்.

இருவருடைய படைகளும் ஒன்றோடொன்று எதிரும் இரு பெருங்கடல் போன்று எதிர்ந்து போரிட்டன. இரு பக்கங்களி லிருந்தும் வீசப்பட்ட வேல்கள் எங்குங் காணப்படாத நீரிலிருந்து எரியும் நெருப்புப் போன்று இலங்கின. கொடிகள் கடலில் வீசும் மின்னல் போல் விளங்கின. கரிகள் அங்கு காணப்படும் முகில்போல் காட்சியளித்தன. வீரர்கள் எதிரிகளை வெட்டு வெட்டு வென்று கூறி வெகுண்டு

போரிட்டனர். அடி அடி என்று ஆர்த்துப் போரிட்டனர். கைகளை ஒடி ஒடி என்றுரைத்து மலைந்தனர். பகைவர் குருதியைக் குடி குடி யென்று கூறி முன் நடந்தனர்.

வில் வீரரும் வில் வீரரும் வெகுண்டு போரிட்டனர். வாள் வீரரும் வாள் வீரரும் மாறு கொண்டு மலைந்தனர். பரியும் பரியும் பகைத்தன. கரியும் கரியும் கனன்றன. வீரர்களிற் சிலர் யானையை வீழ்த்தி அப்பால் நடந்தனர். சிலர் பரிகளை மாய்த்துப் பகைவரை அடைந்தனர். சிலர் தேரை வீழ்த்திச் சினந்து திரிந்தனர். சிலர் வீரரை வீழ்த்தி வெகுண்டு செருக்கினர். சிலர் கைகளிலுள்ள வேல்களைக் கரிகளின் மேல் எறிந்து விட்டு மெய்யில் பாய்ந்திருந்த வேலைப் பிடுங்கி வீரர்கள் மேல் ஓச்சினார்கள்.

கண்ணேமென எண்ணிலர் காமருடல்
புண்ணுமென எண்ணிலர் பொன்றிடின்மெய்
மண்ணுமென எண்ணிலர் வாள்வயவர்
நன்னுருடல் வெட்டிநடந்தகல்வார்.

சினந்தார்தமை வாளினிற் சீவுதலை
பனங்காயெனப் பாரிடை வீழும் உளம்
கனல்வெங்கரிக் கால் உரல்போலுருளும்
முனங்கை பனந்துண்டில் முரிந்துவிழும்.

சிலைவல்லவர் சென்னியின் மேல்நடந்து
புலிபோல் விரைந்தெங்கணும் போம்புரவி
மலைசெல்வது போற்செலும் மால்களிறு
கொலைவேல்மற மள்ளரைக் கொன்று செலும்.

MADURA TAMIL SANGAM

உடலெங்கணும் வெங்கணை யுட்புகலின்
மடல்வன்பனை போலுவர் வாள்மறவர்
அடர் செங்கிணைத் தாளூறு நீள்வலையாம்
மிடல் சேரொரு கையுடை வேழமரோ.

போர்க்களத்தில் வீரர்கள் தங்கள் வில்லில் இணைத்துத் தொடுத்த அம்புகள் விண்ணி லிருந்து விழும் மழைத்துளிகள் போல் காணப்பட்டன. வேல்கள் மின்னல் போல் காணப்பட்டன. சங்கொலி இடியொலி போன்றிசைத்தன. குதிரைகளின் செல்கை கடுங்காற்றைப் போன்றிருந்தது. களத்தில் ஓடும் செங்குருதி செம்புனலைப் போன்றிருந்தது. பருந்தும் காக்கைகளும் பிணங்களைத் தின்று குருதி நீராடின. கால்கள் வெட்டுப் பட்டும், கைகள் ஒடி பட்டும். தோள்கள் அறுபட்டும் பலர் நிலத்தே கிடந்தனர். களிறுகளும் இவுளிகளும் மாய்ந்து கிடந்தன.

ஓரி மன்னன் தன் ஓரிக் குதிரையி லிவர்ந்தும் காரி மன்னன் தன் காரிக் குதிரையி லிவர்ந்தும் செருக்களம் புகுந்தனர். அவர்கள் ஏறிய குதிரைகள் நிலத்தில் பாய்ந்து செல்லும். விசும்பில் தாவிச் செல்லும். கண்களுக் கெட்டும் தொலைவில் வரும். நொடிப் பொழுதில் மறைந்து விடும். இடது பக்கத்தில் செல்வன போன்றிருக்கும் வலது பக்கத்தில் ஓடும். அக் குதிரைகளி லேறிய மன்ன ரிருவரும் தங்கள் பகைவர் மேல் கணைகளை எய்வார்கள். வேலை ஓச்சுவார்கள். வாளை வீசுவார்கள். ஈட்டிகளால் குத்துவார்கள். வீரர்களும் அவர்களைக் கண்டு வெருண்டார்கள். பெருஞ்சேர லிரும்பொறையும் அதியமானும் தங்கள் பரியி

லிவர்ந்து செருக்களத்துட் சென்றனர். வீரர்களோடு போர் புரிந்தார்கள். எதிர்ந்தவர்களை விண்ணுலகத் தினுக் கேகுவித்தனர். அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் கண்டனர். ஒருவர் மேலொருவர் படை களைச் செலுத்தினர். இரு புலிகள் தம்முட் பகைத் துப் பொருதாற் போன்று அவ்விரு வேந்தரும் வெரு வாது பொருதனர்.

ஓரியும் காரியும் ஒருவரை யொருவர் கண்டனர். ஒருவர் மேல் ஒருவர் படைகளை உய்த்தனர். தம் முன் வரும் படைகளைக் கேடயத்தினால் தடுத்து வாளையும் வேலையும் செலுத்தினர். வெல்வேன் என வீரம் பேசினர். மார்பும் முகமும் புண் பட்டன. குருதி அருவிபோல் உடம்பிலிருந்து வீழ்ந்தது. காரி யினுடைய வேலொன்று ஓரி மன்னனுடைய உடம் பிற் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. மண்ணில் வீழ்ந்து மன்னன் மாய்ந்தான். நில மடந்தை தன் தவமகனைத் தன் மடியில் கிடத்தினாள். தமிழ் மடந்தை அவ்வீர வேந்தனை விண்ணுலகம் சேர்த் தாள்.

ஓரி மன்னன் மாய்ந்த செய்தியைக் கேட்டுக் கொல்லிக் கூற்றத்தினர் மனம் வருந்தினர். படை களைக் கீழே எறிந்தனர். புறங்காட்டிப் போர் களத்தை விட்டு அப்புறம் போயினர்.

காரி மன்னன் உள்ளங் களித்தான். புலிபோல் ஆர்த்தான். வெற்றிச் சங்கமும் இடிபோல் முழங்கின. அம்மன்னன் தன்னைப் பின்தொடர்ந்து ஆரவாரித்து

வரும் வீரர்களோடு அவ்விடத்தை விட்டகன்று பெருஞ்சேர லிரும்பொறையும் அதியமானும் போரிடும் இடத்தை அடைந்தான். பெருஞ்சேர லிரும்பொறையோடு சேர்ந்து அதியமானை எதிர்த்தான். அதியமானும் அஞ்சாது நின்று பகைவர் இருவரோடும் போரிட்டான். படைகளை ஏவினன். புண் பட்டும் போரிட்டான். பகைவரிருவரும் பெரும்படையோடு எதிர்த்ததனுல் அதியமான் போரிடுவதற் கஞ்சி புறங் காட்டினன்.

கோவலூர் மலையமான் திருமுடிக் காரியும் பெருஞ்சேர லிரும்பொறையும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர். தோள் புடைத் தார்த்தனர். வென்றி முரசம் முழங்கின. வீரர்கள் மன்னர்களைச் சூழ்ந்து ஆர்த்தனர். ஏத்தினர். வாழ்த்தினர்.

நிற்க, போர்க்களத்தைவிட்டு ஓடிய வீரர்களிற் சிலர் ஓரிமன்னன் மாய்ந்த செய்தியை அரசிக்கு அறிவித்தார்கள். அரசி அதனைக் கேட்டுக் கலங்கினுள். கலுழ்ந்தாள். கணவனைத்தேடி காரிகை களத்திற் கேகினுள். மானினம் வருந்தவும் மயிலினம் இனையவும் நடந்தாள்.

ஒருகணை வேட்டத் துய்க்கின்
உயிர்பல மண்ணில் வீழும்
பொருகளத் தேகின் யாவர்
புறமுது கிடா தார்? இன்று
மருவலர் கணையால் எங்கோ
மாண்டனன் என்னின் என் நெஞ்சு
உருவுமால் அவர்க்கியா னன்றோ
உடம்பெனப் புலம்பிச் செல்வாள்.

சென்றவள் களத்தை அடைந்தாள். கணவன் புண்பட்டு மாய்ந்த உடம்பைக் கண்டாள். மின்னற் கொடி வெற்பிடை வீழ்ந்தாற் போன்று அரசி அவ் வுடம்பின்மீது வீழ்ந்தாள். முகத்தோடு முகத்தைச் சேர்த்தாள். நெட்டுயிர்ப்புற்று அழுதாள். பாம்பு தன் உரியைக் கழற்றினாற் போன்று அரசி தன் மெய்யை அகற்றினாள். தன் துணைவனை நாடி அவன் சென்ற வான் நெறிவழியே தொடர்ந்து சென்றாள்.

கொல்லிக் கூற்றத்தார் ஓரி மன்னனையும் உயி ரிழந்த அவன் மனைவியையும் ஓரிடத்தே புதைத்து அவர்களுக்குக் கல் நட்டு விழா வெடுத்து வணங் கினார்கள்.

## தகடூர்ப் போர்

பெருஞ் சேர லிரும்பொறையும் மலையமான் திருமுடிக் காரியும் ஓரி மன்னனுடைய கொல்லிக் கூற் றத்தைத் தம் ஆளுகைக்குள் ஆக்கிச் சின்னாள் அங்குத் தங்கியிருந்தனர். பின்பு போருக் காற்றாது புறங் கொடுத்தோடிய அதியமானை அவனிருக்கும் தகடூர் போய் வெல்ல எண்ணி, நாற்பெரும் படைகளோடு புறப்பட்டனர். சில சான்றோர் பெருஞ்சேர லிரும் பொறையை அடைந்து, "மன்ன" மாறுகொண்ட மாற்றாரை எதிர்த்துப் போரிட்டு அவர் நாடுகளைக் கைப்பற்றுதல் மன்னர்களுக்குப் புகழ்ச்சியை உண் டாக்குவதேயாகும். புகழ்ச்சியை உண்டாக்கு வதா யிருப்பினும், ஒரு குடியில் பிறந்த நீயும் அதிய

மானும் ஒருவர்க்கொருவர் பகைத்துப் போரிடுவது உயர்வாகாது. போரிடினும் நீவிர் இருவரும் வென்றீர்கள் என்ற இசையைப் பெறமாட்டீர்கள். இருவருள் யாவர் தோற்பினும் அத்தோல்வி உங்களுக்கு இகழ்ச்சியை உண்டாக்கும். ஆகையால் நீ அதியமானோடு போர்புரியச் செல்லுதலை ஒழிவாயாக" என்று கூறினர். இரும்பொறை அவருரையை ஏற்றுக் கொள்ளாமல் படைகளுடன் தகடூரை அடைந்தான்.

அதியமான் தன்னை வென்ற பகைவர்கள் தகடூரின்மேல் படையெடுத்து வருதலை யறிந்து கோட்டை வாயில்களை அடைத்து அக்கோட்டையினுள் படைகளோடு தங்கியிருந்தான். மதிலிலும் வேல்களை எறியும் பொறிகளையும், கற்களை எறியும் பொறிகளையும், நெருப்புகளைக் கக்கும் பொறிகளையும், பிறபொறிகளையும் அமைத்துக் காவல் செய்திருந்தான்.

பகைவர்கள் தகடூரை நெருங்கினார்கள். காவற்குளங்களையும் காடுகளையும் சிதைத்தார்கள். ஊர்களை கொள்ளையிட்டனர். காவல் மரத்தை வெட்டினார்கள். தகடூரை அடைந்து உழிஞை சூடி மதிலை முற்றுகையிட்டனர். நொச்சி மாலை புனைந்து மதிலைக் காவல் செய்து கொண்டிருந்த அதியமானும் அவன் வீரர்களும் பகைவர்கள் தங்கள் அகழ்களையும் மதில்களையும் அழிக்காதபடி எதிர்த்துப் போரிட்டார்கள். தாங்கள் மதிலில் அமைத்து வைத்திருந்த பொறிகளையும் எதிரிகள்மேல் ஏவினார்கள்.

ஏவுவார் பொறியைச் சில்ல
எஃகெறிந் தெதிருமாற்றுர்
ஆவியைக் கவரும் சில்ல
அம்பெறிந் துடலை வீழ்த்தும்
வாவுதிண் மாவைக் கல்லால்
மாய்த்திடும் சில்லதீயைத்
தூவிடும் செம்மைக் காய்ச்சித்
துருத்தியிற் செலுத்துஞ் சில்ல.

மதிலின் வெளியிலுள்ளவர்கள் அகழியைத் தாண்டுவார்களாயின், உள்ளேயுள்ளவர்கள் வேலை அவர்கள் மேல் வீசுவார்கள். அகழியிலுள்ள கெண்டை மீன்கள் பகைவர்களைப் பாய்வதுபோல் வேல்கள் அவர்கள் மீதுபாயும். அகழியையுங் கடந்து ஏணி சாத்தி மதிலைக்கடக்க முயலுவராயின், வாளை வீசி அவர்களை வாளுல குப்பர். இங்ஙனம் மதிலைக் காவல் செய்யும் நொச்சிப் படையும் மதிலைக் கைப் பற்றுவதற்குப் போர்புரியும் உழிஞைப் படையும் விடாது போர்புரிந்து கொண்டிருந்தன.

ஔவையார் மதிலின் அகத்தே தங்கி யிருந்தார். அதியமான் மதிலுக்கு வெளியே வந்து போர் புரியா மல் ஒடுங்கி இருப்பதை அறிந்தார். அங்ஙனம் ஒடுங்கி இருப்பது அறமன்று என்று நினைந்தார். "முரிந்த வளையை யொப்ப மலர்ந்த வெண்காந்தட்பூ இலை தழைத்த மல்லிகையுடனே நாறும் மலைச் சாரற் கண் மறத்தையுடைய புலி சீறின் எதிர் நிற்கவல்ல மானினமும் உளவோ? மயங்கிய ஆகாயத்திடத்தும் திசையின் கண்ணும் ஞாயிறு கொதித் தெழுமாயின்

செறிந்த இருளுமுண்டோ? பாரத்து மிகுதியால் பார் அச்சு மரத்தோடு வந்து தாக்கி உற இருத்தலின் நிலத்தின்கட் குளித்த பண்டத்தையுடைய சகடத்தினது ஆழ்ச்சியைப் போக்குதற்கும் புனல் கொழிக்கப்பட்ட மணற் பரக்கவும் கற்பிளக்கவும் நடக்கவல்ல மிக்க மனச் செருக்கினையுடைய கடாவிற்குப் போதற்கரிய துறையும் உண்டோ? இல்லையன்றே; அதுபோல, கணைய மரத்தை யொக்கும் முழந்தாளிலே பொருதிய பெரிய கையாகிய தப்பாத வன்மையைச் செய்யும் கையினை யுடைய வீரர்க்குத் தலைவ! பெரிய நிலத்தின்கண் நினது மண்ணைக்கொண்டு ஆர்க்கும் வீரரும் உளரோ நீ போர்க்களத்திற் புகின் இல்லையன்றே.''
என்னும் பொருள்பட

உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழுஞ்சாரல்
மறப்புலி யுடலின் மான்கண முளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளு முண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி செல்லிய
வரிமணல் ஞெமிரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ
எழுமரங் கடுக்குந் தாடோய் தடக்கை
வழுவில் வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே. புறம் - 90

என்னும் பாட்டைப்பாடி எடுத்துரைத்தார்.

ஔவையார் வீரவுரை அதியமானுடைய சினத்தை மிகுதிப் படுத்தியது. பற்களைக் கடித்து

நகைத்தான். அவன் விழிகளிலிருந்து நெருப்புப் பொறி தோன்றின. போர் புரியப் புறப்பட்டான். படைகளை அணிவகுத்தான். அடைத்த மதிற்கதவுகளைத் திறந்தான். நெடுங்கோளன் என்ற படைத்தலைவனையும் பெரும்பாக்கன் என்ற படைத்தலைவனையும் முன்னால் அனுப்பி அதியமான் அமர்க்களம் புகுந்தான்.

பெருஞ்சேர லிரும்பொறையும் காரி மன்னனும் தங்கள் படைகளோடு எதிர்த்தார்கள். வீரர்கள் தங்கள் தோள்களைத் தட்டி ஆர்த்தெழுந்தார்கள். ஒருவரோடொருவர் போர் புரிந்து வாளால் சிலர் தோள்களை வெட்டினார்கள். சிலர் தலைகளை வெட்டினார்கள். சிலர் கை கால்களை வெட்டினார்கள். சிலர் அம்புகளை எய்து பரிகளையும் கரிகளையும் வீழ்த்தினர். அம்புகள் பல கரிகளினூடும் பரிகளினூடும் பாய்ந்து பறந்து போகும். வாளைமீன்கள் பிறழ்வனபோல மறவர்களுடைய தோள்களில் வாள்கள் வீழ்ந்து பிறழும். ஞானிகள் இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்று தத்துவப் பொருள்களை ஆராய்ந்து ஆராய்ந்து அப்புறஞ் செல்வது போலக் கணை முதலிய படைகள் அப்பொருள்களோடு சென்று அப்புறம் அகன்று செல்லும். தம் எதிரே வரும் வீரர்கள் தலையின்மேல் குதிரைகள் கால்களை உயர்த்தி மிதிக்கும். குதிரைமீதேறிச் செல்லும் வீரர்கள் யானையினுடைய தலைகளை வெட்டி வீழ்த்துவார்கள். நெடுங்கோளன் என்ற படைத்தலைவன் பகைவரோடு போர் புரிந்து பலரைக் கொன்றான். காரியும் பிட்டன் என்ற படைத் தலைவனும் பெரும்பாக்கனோடும்

நெடுங்கோளனோடும் போர் புரிந்து அவர்களுயிரை வானுலகிற் குய்த்தனர்.

எண்ணி லாதவர் சென்னி யிழந்தவர்.
கண்ணி ழந்தவ ரோகணக் கற்றவர்.
வண்ண மார்பிழந் தாரும் வரம்பிலார்.
புண்ணு ருதவ் ரில்லையப் போரினே.

செருக்களம் புகுந்த அதியமான் சினந்து போர் புரிந்தான். என்முன் வந்தான்; என்முன் வந்தான் என்று மாற்றார் மனங் கலங்கும்படிச் சுற்றித் திரிந்தான். பலரோடு போர் புரிந்து அவர்களைப் பாரில் வீழ்த்திப் பெருஞ்சேர லிரும்பொறையைக் கண்டு அவனை அணுகினன். பகைவர் பலரையும் அம்பினால் வென்று திரிந்த இரும்பொறையும் அதியமானோடு எதிர்த்து போர்புரிந்தான். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் அம்புகளை ஏவினர். வேல்களை எறிந்தனர். வாள்களை வீசினர். இருவர் உடம்புகளின் மேலும் படைகள் பாய்ந்து புண்படுத்தின. புண்பட்ட வாய் தோறும் குருதி அருவிபோல் சொரிந்தது. இருவரும் இடைவிடாது படைகளை ஏவிக்கொண்டிருந்தார்கள். சேரலிரும்பொறை ஏவிய வேலொன்று மின்னலைப்போல் மிளிர்ந்து விரைந்து சென்று அதியமான் அஞ்சியினுடைய அகன்றமார்பில் பாய்ந்தது. மன்னன் மார்பில் பாய்ந்தவேல் அதனினின்றும் அகன்று பாணர் கையிலிருந்த மண்டைப் பாத்திரத்தினுள் புகுந்து பின் இரப்பார் கைகளில் வீழ்ந்து பாவலருடைய நாவிலும் பாய்ந்து சென்றது. ஆண்மையிற் சிறந்த அதியமான் வீழ்ந்தான். பார் மடந்தை

அம்மைந்தனை மார்புறத் தழுவி அவன் வீரத்தைப் புகழ்ந்தாள். அவனை அழைத்துச் சென்று அவனுக்கு வானுலகளித்தாள்.

அதியமான் மண்ணில் வீழ்ந்ததை வீரர்கள் அறிந்தார்கள். அவன் வீழ்ச்சிக்கு வருந்தினார்கள். அழுதார்கள். தங்கள் படைகளைக் கீழே எறிந்தார்கள். போர் புரிவதை விடுத்துப் புலம்பி வருந்தினார்கள். அதியமான் மாண்ட செய்தியை ஔவையாருக்குச் சிலர் கூறினர். அவர் அச்செய்தி கேட்டவுடன் மூர்ச்சித்து விழுந்தார். அவருடைய தாயரை போன்ற முகம் ஒளியிழந்தது. அவருடைய உடம்பு அனலிற்பட்ட தளிர்போன்று வாட்டமெய்தியது. பின்பு, "சிறிய அளவினையுடைய மதுவைப் பெறின் எங்களுக்குத் தருவன். அது கழிந்தது. பெரிய அளவினையுடைய மதுவைப்பெற்றுனயின் அதனை யாம் உண்டு பாட எஞ்சிய மதுவைத் தான் விரும்பி நுகர்வான். அது கழிந்தது. சோறு எல்லார்க்கும் பொதுவாதலால் சிற்றளவினையுடைய சோற்றின் கண்ணும் மிகப்பல கலத்தோடுங்கூட் உண்பன். அதுகழிந்தது. மிக்க அளவினையுடைய சோற்றின் கண்ணும் மிக்கப் பல கலத்தொடுங்கூட உண்பன். அது கழிந்தது. அன்போடு கூடிய ஊன்றடி உளதாகிய இடமுழுதும் எங்களுக்களிப்பன். அது கழிந்தது. அம்போடு வேல் தைத்து உருவுமிடமாகிய போர்க்களமுழுதும் தான் சென்று நிற்பன். அது கழிந்தது. தான் காதலிப் பார்க்கு மாலை சூட்டுதலான் நரந்தப் பூ நாறும் தன்னுடைய கையால் தான் அருளுடைமையிற் புலால்

நாறும் எம்முடைய தலையைத் தடவுவன். அது கழிந்ததே. அரிய தலைமையையுடைய பெரிய பாணரது அகலிய மண்டையின்கண் துளையையுருவி, இரப்பவர் கையுளும் தைத்துருவித் தன்றுற் புரக்கப்படும் சுற்றத்தாரது புல்லிய கண்ணிற் பாவை ஒளிமழுங்க அழகிய சொல்லை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியையுடைய அறிவினையுடையோர் நாவின்கண்ணேபோய் வீழ்ந்தது. அவனது அரிய மார்பத்தின்கண் தைத்த வேல். எமக்குப் பற்றுகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான் கொல்லோ? இனிப் பாடுவாருமில்லை. பாடுவார்க்கொன்று ஈவாருமில்லை. குளிர்ச்சியையுடைய நீரையுடைய துறையின்கண் பகன்றையினது தேனைப் பொருந்திய பெரிய மலர் பிறராற் சூடப்படாது கழிந்தாற் போலப் பிறர்க்கு ஒரு பொருளைக் கொடுக்காது மாய்ந்துபோம் உயிர் மிகப் பல' என்னும் பொருள்படப் பாடி வருந்தினர்.

வடிவார் குழலி தன் காதலனுகிய அதியமானுயிர் விண்ணுலகடைந்தது என்று கேள்விப்பட்டவுடன் தன்னுடைய துணையை யிழந்த பெண் அன்றில் போன்று வருந்தி அழுது புலம்பினள். பொகுட்டெழினியும் அமைச்சர்களும் தானைத் தலைவர்களும் குடிகளும் வீரரும் பிறரும் அரசன் மாய்வை எண்ணி எண்ணி வருந்தினர்கள். அரசி தன் காதலனைக் காணுதற் கெண்ணிக் களத்தை அடைந்தாள். காதலன் உடம்பைக் கண்டாள். கலுழ்ந்து அவன் உடம்பின் மேல் விழுந்து

ஆருயிரே போரேறே
அண்ணல் அகன்மார்பா
பாருலகெங் கணும்படர்ந்து
பணியார் உயிர்கவர்ந்து
கூருடைவெங் கணையெயிற்றுக்
கூற்றுவப்ப வூட்டிய நின்
பேருதவி தனைமறந்து
பிழையுனக்குப் புரிந்ததுவே
உன்முகங்கண் டழுதழுதிங்
குறுதுயர்கொள்ளுங் கொடிய
என்முகங்கண் டுரைபகரும்
எண்ணமிலை யெனின் எழினி
தன்முகங்காண் அருகிருந்து
தமிழிசைக்கும் ஔவை எழில்
மென்முகங்காண் இன்றெவரும்
வெம்பகைவ ராயினமோ?

என்று புலம்பி அழுது புரண்டாள்.

வீரரும் பிறரும் சந்தனம் முதலிய மணமுடைய கட்டைகளை அடுக்கி அரசன் உடம்பை அவ்வீமத்தின்மேல் வைத்து நெருப்பிட்டு எரித்தார்கள். அவன் அரும் புகழைக் கல்லில் எழுதி நட்டு மாலை சூட்டி அவனை வணங்கினார்கள்.

பெருஞ்சேர லிரும்பொறையும் காரி மன்னனும் பெருமகிழ்ச்சியோடு தகடூரைத் தன்னடிப்படுத்தினர். அதியமான் மகன் பொகுட்டெழினி வென்ற மன்னருக்குத் திறை செலுத்தித் தந்தையைப் போன்றே தகடூரை ஆண்டுவந்தான்.

THE MADURA TAMIL SANGAM